# சுதந்திரப் போர்

## மூன்றாம் பாகம்

## பிழறிய நாதம்

வடநாட்டில் பயிற்சி பெற்றுத் திரும்பி வந்த ஒரு 'சிதார்' வித்வான் அந்த வட்டாரத்தில் இருந்தார். பவானி அதை அறிந்தபோது, தானும் சிதார் வாத்தியம் கற்க விரும்பினாள். கல்கத்தாவிலே தோன்றாத ஆசை அவளுக்குப் பிறந்தகத்தில் தோன்றியதற்காக துரைசாமி வேடிக்கை செய்தபோது பவானி, "அண்ணாவிற்கு இஷ்டமிராது என்று நினைத்தேன். அண்ணா சொல்லாததை அப்பா சொல்கிறாரா?" என்று தாயிடம் குறையாகச் சொல்லிக் கொண்டாள்."நானும் பிறந்தகத்தில் பாட்டின்மேல் கவனம் அதிகம் செலுத்தினேன்!" என்று ராஜேசுவரி சொல்ல விரும்பினாள். ஆனால் தயங்கினாள். தன் கணவனாவது, "என், எனக்கு இஷ்டமில்லாமலென்ன? ராஜேசுவரி இங்கே வாசிக்காததைச் சேர்த்து அங்கே வாசித்தாளாமே! தப்பென்ன இதிலே!" என்று தங்கையைச் சமாதானப்படுத்தலாம் என்று நினைத்தாள். ஆனால் ரகுபதி அந்த வழிக்கே வரவில்லை.

சாரதாம்பாள் பெண்ணின் விருப்பத்தை மறுக்காமல், சிதார் வாத்தியாரை அமர்த்திவிட்டாள். அதுவரை கேட்டறியாத பார்த்திராத சிதாரை ராஜேசுவரியும் ஆவலோடு பார்த்தாள். கால்களை ஒரு தினுசா_க மணையிட்டு அமர்ந்து சிதாருடன் பவானி உட்கார்ந்த தோரணையே அவளுக்குச் சுவையாக இருந்தது. "என்னுடைய பிடில் வாசிப்பைக் காப்பாற்றிக் கொண்டால் போதாதா?" என்று எண்ணி ராஜேசகுவரி வீணாசைகளில் புகவில்லை.

பவானி சிதார் சாதகம் செய்யும்பொழுது, "மன்னி, இங்கே வந்து உட்கார்!" என்று அழைத்து, "நான் இந்த 'கத்' இருபது தடவை வாசிக்கணுமாம் எண்ணிக் கொண்டு வா!" என்று கட்டளையிட்டாள் முதல் நாள். எத்தனை நாழி ஆகிறது என்று ஒரு நாள் பார்த்துக் கொண்டால், மறுநாள் கூப்பிடமாட்டாள் என்று நினைத்தாள் ராஜேசுவரி. ஆனால், தினமும் ராஜேசுவரியைத்தான் அழைத்தாள் பவானி!

"ஐயோ, வேலை கிடக்கிறதே இன்னும்?" என்று ஏங்குவாள் ராஜேசுவரி வேலையில்லாதபோது, 'புத்தகம் படிக்கலாமே! என்று ஆசைப்படுவாள். ஆனால் பவானிக்கு இதெல்லாம் தெரியாது! "தப்புத் தப்பாக எண்ணுகிறாய் மன்னி!" என்று நொடிப்பாள்!

சிதாரையும், வீணையையும் வாசித்துவிட்டு பவானி எழுந்த பிறகு, தானும் பிடிலைச் சிறிது நேரம் வாசிக்க விரும்பினாள் ராஜம். ஆனால் பவானி வாசித்து முடிப்பதற்கு சந்திகாலம் ஆகிவிடும். ஒரு நாள், மாமியாரை 'பிடில் வாசிக்கட்டுமா அம்மா?" என்று கேட்டபோது, "ஜபம் பண்ண வந்துவிடுவாரே அவர் அப்பா!" என்று சாரதாம்பாள் சொல்லிவிடவே, ராஜேசுவரி அந்த ஆசையைவிட்டாள். பவானி சில சமயம் மாலையிலேயே வாசித்துவிட்டு எழுந்துவிடுவாள். "போகலாம் வெளியில்" என்று கூட்டிக் கொண்டு போய்விடுவாள் மதனியை. சித்ராவை எடுத்துக் கொள்ள பயன்பட்டாளல்லவா ராஜேசுவரி!

ரகுபதிக்கு எல்லாம் தெரியும். ஆனால் கவனியாதவன் போல் இருந்தான். கனிவு பார்வைகளால் ஆதரவு புலப்படுத்துவான். அதையே பெரும்பாக்கியமாகக் கருதினாள் ராஜேசுவரி. கணவன்-மனைவி உறவை மறந்து தோழன்-தோழி என்னும் நிலையில் ஆறுதலை கண்டாள்.

பவானி நினைத்தது நடக்கவில்லை; ரகுபதி ஒரு நாள் கூட, "என் பெண்டாட்டி அவள்!" என்று ராஜேசுவரியைத் தாங்கிக் கொண்டு பேசவில்லை அதுமட்டுமல்ல. "உன்னைவிட உயர்ந்தவளா ராஜேசுவரி!" என்று தங்கையைத் தூக்கி வைத்துப் பேசவும் இல்லை! அண்ணனையும், மதனியையும் புதிர்களாகக் கருதினாள் பவானி. சலனமற்ற ஆழ்ந்த அன்பும், தளராத மனவலிமையும் இளம் தம்பதிகளிடம் நிலவ முடியும் என்று பவானி நினைத்ததில்லை. அத்தகைய தெய்வீகக் காதல் உண்டா என்பதைச் சோதிக்க விரும்பினாள் போலும்.

தெய்வம் பக்தனை ஒரு பக்குவ நிலையில் தான் ஏற்கிறது தன்னகத்தே. அந்தப் பக்குவ நிலையை ஆராய சோதனையும் செய்கிறது. ராஜேசுவரிக்கும் அந்த சோதனை காலம் வந்தது.

பவானி சண்டிகையானாள்!

குழந்தை சித்ருவிடம் அலுப்பில்லாமல் ஓடியாடி அதன் சேஷ்டைகளுக்கு ஈடு கொடுப்பாள் ராஜேசுவரி. ஆனால் அது பவானிக்கு லட்சியமில்லை.

எந்தச் சட்டையை பவானி போடணுமென்று சொல்கிறாளோ, அதைப் போட்டுக் கொள்ள ஒப்பமாட்டாள் அவள் பெண்.

"குழந்தைக்கு இஷ்டமானதைப் போடலாமே அக்கா. இதுவும் நன்றாகத்தானே இருக்கிறது!" என்று ஒரு நாள் ராஜேசுவரி கேட்டாள், மருமகள் வீம்பு கண்டு.

"நான் வைத்து பின்னியிருக்கிற ரிப்பன் எந்தக் கலர் பார்! பார்த்துவிட்டுச் சொல்!"

"ஓகோ, அதற்கா அக்கா! ஏன் 'மேட்சா'காவிட்டால் 'கான்ட்ராஸ்டு' கூட நன்றாக இருக்குமே! .இல்லையோ?"

"ஏன் அப்படிச் செய்யணுமென்று நான் கேட்கிறேன்! அது சொல்கிறது என்று நாமும் பொருத்தமில்லாமல் ஒரு டிரஸ் செய்கிறதாக்கும்! பெரியவர்களைப் பார்த்துத் தானே அதுவும் சொல்லுகிறது, அதைப் போடு, இதைப்போடு என்று!"

பவானி தன்னைத் தாக்குகிறாள் என்ற நினைப்பு இல்லை ராஜேசுவரிக்கு. "நான் கூட எதிலேயோ படித்தேன். நாம் எந்தப் புடவை உடுத்துகிறது என்று யோசிக்கிறோமே, அதைத்தான் குழந்தைகளும் கேட்குமாம்!" என்றாள்.

பவானிக்கு ரோசமாக இருந்தது. "நான்தான் சொன்னேன் அப்படி! 'நாம்' என்று சொல்லுவானேன் நீ? நீ தான் ஏதோ புடவையை உருவி எடுத்து ஒரு பொருத்தமில்லாத ரவிக்கையைப் போட்டுக் கொண்டு கிளம்பிவிடுகிறாயே!" என்று கேட்டாள்.

'ஐயோக்கா, உங்களைவிட அதிகமாக நான் யோசித்ததுண்டு! 'பரு இருக்கே' என்று வெளியில் செல்லக் கூசியதுண்டு! செருப்புப் பொருத்தமில்லையே என்று கவலைப்பட்டதும் உண்டு!' என ராஜேசுவரி சொன்னாளா? இல்லை.

"நாம் என்றால் நம் பெண்குலம் அக்கா!" என்று பதில் சொல்லிச் சிரித்து சமாளித்துவிட்டாள்.

நண்பர் வீட்டிலே அழைத்தார்கள் என்று ராஜேசுவரியையும் பவானியையும், சாரதாம்பாள் போகச் சொன்னாள், சாரதாம்பாள். ராஜேசுவரி தன் பாதங்களைப் பார்த்துக் கொண்டாள். கரியும், புழுதியும் படிந்த கால்களைத் தோய்க்கிற கல்லில் தேய்த்துத் துப்புரவாக்கிக் கொண்டாள், ராஜேசுவரி. புறப்படுகிற சமயத்தில் அவசரப்பட வேண்டாம் என்று அவள் எண்ணம். பவானி ஏளனம் செய்தாள், "நம் பாதத்திற்கு நாமே பூஜை செய்கிறதா?" என்று.

மற்றொரு நாள் பவானி, "முகம் அலம்பிக் கொள்ள வாயேன் மன்னி!" என்று நச்சினாள். தேவையான புடவைகளை எடுத்து வைத்துக் கொண்டு ராஜேசுவரி வருவதற்குள் பவானி முகங்கழுவிக் கொண்டுவிட்டாள். "கடைசியில் அலம்பிக் கொண்டால் பளிச் சென்று இருக்கும் என்று உன் எண்ணம்! நீ தயாராகிறதற்குள் என் முகம் எண்ணெய் வழியத் தொடங்கிவிடும்!" அதற்காக வேண்டி ராஜேசுவரி, இன்னொரு நாள், பவானிக்கும் முன்னதாகவே முகம் அலம்பிக் கொண்டு விட்டாள். "நான் வருகிறதற்குள் நீ 'நீட்டாக' புடவைக் கட்டிக் கொண்டு ஷோக்காக மேக்கப் செய்து கொண்டு தயாராகிவிட்டாய், நான் ஏறத்தாழ்க் கொசுவிக் கொண்டு வருகிறதற்குள் நாலு தடவை கூப்பாடு போட்டு என்னால் தான் தாமதம் என்று பழி வரப்போகிறது" என்று பழித்தாள்!

ராஜேசுவரி என்ன செய்வாள்?

பவானியுடன் வெளியே போகவே அஞ்சினாள். போன இடங்களிலும் சித்ராவைத் தூக்கிக் கொண்டு நிற்கும்படியாயிருக்கும். "உட்கார்ந்து பேச விடமாட்டாளே என் பெண்! அதற்காகத் தானே உன்னைக் கூப்பிடுகிறேன்? ஏதுடா நாத்தனாராச்சே, சிநேகிதிகளைப் பார்த்துப் பேச ஆசைப்படுகிறாள் என்று தோன்றுகிறதா பார் உனக்கு. வரமாட்டேன் என்கிறாயே, சித்ராவை எடுத்துக்கச் சொல்லுவேன் என்று தானே?" என்று கேட்பாள் பவானி.

"ஐயோக்கா, குழந்தையை எடுத்துக்கொள்ள எனக்கு கஷ்டமா? வீட்டிலேயே குழந்தையைப்

பார்த்துக் கொள்ளுகிறேனே! நீங்கள் போய் வரலாமே என்று சொன்னேன்," என்பாள் ராஜேசுவரி.

"குழந்தைக்கு ஒரு 'ஔடிங்' வேண்டாமா? வீட்டிலேயே நாள் முழுக்க இருக்கணுமா?"

"நிஜம் தான் அக்கா, சரி, வந்துடறேன்,"

"நீங்களே எடுத்துக் கொள்ள கூடாதா?" என்று கேட்கமாட்டாள் ராஜம்.

வீட்டில் நடக்கும் இத்தகைய சிறு போராட்டங்கள் எப்படி துரைசாமிக்குத் தெரியும்? அவர் குஷாலாக தேசவிடுதலைப் போராட்டத்தில் ஆர்வம் காட்டிப் பேசுவார் மணிக்கணக்காக. பவானியின் அடக்கு முறையையும், ராஜேசுவரியின் பேதமை நிலையையும் கவனிக்கவில்லை. "நாட்டுப் பெண் விவேகி. ஊராரும் மெச்சுகிறார்கள். நம்மகத்தில் நாட்டுப் பெண்ணுக்கு என்ன குறை இருக்க முடியும்?" என்று மனோபாவம் அவருக்கு.

ரகுபதிக்கு மெல்ல மெல்ல வீட்டு நிலவரம் விளங்கியது. கனிவைப் பொழிந்து மனைவியைத் தாங்குவதும் அவனுக்கு இஷ்டமில்லை. பெற்றோரை மனைவி மதிக்கமாட்டாளோ என்ற வெருட்சி லவலேசமும் இல்லை. மனைவியை ஒடுக்கியாளும் நிலைமை இல்லை. வெகு சரளமாக, சிரமமின்றி நடுநிலைமை வகித்து வந்தான் ரகுபதி. அன்பு தெரியப் பேசினான். ஆனால் அந்தப் பேச்சிலே விரசம் இல்லை, சரசம் இல்லை. 'என்னிடமுள்ள குறையை, சிலரைப் பிடிக்கும், சிலரைப் பிடிக்காது என்னும் என் மனப்போக்கினை, உன் உறவால் ஒழிப்பேன்' என்று அன்று எழுதியதைச் செயலிலும் பேச்சிலும் கூறுகிறவனாக விளங்கினான்.

"தெலுங்குப் படங்கள் எல்லாம் நன்றாகத்தானிருக்கு, பவானி. தெலுங்குச் சினிமாவில் படச் சிறப்பு உயர்ந்து தான் இருக்கிறது! படம் பார்க்கப் போய்ப் பாட்டுக் கேட்க வேணும் தமிழ் சினிமா போனால்!" என்று சொன்னான்!

"என் மாமனார் தெலுங்கராகத்தான் தோன்றுவார்! அவருக்குள்ள தமிழ் அறிவும் பக்தியும், அவர் பேசும்போது தான் தெரியும்! என்னென்னமோ புத்தகங்களை எல்லாம் வைத்திருக்கிறார் அவர்!" என்று யாரிடமோ புகழ்ந்தான்.

"அம்மா, உன் நாட்டுப் பெண் நிமிர்ந்து நடக்கிறதைப் பார்த்தால் அடக்கமில்லாதவளாகப்படுகிறதாம்! "என்னமோன்னு நினைச்சேண்டா!' என்று பர்வதம் பாட்டி சொல்கிறாள் அம்மா!" என்று சிரித்தான் மற்றொரு நாள்.

"ராஜம், நீயே லட்சியப் பெண்!" என்று மெச்சுகிறவனாக மனைவியைப் பார்ப்பான்.

ராஜேசுவரியோ, "நடுநிலைமை வகிக்கத் தெரிந்த கணவராக இருக்கிறாரே, நான் செய்த பாக்கியம்!" என்று நிம்மதியாக இருந்தாள்! அமைதியின்மையின் நடுவே, இந்த அமைதியையே பேரின்பமாகக் கருதினாள். உடலுறவில் இல்லாத மனநிறைவை, இந்தப் பக்குவ நிலையிலே உணர்ந்தாள் அவள். அன்பின் வலிமையை கண்டாள்.

ரகுபதி உலாவப் போயிருந்த சமயம் பவானி, அவனுடைய பெட்டியை எடுத்தாள். "என் பெட்டியம்மா இது. அவனுடையது லேசாயிருக்கு என்று ஊருக்கு எடுத்துக்கொண்டு, என்னுடையதைத் தந்தேனே! இப்பொழுது மறுபடியும் மாற்றி விடுகிறேன். அவன் பெட்டியை அவனுக்கே தந்து என்னுடையதை எடுத்துக்கொள்கிறேன்" என்றாள் பவானி. புடவைகளை மறுபடியும் மடிக்கும் வேலையை மதனிக்குக் கொடுத்துவிட்டு, அண்ணனின் ஆடைகளை அவனுடைய பெட்டியிலே வைத்துவிட்டு, தன்னுடைய பெட்டியில் தன் ஆடைகளை வைத்துக் கொண்டாள்.

அன்று மாலை இந்த பெட்டி மாற்றம் ரகுபதியின் கவனத்தில் விழவில்லை. மறுநாள் காலை குளிக்கும்போது கவனித்தான்.

"யார் பெட்டியைக் கலைத்தது?" என்று திடுக்கிட்டுக் கேட்டான்!" உடை விஷயத்தில் அவனுக்கு அத்தனைக் கருத்து உண்டு.

அவன் குரல் வெந்நீர் அறையிலிருந்த அவன் மனைவியின் செவிகளில் விழுந்ததே, கூடத்திலிருக்கும் பவானிக்குக் கேட்கவில்லை போலிருக்கிறது.

"என்னண்ணா? என்ன?" என்று கேட்டாள்.

"பெட்டியை யார் மாற்றினார்கள்?"

"ஏன், நான்தான் மாற்றினேன்?"

"மாற்றினால், ஜாக்கிரதையாக மாற்றக்கூடாதா துணிகளை? மடிப்புக் கலைந்து .எத்தனை அலங்கோலம்!"

"நான் பெட்டியை எடுத்துக் கொண்டுவிட்டு, மன்னியை துணிகளை எடுத்து வைக்கச் சொன்னேன் அண்ணா! இறைபட்டுக் கிடந்த என் புடவைகளை எடுத்துக் கொள்ளுகிற அவசரத்தில் வந்துவிட்டேன்!"

"ஐயோ, பொய்! நான் தான் புடவைகளை மடித்தேன்! அவசரப்பட்டுத் திணித்தீர்கள் அவற்றை!" என்று கூறத் துணிவில்லாமல், கணவனுக்கு நீர் இரைத்துக் கொண்டே, பொல பொலவெனக் கண்ணீர் உகுந்தாள் ராஜேசுவரி.

செவசெவவென்று கணகணக்கும் முகத்தோடு வெந்நீரறையை நோக்கி நடக்கும் அண்ணனைக் கண்டு பவானி சிறிது நேரம் திகைத்தாள். அண்ணனைத் தொடர்ந்தவள், சமையலறையில் நுழைந்துவிட்டாள். "மன்னி வைத்தாள் என்றால் கோபம் வராது என்று நினைத்தேன் அம்மா! அண்ணாவிற்குக் கோபம் வந்துவிட்டதே!" என்றாள்.

கோபத்தில் துவாலை எடுத்துச் செல்ல மறந்திருந்த ரகுபதி, வெந்நீரறையில் புகாமலே திரும்பி வந்தபொழுது பவானியின் சொற்களைக் கேட்டுவிட்டான். "அவனுக்கு அந்த வித்தியாசமே இல்லையே!" என்று தாயார் சொன்னதையும் கவனித்து விட்டான்.

துண்டு சகிதம் வெந்நீரறையில் நுழைந்தபோது, ராஜேசுவரி, கண்களை அலம்பிக் கொண்டிருந்ததைக் கண்டு கனிவு மீறியவனாய், ரகுபதி துண்டை அவள் முதுகின் மீது வீசித் தட்டினான்!

திடுக்குற்ற ராஜேசுவரி, புன்னகையுடன் நிற்கும் புருஷனைக் கண்டதும், "கையாலேயே அடிக்கலாமே, சந்தோஷப்படுவேன்!" என்று நாவினால் சொல்லமாட்டாமல், நோக்கினால் சொல்லிவிட்டு நகர்ந்து கொண்டாள்.

அத்தனை நாளும் உணராத வேதனையை உணர்ந்தான் ரகுபதி. அந்தக் கணம். "எனக்கு வேலை கிடைத்துவிட்டால்?" என்று அவனையுமறியாமல் துன்பம் எழுந்தது. "ராஜேசுவரி மானிடப் பெண்தானா?" என்று வியந்தான்!

ராஜேசுவரியின் மருண்ட பார்வைகளும், வறண்ட புன்னகைகளும், தன்னுடைய அன்பின் பக்க பலம் இல்லாததனால் ஏற்பட்ட விளைவுகளோ என்று ரகுபதி கொஞ்ச நஞ்சம் கொண்டிருந்த சந்தேகமும் அகன்றது. நடுநிலைக் கொள்கையைத் தளரவிடக்கூடாது. ஆனால் எதற்கும் ஒரு வரம்பு உண்டு என்பதையும் மறந்துவிடக் கூடாது. இது தான் ரகுபதிக்கு ஏற்பட்ட சஞ்சலம்.

ஆனால் அந்த சஞ்சலம் ரகுபதிக்கு நீடிக்கவில்லை. ஏனெனில், ராஜேசுவரியின் சஞ்சலமும் மறைந்து போயிற்று!

இங்கித மருமகள், இன்முக மதனி, அன்பிற் சிறந்த மாமி, ஆதரிச இல்லாள் என்னும் ஸ்தானங்களிலே மனநிறைவைப் பெற்றாலும், ஆசை மனைவி என்னும் நிறைவைப் பெறாத மனக்குறையை கொஞ்ச நாள் உணர்ந்திருந்தாள் அல்லவா, ராஜேசுவரி. மெல்ல மெல்ல அந்தத் தடுமாற்றத்தையும் உதறிவிட்டாள்.

தலையணை மந்திரம் ஓதும் பொல்லாத மனைவியாகத் தன்னை மாற்றிவிடாமல், கட்டு மீறி வார்த்தைகளை வெளியிட்டு விடும் நிலைமையை உண்டாக்காமல், தன்னைக் காப்பாற்றும் நிலை அது தான் என்பதை அவள் அடிக்கடி நினைவு கூர்ந்தாள். கணவர், தன்கைப் பிடித்து ஏற்றவர், தனக்கு ஆறுதலளிக்கும் காதலர், என்று ரகுபதியைக் கருத விரும்பவிலலை அவள். "இதே நிலைமை நன்று! அவருக்கும் எனக்கும் பொல்லாங்கு இல்லை!" என்று மனம் தேறிவிட்டாளே அவள்!

அவள் அகத்தில் நிலவிய அமைதி முகத்திலும் தெளிவாகியதே!

திணறடிக்க வேண்டுமென்று பவானி கேட்கும் கேள்விகளுக்கு, ராஜேசுவரி எளிதில் புன்னகை பூத்துச் சமாளிப்பதையும், எந்த வேலை சொன்னாலும், "ஓ.ஆகட்டும் அக்கா!" என்று மனமுவந்து ராஜேசுவரி பணிகள் செய்வதையும் கண்டு ரகுபதி வியந்து பாராட்டினான். "தெய்வாம்சமோ?" என்று பிரமித்தான்! தன் தாயின் நல்லதனத்தையும் பொறுமையையும் மிஞ்சிவிட்டாளே தன் மனைவி என்று பூரித்தான்.

"என்னம்மா, உன் மாமியாரின் பெயரை நீ எடுத்துவிட்டாயாமே! எத்தனை பேர் சொல்கிறார்களே புகார்?" என்று தன் தந்தை, நாட்டுப் பெண்ணிடம் சிலேடையாகப் பேசியதையும், ராஜேசுவரி 'என்ன, என்ன?' என்று மருண்டு, பிறகு அடக்கமுடன் சிரித்ததையும் எண்ணிப் பார்த்தான்.

"பிறந்தகம் வந்திருக்கிறேன், நான் இதெல்லாம் 'வொர்ரி' பண்ணிக்க மாட்டேன்!" என்று பவானி, மழையில் நனையும் துணிகளை எடுக்க மறுத்ததையும், சாப்பிட்டுக் கொண்டிருந்த ராஜேசுவரி, "அம்மா, நான் எழுந்திருக்கிறேன், பரவாயில்லையம்மா?" என்று கெஞ்சியதையும், தாயார், "வேண்டாமே, ரகுபதி வந்து எடுப்பான்!" என்று சொல்லி தன்னை அழைத்ததையும் நினைத்துக் கொண்டான்.

"என்னால் அவளுக்குப் பெருமையில்லை; சிறுமைதான்!" என்று மனமுருகிப் போனான்.

## 25

அவன் மனம் மருகியதன் பயனாகவோ, அல்லது, பவானி பெட்டியை மாற்றியதன் பயனாகவோ, ரகுபதிக்கு ஒரு நற்செய்தி வந்தது.

தற்காலிக வேலைதான். யுத்தம் முடியப் போகிறது என்னும் நிலவரத்தில், யுத்த முனைக்குச் சம்பந்தமில்லாத ராணுவ சேவை. ரகுபதிக்கு அழைப்பு வந்தது.

"எதிலாவது தொத்திக் கொள்ளாவிட்டால், பிறகு வேறு வேலை கொடுக்கிறவர்கள் ரொம்ப யோசிப்பார்கள்" என்று அதை ஏற்கச் சம்மதப்பட்டான் ரகுபதி.

கடிதத்தைப் பார்க்க ஆவல் காட்டாமல், சிதார் பிடித்துக் கையைத் தளர்த்தாமலிருந்ததையும், ராஜேசுவரி "எங்கே, எங்கே?" என்று துடிப்பதையும் கண்டு, அங்கேயே அமர்ந்திருக்கும் மனைவியருகு குனிந்தான். "பார், .... இந்த வரியில் எழுதியிருக்கு," என்று சுட்டிக் காட்டியவாறே, அவளுக்கருகு நெருங்கியமர்ந்து படித்துக் காட்டிவிட்டு, எழுந்து போனாள்.

"ஊருக்குப் போகப் போகிற அருமை!" என்று முணுமுணுத்தாள் பவானி.

"வேலையான செய்தியைச் சொல்லிக் கடிதங்காட்டிச் சென்றார் சந்தோஷமாக! இது கூடத் தவறா? நான் இந்த வீட்டில் அண்ணி என்ற உரிமையில் வாழாமலிருக்கும் போதே அருமை என்று சொல்லலாமா?" என்று கண் கலங்கிய மதனியை பவானி, "புருஷனைப் பிரிகிற ஏக்கம்!" என்று ஏனோ தூற்றவில்லை!

பேசமாட்டாமல் தலையை மட்டும் ஆட்டிவிட்டுச் சென்ற கணவனைப் பார்த்து ராஜேசுவரி மெய் சிலிர்த்தாள்.

"அவரும் நானும் பிரிந்திருப்பதே நலம்; ஒருவரின் மனத்துன்பங்களை மற்றவர் பார்க்காமலிருப்போம். இன்ப நினைவுகளாலேயே நாளை ஓட்டி விடுவோம்!" என்று வீர மங்கை போல எண்ணினாள் பேதை!

"புக்ககத்தில் கணவன் இல்லாதபொழுது அங்கே எனக்கு என்ன வேலை? நான் போகப் போகிறதில்லை!" என்று சொல்லியிருந்தாள் பவானி, ஜானம்மாள் வருமுன். தன் தாயாரிடம் மட்டும் தான் சொல்லியிருந்தாள். இப்போது, தன் மருமகள் அதே கேள்வியைக் கேட்பாளோ, என்ற யோசனை எழுந்தது சாரதாம்பாளுக்கு. ரகுபதி புறப்பட்டுச் சென்ற பின்னரும் ராஜேசுவரி வழக்கம் போல் வீட்டில் வளைய வருவதையும், குழப்பம் குறைந்தவளக் காணப்படுவதையும் கண்டாள்.

"ரகுபதி போகிற அதே வழியாக இருந்திருந்தால் உன்னைக் கூட அனுப்பியிருப்பேன், உன்

பிறந்தகத்துக்கு! எப்பொழுது வீடு கிடைத்து, 'வா' என்று எழுதிவிடுகிறானோ? உனக்கும் அப்பா, அம்மாவைப் பார்க்கணுமென்று இருக்கும்; எனக்கு யோசனைதான்!" என்றாள் சாரதாம்பாள், மனங்கனிந்து.

ராஜேசுவரியின் முகம் நாணத்தினால் புதைந்து போயிற்று. "அவர் இங்கே இருந்தால் தான் இருக்கணுமாம்மா நான்?" என்று முகத்தை ஏறிட்டுப் பார்க்காமலே பதிலளித்தாள்.

"நீ இப்படி நினைக்கிறதானால் எனக்கு ரொம்ப சந்தோஷம் தான். எங்கேயோ, வடக்கே போய்விட்டீர்களானால் அப்புறம் நீயும் இங்கே வருகிறது அபூர்வமாகிவிடாதா? பிள்ளைப் பேறு குட்டிப் பேறு என்று ஏற்பட்டால் அம்மாவகத்திற்குப் போக முடியும், இல்லையா?"

ராஜேசுவரி முறுவலித்தாள்.

"சித்ரா உன்னிடம் ஒட்டிக் கொண்டுவிட்டது. நீயும் ஆசையாய் இருக்கிறாய். நடக்கட்டும், நடக்கட்டும். நீயும் இருந்து நடத்திக் கொடு," என்று சந்தோஷமாகப் பாராட்டினாள் சாரதாம்பாள்.

ராஜம், ராஜேசுவரி தன் பிறவிப் பயனை அடைந்துவிட்டதாகக் கருதினாள்.

"பவானியில்லையா வீட்டில்! பாட்டு வாத்தியார் வந்திருக்கிறீரே!" என்றார் துரைசாமி.

"சீக்கிரம்' வந்துவிடுகிறதாகச் சொல்லிவிட்டுத்தான் போனாள்; வாத்தியார் ரொம்ப சீக்கிரம் வந்துவிட்டார்!" என்று சாரதாம்பாள் பதிலளித்துவிட்டு, வாத்தியாருடன் தன் கணவர் பேச்சுக் கொடுப்பார் என்று எதிர்பார்த்தார். ஆனால் துரைசாமி போய்விட்டார். "ராஜம், நீ தான் இரண்டு பாட்டு வாசித்துக் காட்டு பிடிலில், வெறுமனே எப்படி உட்கார்த்துகிறது!" என்று யோசனை சொன்னாள்.

வாத்தியாருக்குக் கம்பளம் விரித்து, சிதாரை எடுத்து வைத்துவிட்டு ராஜேசுவரி வந்தாள்.

"நீங்கள் கேட்டுச் சொல்லுங்கள் அம்மா!" என்றாள். சாரதாம்பாள் சொன்னாள் வாத்தியாரிடம்.

"பிடில் வாசிப்பாளா? எங்கே, கட்டாயம் கேட்கிறேன்!" என்றார் அவர்.

'எனக்கு ஒன்றும் தெரியாது, காரியம் தவிர! என்று அவர் நினைத்திருக்கிறார்' என்பதை ராஜேசுவரி வருத்தமுடன் ஊகித்தாள்.

அடக்கமாக சுவரோரம் அமர்ந்து, மாமியாரைப் பார்த்து, "என்ன வாசிக்கிறது அம்மா?" என்று கேட்டாள்.

வாத்தியார், "ஹம்ஸநாத_ வாசியம்மா!" என்றார், வாத்தியார்.

ராஜேசுவரி, "ஹம்ஸத்வனி தான் தெரியும், வாசிக்கட்டுமா?" என்றாள்.

'வாதாபி கணபதிம்' கீர்த்தனை கேட்டு முடித்த வாத்தியார், "இத்தனை நன்றாக வாசிக்கிறாயே அம்மா! இத்தனை நாள் தெரியாமற் போயிற்றே! கேட்காமல் போனேனே!" என்று மாமியாரிடமும் மருமகளிடமும் மாற்றி மாற்றிச் சொல்லிக் கொண்டிருந்தபோது பவானி வந்துவிட்டாள்.ம்

'மாமியார் மனம் விட்டுப் பாராட்டினார்; சிதார் நிபுணர் மெச்சிவிட்டார்; கணவருக்கு வேலையாகிவிட்டது! என் கலி தீர்ந்தது, நான் இனிமேல் அக்காவின் கண்களில் புழுவாகத் தென்படமாட்டேன்!' என்னும் பெருமிதமுடன் அன்றிரவு துயின்றாள் ராஜேசுவரி. எப்பொழுதும் போலே, கணவனைப் பற்றிய இனிய நினைப்புகளுடன் ஆனந்தமாகத் துஞ்சினாள்.

பவானி தன்னைப் புழுவாக மதிக்க மாட்டாள் என்று ராஜேசுவரி நினைத்தற்கேற்பத்தான், மறுநாள் பவானி ராஜேசுவரியிடம் பேசினாள். "மன்னி, நீயே, நான் பிள்ளைப் பெற ஒத்தாசை செய்யத்தான் இருக்கிறேன் என்றாயாம். எனக்கு இந்தச் சித்ருவைப் பற்றித்தான் கவலை. இன்னும் பத்து நாளோ, எட்டு நாளோ, அறைக்குப் போய்விடுவேன். இது என்னைப் பார்த்து, பார்த்து ஏங்கிப் போகும். கையில் புதுக் குழந்தையை வேறே கண்டுவிட்டால் ரொம்ப வாடிவிடும். இப்பொழுதே சொல்லிவிட்டேன், நீதான் அதற்கு பொறுப்பு" என்று பவானி தன்னை மதித்துப்

பேசவே, ராஜேசுவரி இறும்பூதெய்தினாள்.

அடிமை போல் நடத்தாமல் கண்ணியமாக நடத்தத் தொடங்கிவிட்டாள் பவானி என்று பரவசமானாள். ஆனால் பவானிக்குப் பாங்கியாக இருக்கப் பின் வாங்கவில்லை, ராஜேசுவரி. சித்ருவிற்குச் செவிலித் தாயாக விளங்கினாள். மாமியாருக்குச் சிற்றாளாய் உதவினாள். பவானிக்குச் சைரந்திரியானாள். இல்லத்திற்கு இல்லாளானாள். "பிறந்தகப் பாசம் பெண்ணுக்கு அவசியமில்லை! நடுநிலைமை அவசியமில்லை!" என்று முடிவு செய்துவிட்டாள்.

ஆனால் பவானியின் பேராசை அதிகமாயிற்று. குளிப்பறைக்குப் போகும் வழியில் ஜன்னலில் இருக்கும் சோப்புப் பெட்டியை எடுத்துக் கொள்ளாமல், அந்த வழியே போய்க் கொண்டே, "சோப்பு பெட்டியைக் கொண்டுவா!" என்று கட்டளை இட்டுக் கொண்டு போவாள் பவானி. ராஜேசுவரி வெந்நீர் அறை வரை போவாள். "அந்த எண்ணெய்க் கிண்ணத்தை அங்கே வை. இந்த மஞ்சள் தட்டை இந்தண்டை நகர்த்து" என்று ஓரிரண்டு சிறு வேலைகளைச் செய்யச் சொல்லிவிட்டுத்தான் மதனியை அப்பால் போகச் சொல்லுவாள் பவானி! கருவுற்றிருக்கும் நாத்தனாருக்குச் சௌகரியம் செய்து கொடுப்பதாகச் சமாதானம் செய்து கொள்வாள் ராஜேசுவரி. ஆனால், "சோப்புப் பெட்டி வைக்கும் ஜன்னல் வழியில் தானே இருக்கிறது. குளித்துவிட்டு வரும்பொழுது கையோடு கொண்டு வைக்கலாமே! குளிக்கப் போகும்போது கையோடு எடுத்துப் போகலாமே! நான் தனக்குப் பணிவிடை செய்ய வேண்டும் என்றல்லவா நினைக்கிறாள் பவானி?" என்று கேள்வி எழும்!

பவானியின் ஆசையைக் கெடுக்கவிரும்பாத ராஜேசுவரி, 'பணி செய்வது என் கடனே' என்று மனமுவந்து செய்தாள்.

"ஏனம்மா அவசரம்? கையிலிருக்கும் வேலையை முடித்துவிட்டு வாயேன்? ஒரு காரியம் முடிக்காமல் இன்னொரு காரியத்திற்கு வரக்கூடாது!" என்று முன்பு ஒரு நாள் மாமனார் சொன்னார்.

"அப்படி முடியுமா? ஒரு அவசர வேலை இருக்கும் கையிலிருக்கிறதைப் போட்டுவிட்டுத்தான் ஓடி வர வேண்டியிருக்கு! அப்பளமெல்லாம் ரொம்பக் காய்ந்து கட்டுக் கட்ட முடியாமல் போய்விட்டதே, ஒரு நாள்!" என்று மாமியார் சொன்னார்.

"சில காரியங்களை இப்படியும் செய்யணும்; சில காரியங்களை அப்படியும் செய்யணும்," என்று மனதில் நினைத்துக் கொண்டாள் ராஜேசுவரி அன்றைக்கு. ஆனால் இப்பொழுது சாரதாம்பாள் கூட, ராஜேசுவரியைப் பார்த்து, "ஏன் இங்குமங்குமாய் நடமாடறே! நீ அவளே, முழுக்கக் கவனித்துவிட்டு வாயேன்! நான் இந்தக் தேங்காயைத் துருவிக் கொள்ளமாட்டேனா?" என்று பவானிக்கு உதவியாளாக இருக்கும்படி ராஜேசுவரியைத் தூண்டவும் தொடங்கினாள்.

பவானிக்கு உதவிகள் அவசியம் என்றுணர்ந்த ராஜேசுவரி மாமியாரையும், பவானியையும் சரி சமானமாகக் கவனித்துக் கொண்டாள். குளிப்பதற்கு முன் பவானிக்குத் தேவையானதெல்லாம் செய்துவிட்டு, குளித்ததும் சமையலறைக்குப் போய் மாமியாருக்கு ஒத்தாசைகள் செய்வாள்.

சில சமயம் பவானியிடும் சில அனாவசிய வேலைகளால் மாமியாருக்கு உதவி செய்ய முடியாமல் தவிப்பாள் ராஜேசுவரி.

"அக்கா, பத்து நிமிஷமாகட்டுமே, இந்த அலமாரியை ஒழிக்கலாம்! அம்மாவிற்கு கொஞ்சம் கீரை ஆய்ந்து போட்டுவிடுகிறேனே!" என்று ராஜேசுவரி கேட்டதுண்டு. "நான் பிறந்தகம் வந்திருக்கிறேன். நீயும் அம்மாவும் என்னைக் கவனிக்க வேண்டும். அம்மாவை நீ என்ன கவனிக்கிறது?" என்று கேட்டாள் பவானி! அதனால் ராஜேசுவரி, பவானியின் ஆசையை உணர்ந்து கொண்டுவிட்டாள்.

சமையலறையிலும் தோய்க்கிற கல்லுக்கருகிலும் கிடக்கும் வேலைகளை விட்டுவிட்டு, பவானியின் அழைப்புக் கேட்டு ஓடி வருவாள். "சமையலறைக்கு ஓடி விடுகிறாயே மன்னி! இங்கே வா, பார் புத்தகங்களின் மேல் எத்தனை தூசு! தாறுமாறாய்த் துணிகள் இங்கே கொடியில்! மடித்து வை. சமையலும் சமையற்காரியமும் தெரிந்தால் போதுமா? எங்கே மடித்து எப்படிப் போடுகிறாய், பார்ப்போம்! ஒரோரு துணியை ஓரோரு விதம் மடிக்கிறதும், ஒரு 'டெக்னிக்'

தெரியுமா?" என்று பவானி சொல்வதை சுண்டாத முகத்துடன் ஏற்று, "ஆமாம், அக்கா, ஒவ்வொரு வேலையும் ஒரு கலை தான்!" என்று ஆமோதித்து வேலையைச் செய்துவிட்டுப் போவாள். அதன் பயனாக, சுரீர் என்று அடிக்கும் வெய்யிலில் தான், துணிகளைத் தோய்த்து, அலசி உலர்த்தி எடுப்பாள் ராஜேசுவரி.

"வெய்யிலிலா தோய்க்கிறாள்? இது தெரிந்தால் நான் போட்டிருக்க மாட்டேனே வேஷ்டியை!" என்றார் ஒரு நாள் துரைசாமி அய்யர்.

"வெய்யலுக்கு முந்தி தோய்த்துவிட்டுக் குளிக்கலாம்! அவள் குடுகுடுவென்று குளித்துவிட்டு, குழம்பு கூட்டுக்கு அரைத்துக் கொடுக்கவும், சாதம் பரிமாறவும் வந்துவிடுகிறாள். சாப்பிட்டப்புறம் வெய்யிலில் தோய்க்கும்படி வைத்துக் கொள்கிறாள்!" என்றாள் சாரதாம்பாள்.

"வேலைகளை அட்ஜஸ்ட் பண்ணிக்க தெரியணும்!" என்று மாமனார் பதிலளித்தார்.

பவானிக்கு ஏனோ, ரோசமாக இருந்தது! "தோய்க்கிறேன் என்று பிடுங்கி வைத்துக் கொள்கிறாளே என்று விட்டுவிடுகிறேன். தோய்க்கிறது பிரமாதமில்லை எனக்கு!" என்று தன் தாயிடம் சொல்லிக் கொண்டாள். அதன் பிறகு ராஜேசுவரி மூன்று நாள் விடுமுறை கழிந்து ஸ்னானம் செய்துவிட்டு வந்தன்று, தோய்க்காமல் குவிந்து கிடந்த பவானியின் நான்கு புடவைகளை தோய்த்து உலர்த்தினாள்!

"ஏண்டி பவானி, நான் தோய்த்தேனே இரண்டு புடவை! எப்படி நாலு தங்கிவிட்டது?" என்று தாயார் கேட்டதற்கு, பவானி "ஏன், மன்னி மாதிரி நான் ஒரே வேளை குளித்துவிட்டு இருக்கிறேனா? இந்த உடம்பில், இந்த வெய்யலில் இரண்டு வேளை குளிக்காவிட்டால் என்னால் இருக்க முடியாதே!" என்று பெருமையடித்துக் கொண்டாள்.

மாலை வேளைகளில் பவானிக்குக் குளிக்க நீர் வைக்கும் பொழுதெல்லாம், தானும் குளிக்க வேண்டும் என்று ஆசைப்படுவாள் ராஜேசுவரி. ஒரு வேலை கூட செய்யாத பவானியின் ஆடைகளைத் தோய்த்து உலர்த்தும்படி இருக்கும், ஆனால் தன் சோர்ந்த உடலையும், கசங்கிய ஆடையையும், சுத்தம் செய்து கொண்டு துப்புரவாகத் துலங்க அவளுக்குப் பொறுமையும் நேரமும் இராது!

ராஜேசுவரி பொறுமையே வடிவமாக விளங்கினாள். பவானி, பொறுமையின்மையே உருவாக விளங்கினாள்.

"கூப்பிட்ட உடனே ஓடி வரவில்லை!" என்று பவானி அதட்டியதற்காக ராஜேசுவரி கைக்காரியத்தை விட்டு ஓடிவருவாள். கையில் அழுக்கு இருக்கும், காயமிருக்கும், சோப்புப் போட்டு அலம்பிக் கொண்டு வர நேரமின்றி ஓடி வருவாள் ராஜேசுவரி. "கையைப் பாரேன், நகக் கண்ணில் இத்தனை அழுக்குடனா நீ குழந்தைக்கு ஆரஞ்சு ரசம் பிழிகிறாய்? என் குழந்தைக்கு வியாதி வந்தால் உனக்கென்னடியம்மா கவலை?" என்று காரசாரமாகக் கேட்பாள் பவானி!

புகழுக்குரியவளாகவே வளர்ந்துவிட்ட ராஜேசுவரி, புகழுக் குரியவளாகப் பிறந்ததாகவே தன்னைக் கருதினாள். தன் பெயருக்கு இழுக்கு ஏற்படுவதை அவள் வெறுத்தாள். அதனாலேயே விவேகத்தை வளர்த்துக் கொண்டு, மனதைப் பக்குவப்படுத்திக் கொண்டு, எந்த வயதிலே, எந்தச் சூழ்நிலையில் எப்படி இருக்கவேண்டுமென்று அந்தரங்கம் அறிவுறுத்தியதோ, அது போல் நடந்துகொண்டாள். வேண்டியவிதமெல்லாம் வளைந்து கொடுத்தாள்.

இப்பொழுது ராஜேசுவரி கலங்கினாள். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பேச்சும், ஒவ்வொரு செய்கையும் பயந்து பயந்து உருவாக்க முடியுமா? இதற்கு முடிவில்லையா என்று ஏங்கினாள். தினமும் படுக்கும்பொழுது, "நாளைப் பொழுது எப்படிப் போகுமோ என்ற பீதி. ஆனால் இத்தனை வேதனைக்குமிடையில், மரக்கட்டை போல் உணர்வற்று அயர்ந்து தூங்கினாள். "மன்னி தூங்குகிறதைப் பார்த்தால், நமக்கு தூக்கம் இப்படி வராதா என்று இருக்கிறது! எனக்கு ராத்தூக்கமே இல்லை!" என்று சில நாள் சொல்லிக்கொண்டிருந்தாள் பவானி. "மன்னி, உன்னண்டை சித்ருவை விட்டால், குழந்தை அழுதால், எழுந்திருப்பாயோ?" என்று கேட்கவும் கேட்டாள். 'எழுவாளோ' என்று சோதனைச் செய்ய விரும்பினாள் போலும். அயர்ந்து உறங்கும் ராஜேசுவரியை நள்ளிரவில் எழுப்பி, "அந்த ஸ்விச்சைப் போடு!" "துப்பட்டியை சரியாகப்

போர்த்து!" என்று கட்டளை இடவும் தொடங்கினாள். மலங்க மலங்க விழித்து உணர்வு தெளிந்த பின், கட்டளைப்படி செய்துவிட்டு, ஓய்ச்சலுடன் மீண்டும் படுத்துவிடுவாள் ராஜேசுவரி. அந்தரங்கம் மட்டும் குமுறும். சாரதாம்பாள் தன் பெண்ணின் அடக்குமுறையை ஆதரிக்கவுமில்லை, கண்டிக்கவுமில்லை.

ராஜேசுவரி, அல்லும் பகலும் கணவனின் மாசற்ற அன்பை நினைத்துக் கொண்டுதான் மனவலிமையை இழக்காமல் இருந்தாள். நர்சுகள் இரவு பகல் பாராமல் யார் யாருக்கோ அயலாருக்கு உழைக்கவில்லையா? உயிருக்குயிரான கணவனின் உடன் பிறந்தவளுக்காக உழைப்பதில் இழிவென்ன என்று நினைத்தாள்.

உள்ளம் நினைத்தது, உடம்பு மட்டும் மறுத்தது. அயர்வு வளர்ந்தது, கண்கள் எரிந்தன. நடக்கும் போதே சுவர்களிலும் கதவுகளிலும் இடித்துக் கொண்டாள். பாத்திரங்கள் கை நழுவி விழும். "அப்பா, சத்தம் தூக்கிப் போடுகிறதே! மெல்ல போகக்கூடாதாம்மா?" என்று கேட்டார் மாமனார். "கடனே என்று செய்யக்கூடாது! ஜபத்திற்கு, நான் குளிக்க ஒரு மணி இருக்கும்போதே வைத்துவிடுகிறாளே!" என்று கூட அவர் கேட்டார். ஒழிந்த போது செய்ய வேண்டுமென்று ராஜேசுவரி செய்யப்போக, மாமனார் கூட குறை கூறும்படியாயிற்று.

ராஜேசுவரியின் உடல்நிலை கண்டு நான் அவர் சொன்னாரோ, அல்லது மனநிலையைச் சந்தேகித்துத்தான் சொன்னாரோ? "நாட்டுப் பெண் என்று வீட்டிற்கு வந்துவிட்டால், சமையல் ஆள் போட்டுவிட வேண்டியது தான்!" என்றார் மனைவியிடம் ஒருநாள்.

"அப்படிக் கொட்டிக்கிடக்கிறதா நமக்கு? நாட்டுப் பெண் வந்ததும், இருக்கிற சமையல்காரியைப் போகச் சொல்லுவார்கள் சில வீடுகளில்!" என்று பொருமிக் கணவரின் அபிப்பிராயத்தைக் கண்டித்தாள் சாரதாம்பாள்.

இத்தகைய சில பேச்சுக்கள் ராஜத்தின் குழப்பத்தை வளர்த்தன. "எத்தனை பொறுத்தால் நல்ல பெயர் நிலைக்கும், கடவுளே?" என்று கவலைப்பட்டாள். மோட்ச நிலையை அணுகிவிட்ட, துறவு நிலையிலே தவறி விழுகிறவன், அதல பாதாளத்திற்குப் போவானாமே! அது போலாகிவிடுமோ?

ஒரு நாள் துரைசாமியின் வார்த்தை பலித்தது! அதன் பயனாக சாரதாம்பாளின் சொல்லும் பலித்தது!

சமையற்காரி தேவை என்னும் நிலைமை வந்தது! ராஜேசுவரி கையில் பெரிய கட்டுடன் படுத்துவிட்டாள். நாட்டுப் பெண் இருந்தால் சமையற்காரி தேவையில்லை என்பார்கள் சிலர். நாட்டுப் பெண் இல்லை என்றால் சமையல்காரி தேவை என்று நிலைமை ஏற்பட்டுவிட்டது!

## 26

பவானிக்குப் பிள்ளைக் குழந்தை பிறந்தது.

"பார், நிற்கிறது குழந்தை, வாசற்படியில். நீ தான் கவனிக்கணும் அவளை" என்றாள் பவானி, மதனியிடம். சாரதாம்பாள் பிரசவ அறையிலிருந்தாள். வெளிக் காரியங்கள் பெரும்பாலும் ராஜேசுவரியின் பொறுப்புகளாயின. "அடுப்புகிட்டே விடாதே, கிணற்றடிக்கு விடாதே, மொட்டை மச்சுக்கு விடாதே!" என்று பலவீனமான குரலில் உத்தரவுகளைப் பிறப்பித்து திணறடித்தாள் பவானி. அவளுடைய தாயுள்ளத்தின் துடிப்புக்கு மரியாதை தந்து, ராஜேசுவரி பம்பரமாகச் சுற்றினாள். பம்பரம் கூட தூங்கும். ஆனால் ராஜேசுவரி அயரவேயில்லை. 'மாமாவைப் போலவே மருமான்' என்று யாரோ சொன்ன உற்சாகம். தன் கணவனின் வருகையைக் கொண்டாடுவது போல உற்சாகமாக விளங்கினாள். தானே குழந்தையைப் பெற்றெடுத்தது போல உவகை கொண்டாள்.

"எத்தனை ஆசைடி குழந்தை என்றால்!" என்று புகழ்ந்தவர்களும், "நாட்டுப் பெண் நாலு ஆளுக்குச் சமானமாக இருப்பாள் போலிருக்கே!" என்று மெச்சியவர்களும், பவானியின் மகவைப் பார்த்துச் சென்றார்கள். 'காப்பு'க்கு வந்தவர்கள், "ஐயோ, பாவம் எங்கள் கண் திருஷ்டிதானோ, படுத்துவிட்டாள்!" என்று அனுதாபப்பட்டுவிட்டுச் சென்றார்கள்!

இடது கையின் ஆள் காட்டி விரலில் பெரிய வீக்கம், குத்தல், வலி. துடித்தாள் ராஜேசுவரி. மெல்ல

மெல்லக் காரணம் புலனாயிற்று. காப்பிமெஷினில் கொட்டையை உள்ளே தள்ளித் தள்ளி அரைக்கும் பொழுது ஒரு நாள் பட்ட சிறு காயம் தான். நீரிலேயே அளைந்து அலட்சியம் செய்துவிட்டாள் ராஜேசுவரி. விஷமித்துப் போய் புரையோடிவிட்டது.

கீறிவிட்டார்; கட்டுப்போட்டார் வைத்தியர். 'அலையக்கூடாது, கையை அசைக்கக் கூடாது,' என்றார் கண்டிப்பாக. நடமாடக் கஷ்டமாயிருந்தவரை, ராஜேசுவரி படுத்திருந்தாள். பிறகு இடது தோளில் தூளியில் தூங்கும் இடது கையை அசைக்காமல், வலக்கையால் செய்ய முடிந்த உதவிகளைச் செய்தாள்.

நடராஜனுக்கும், ரகுபதிக்கும் எழுதிய கடிதங்களிலே, துரைசாமி கலவரப்படுத்தும் வகையில் ஒன்றும் தெரிவிக்கவில்லை. அவர்கள் வர முடியாது. வருந்திப் புழுங்கும்படி செய்வானேன் என்று அவர் எண்ணினார். தம் வீட்டில் ஏற்பட்ட காயம், அதைக் குணப்படுத்தாமல் ராஜேசுவரியைப் பிறந்தகம் போகும்படி விடக்கூடாது என்று கருதினார் அவர்.

ஆனால் ராஜேசுவரி ஏங்கினாள். கணவனைப் பார்த்தால் தேவலை என்று மருகினாள். பெற்றோரைக் காணவேண்டும் என்று உருகினாள். "சுவாமி!" என்று கை கூப்பி கண்களைக் குவித்தபோது, ரகுபதியின் உருவம் தான் அவள் மனக்கண் முன்னே தோன்றும். "என் மானசீக அழைப்பு எட்டும்! வருவார்! வந்துவிடுவார்!" என்று எதிர்பார்த்து எதிர்பார்த்து காத்தாள். கடிதப் போக்குவரவு தான் இல்லையே! மானசீகமான அழைப்புதானே அவனை இழுத்து வர வேண்டும் அவளிடம்? காரணமில்லாமல், வாசலில் ஏதாவது வண்டிச் சத்தம் கேட்டபோது, பரபரத்தாள், ரயில் கூவும் சத்தம் கேட்டால், "எந்த பக்கத்திலிருந்து வரும் ரயில்?" என்று யோசித்தாள். படுத்துக் கொண்டு, நடமாட்டமில்லாமல் இருந்த போதெல்லாம், சங்க காலத் தலைவி போல் தலைவனுக்காக ஏங்கினாள்.

வரவில்லை ரகுபதி. ஆனால், அன்பையெல்லாம் திரட்டி மனைவிக்குக் கடிதம் எழுதிவிட்டான். அதைப் படித்துக் கொண்டே புற்றுயிர் பெற்றுவிட்டவள் போல நடமாடத் தொடங்கினாள் ராஜேசுவரி.

கைப்புண் ஆறவில்லை. ஒற்றைக் கையாலேயே சித்ருவின் தோட்டியாக வேலை செய்தாள்! பவானியின் புடவைகளை உலர்த்தினாள். இலைகளை எடுத்தாள். முடிந்ததைச் செய்தாள்.

"கை ஆறவில்லையே! விரலை வெட்டி விடக்கூடாது என்று நான் பிரயத்தினப்படுகிறேன். முழங்கையோடு எடுத்துவிடும்படி நீ வைத்துவிடுவாய் போலிருக்கேம்மா!" என்று டாக்டர் கோபமாகக் கேட்டபோது தான் ராஜேசுவரி, தனக்கு வந்த விபரீதத்தை உணர்ந்தாள்.

பவானி கூட அப்பொழுது தான் உணர்ந்தாள்; சாரதாம்பாளும் 'அப்படியா?' ஆச்சரியப்பட்டாள்.

கண்களில் நீர் மல்கி நின்றாள் ராஜேசுவரி.

"டாக்டர், பிடில் வாசிக்க முடியுமா டாக்டர்?" அவளைக் கூர்ந்து பார்த்தார் துரைசாமி.

"விரல் வேண்டாமே அம்மா, குரல் போதுமே!" என்று சொன்னாரே, பலிக்கப் போகிறதா கடவுளே!" என்று துடித்தாள் ராஜேசுவரி.

டாக்டர் வெகு நிதானமாக கையில் பேண்டேஜ் போட்டுக் கொண்டே, "முடியுமம்மா முடியும்! ஆனால் உன் கையில் தானிருக்கு முடிந்ததும் முடியாததும்! நான் சொல்கிறபடி இருக்க வேண்டும்," என்று கூறி முடித்தார்.

"ஆகட்டும், டாக்டர். பிடில் வாசிக்க முடியும் என்றால் போதும் எனக்கு,"

"கவலைப்படாதேம்மா, முடியும்."

டாக்டர் சொன்னபடி இருக்க பவானியும் ராஜேசுவரியை அனுமதித்தாள். "என்ன கஷ்டமோம்மா பாவம், எனக்கு எத்தனை ஆசையாய்ச் செய்தாள்?" என்று இரண்டு நாட்கள் மதனிக்குப் புடவையை உடுத்திக் கொள்ள உதவிகள் செய்தாள். ஆனால் அத்துடன் தன் கடமை முடிந்துவிட்டதாக எண்ணிவிட்டாள் பவானி.

"அம்மா கூட பாவம், என்னைக் கவனிச்சுக் கொள்ளும்படியாகிவிட்டதே, அக்கா,

வெட்கமாயிருக்கு எனக்கு!" என்று ராஜேசுவரி சொன்னதன் பலனோ?

"மன்னி, உன் தம்பி பார்!" என்றாள் பவானி! "எங்கேக்கா?" என்று ஓடி வாசலுக்கு வந்த ராஜேசுவரி, சிறு பையன் ஒருவன், தன்னைப் போலவே தோளிலிருந்து தொங்கும் தூளியில் இடது கையைப் போட்டுக் கொண்டு செல்வதைக் கண்டாள்.

"ஏம்மா, மளமளன்னு மன்னி கண்ணிலே ஜலம் எப்படி ஊறுகிறது? தம்பின்னதும் பார்க்கணுமே ஓட்டம்!" என்று பவானி தன்னைப் பற்றி வேடிக்கையாக பேசியதையும் ராஜேசுவரி சந்தோஷமாக ஏற்றாள்.

ஆனால் பவானியின் ஆதரவு நீடிக்கவில்லை. "தடபுடாவென்று ஓடாமல் நடமாடலாம்," என்று டாக்டர் சொன்னதும் ராஜேசுவ_ரி மாமியாரை நாடிச் சமையலறையில் புகுந்தாள். சமையற்கார அம்மாள் தான், பவானியின் சொல்லம்புகளைத் தாங்காமல் போய்விட்டாளே! மாமியார் கூட, "சமையல்காரி பொறுப்பாளா சொல்! நான் வேணுமானால் பொறுப்பேன்!" என்று வருத்தப்பட்டு, "ஒத்தாசைக்கு இருக்கிறேனென்று வாய் நிறைய சொன்ன பெண் படுத்துவிட்டாள்; எனக்கு ஒட்டவில்லை!" என்று பாராட்டிப் பேசவில்லையா?

மாமியாருக்கு மனக் கஷ்டமும் உடற் சிரம்மும் கொடுத்துவிட்டதற்காக வருந்தி ராஜேசுவரி சமையலறைத் தான் நாடிப் போனாள்.

"மன்னி, வா இந்தண்டை! அப்புறம் கையில் நீர் கோர்த்துக் கொண்டு மறுபடியும் கிளப்பிக் கொள்ளாதா? எனக்கு ஒத்தாசையாக இரு, ஜலம், கிலம் படி இடமில்லை. நான் எங்கம்மாவிற்குக் கஷ்டம் தராமலிருக்க எனக்கு ஒத்தாசை செய்யேன்! எப்படியானால் என்ன?" என்றாள் பவானி.

இதுவும் சரியென்றுபட்டது. ராஜேசுவரி, பவானியின் தேவைகளை வடிகட்டினாள்.

பவானி சீட்டாட அழைப்பாள் மதனியை. இருவரும் ஆடும்பொழுது, தோற்றுப் போகும் நிலைமை வந்தால், பவானியின் முகம் சிவந்துவிடும். பவானி தோற்கக்கூடாது என்று அசிரத்தையாக ராஜேசுவரி ஆடினாள். அதற்கு, 'எனக்கு விட்டுக் கொடுக்கிறதென்ன?" என்று கேட்டாள் பவானி!

பவானிக்கு ஏன் இத்தகைய மனப்போக்கு என்று ராஜேசுவரிக்கு விளங்கவேயில்லை. "பாட்டுப்பாடிப் பார்க்கணும்!" என்று ஒரு நாள் ஆசை மீறி சொன்னாள் ராஜேசுவரி. " என் சிதாரும் வீணையும் எங்கேயோ இருக்கு, பார், முடிகிறதா வாசிக்க! சித்ரு தான் சிதார். இந்த ப்ரவீண் தான் வீணை இனிமேல்!" என்றாள். ராஜேசுவரிக்குப் பாட்டும் பிடிலும் தெரியும் என்ற நினைப்பே இல்லை போலும் பவானிக்கு.

"எனக்கு மாமியாருடன் சுற்றிக் கொண்டு உதவி செய்ய முடிந்தாலே போதும்! சீட்டாட்டம் வேண்டாம்!" என்று நினைத்தாள். பவானியின் அருகு இருக்க நடுக்கங் கண்டுவிட்டதனால்!

"வெளியே போய் வரலாமே வா, வீட்டிலிருந்து என்ன செய்யணும்?" என்று அழைத்துச் செல்வாள் பவானி. பாதி வழியில் சித்ரா நடக்கக் கஷ்டப்படுவாள். வலது தோளிலும், இடது தோளிலும் மாற்றி மாற்றி எடுத்துக் கொண்டு போவாள் ராஜேசுவரி. திரும்பும்பொழுது பாதிவழியில் இறக்கிவிடும்படி பவானி சொல்லுவாள். "கை வலியே இல்லை," என்று கொஞ்ச நாளாகச் சொல்லிக் கொண்டிருந்த ராஜேசுவரி, மீண்டும் தோள் பட்டையிலே இசிவும் நோவும் தலை எடுத்ததை உணரலானாள்! சொல்லலாமா என்று கூசினாள். சொல்லாவிட்டால் கை என்னாகுமோ என்று வெருவினாள். "கலை மகள் அகல மாட்டாள்; கற்ற வித்தை போகாது என்பார்களே! எனக்கு என்றாகுமோ ஈசா?" என்று வேதனைப்பட்டாள். உள்ளூர வேதனைகள் பல அரித்தெடுத்தன. கணவனின் உறவை ஆறுமாதமாக இழந்த ஏக்கமும், பெற்றோரின் ஆசைகளும் பாட்டு வாத்தியாரின் ஆசியும் ஆபத்தில் இருக்கும் துன்பமும், அதிகார உரிமைகள் கொண்ட பவானிக்கும் ஆதரவுள்ள மாமியாருக்கும் நடுவில் தத்தளிக்கும் அவதியும் ராஜேசுவரிக்குப் பொறுக்கமுடியாமல் போகும் ஒரு நிலைமை வந்தது.

'எதற்கும் ஒரு வரம்பு உண்டு! எதற்கும் ஒரு எல்லை உண்டு!' என்று அரற்றியது அந்தரங்கம்!

நடுநிலைமை வகித்து எல்லையை வகுக்கும் கணவன் அருகில் இல்லையே என்ற குறை அதிகமாகியது!

வாசற்புறத்து அறையில் மாட்டியிருந்த போட்டோவில் கணவனின் உருவம், ரகுபதியைப் பதினேழு வயதுப் பையனாகக் காட்டியது. மூக்குக் கண்ணாடியைப் போட ஆரம்பிக்கவில்லையாம் ரகுபதி. அந்த இடம் பிள்ளை முகம் ராஜேசுவரிக்கு இனம் தெரியாத இன்ப வேதனை அளித்தது. "இந்தப் பிள்ளைதான், ஆறு வருஷம் கழித்து என்னை பார்க்க வந்தார்! இந்த போட்டோவில் இருக்கும்போது நான் ஒருத்தி பிறந்திருப்பதே தெரியாது. என் எட்டு வயது போட்டோ ஒன்றை இருக்கிறதே, அதையும் இதையும் ஒரே அட்டையில் ஒட்டிப் பார்க்கணும்," என்று எண்ணினாள். படுத்தால், அந்த போட்டோ முகம் நிலவில் தோன்றும். படுத்துக் கொள்ளும் சமயத்தில் மூக்குக்கண்ணாடி அணியாத கணவனின் முகம் அதுதான்! அதுமட்டுமா? குளிக்க போகும்பொழுதும் மூக்குக் கண்ணாடி இராது!

ராஜேசுவரி, கணவன் ஸ்னானம் செய்யப் போகும்போது நீர் மட்டும்தான் இறைத்து வைப்பாள். துவாலை, சோப்பு முதலியன அவனே தான் எடுத்துச் செல்வான். ஆனால் எண்ணெய் ஸ்னானத்தின்போது மட்டும் சீயக்காய் கரைத்து, முதலில் தலைக்கு நீர் விட்டு விட்டு வருவாள்.

ஒருநாள் எண்ணெய் பூசிக் கொண்டிருந்தான் ரகுபதி. ராஜேசுவரி அடுப்பை புகைவிடாமல் ஊதிக்கொண்டிருந்தாள். "கண் எரியறது" என்று கண்ணைக் கசக்கிக் கொண்டான் ரகுபதி.

"கண்ணா?" என்று திடுக்கிட்டுத் தலை நிமிர்ந்தாள் ராஜேசுவரி.

"என்னான்னு கூப்பிட்டே என்னை! என்று கேட்டான் அவன், உறுத்துப் பார்த்து! .....இதே போட்டோ முகம்!

"கண் எரியறது என்று கண்ணைக் கசக்கினால் எரியாதா? குழந்தை மாதிரி . . . !" என்று மெல்ல கடிந்து கொண்டாள் ராஜேசுவரி!

பெற்றோருக்கு ரகசியக் கடிதம் எழுதும் நினைப்பு இல்லை. புறங்கூறும் மனைவியாகும் நோக்கமுமில்லை அவளுக்கு. "அம்மா! நான் செய்ய நினைத்த உதவியைச் செய்யக்கூட முடியாமற் போயிற்று. சிரமங் கொடுத்தேன்! நான் பிறந்தகம் போகட்டுமா?" என்று கேட்கக்கூடிய சலுகையும் அவளுக்கு இருந்ததாக்த் தோன்றவில்லை. ஆள்காட்டி விரலில் முன் பாதி வளைய மறுத்தது. பிடிலில் கை வைத்துப் பார்த்து வாசிக்க முடியுமா என்று பார்த்தாள். சுரீர் என்று சுண்டி இழுத்தது வலி.

"அம்மா, டாக்டரைக் கேட்கலாமோ?" என்று கண்ணீர் உகுத்தாள் ராஜேசுவரி. "தினமும் எண்ணெய் தடவி நீவி விடம்மா, வளையும். பச்சைப் புண்ணான விரலாச்சே, வலிக்காதா பின்னே! பயப்படாதே!" என்றார் அவர்.

பிறந்தகம் போக வேண்டும் என்ற ஆசை எழுந்தது, வலுத்தது. என்னென்னமோ நினைத்தாள்.

"ஏனம்மா, பிடில் இங்கே ஒன்று இருக்கிறதென்று உன் பிடிலை விட்டுவிட்டு வந்தாயா? சுருதி பெட்டியையாவது கொண்டு வரக் கூடாதா? நான் ஒன்று சொல்கிறேன், நினைவு வைத்திரு. வாசித்தாலும், வாசிக்காவிட்டாலும், பாடினாலும், பாடாவிட்டாலும், இரண்டு நாளுக்கொரு தடவை பிடிலைத் துடைத்து வை. சுருதிப் பெட்டியின் நாதம் வீணாகாமல் ஒரு தடவை சுருதி போட்டு, அதன் மடிப்புகளை சுத்தமாக வைத்து எடுத்து வை!" என்று சொல்லியிருந்தார் வாத்தியார்.

பவானி வந்த பிறகு பாட்டுப் பாடவில்லை, பிடில் வாசிக்கவில்லை. 'மறந்தோமே!" என்று நினைவு வரும் பொழுது, "மறக்கவில்லை! எனக்குத்தான் பாட்டும் பிடிலும் தெரியவே, தெரியாதே! நினைப்பானேன், ஏங்குவானேன்!" என்று தேற்றிக் கொண்டு, அறவே மறந்துவிட்டாள், சங்கீதத்தை. வாத்தியார் 'நினைவு வைத்திரு' என்று சொன்னதையும் உதறிவிட்டாள்! பிடிலையும் சுருதி பெட்டியையும் பார்க்காமலேயே, ரேடியோவிலிருந்து வரும் பிடிலில் நாதமும் இன்னிசைக் குரலும் செவியில் விழுந்ததுமே கண்ணீர் குமுறும் ஒரு நிலை கூட ஏற்பட்டிருந்த கொஞ்ச நாள்? எத்தனை சிரமப்பட்டு, "செவியே, கேளாதே! நெஞ்சே, துடிக்காதே!" என்று அறிவுறுத்தினாள்? எப்படித் தன்னுடைய உடைமைகளான இசைக்கருவிகளை எடுப்பாள்?

வாத்தியார், "தூசி படியாமல் வை!" என்றார். ராஜேசுவரியோ, "தூசி தட்டி வைத்தாலே, மனசில்

மாசு படிந்துவிடும்!" என்று வெருவினாளல்லவா?

குருதுரோகம் செய்தால் கற்ற வித்தை போய்விடுமாமே! ஐயோ, அதனால் தானா விரலுக்கு வந்தது ஆபத்து! பேசக்கூட குரல் எழும்ப மறுக்கிறதே! என்று ராஜேசுவரி துடித்தாள். தெய்வம் தனக்கு இன்பமும் ஆறுதலும் தர ஏன் மறுக்கிறது என்று கசந்து கொண்டாள்.

தெய்வம் மறுக்கவில்லை என்பதையும் கண்டாள். நடராஜன் தம்பதிகளின் நெருங்கிய உறவினர் ஒருவர் தமது வீட்டில் நடக்கவிருந்த திருமணத்திற்கு, ராஜேசுவரியையும் அவள் புக்ககத்தாரையும் அழைத்தார். ராஜேசுவரியை, நாலு நாள் முன்னதாகத் தம் அகத்திற்கு அழைத்துச் செல்ல விரும்பினார். வாசலில் அவர் பேசிக் கொண்டிருந்த போதே பவானி உள்ளே வந்தாள்.

"நான் மன்னியைப் பழனிக்கு அழைத்துக் கொண்டு போகணுமென்று இருக்கிறேன்!" என்று குறுக்கிட்டாள் பவானி. அவளுடைய மகள் சித்ராவிற்கு தலை முடியிறக்கும் பிரார்த்தனையை இன்னும் தாமதிக்க முடியாது என்றாள்.

"நான் வந்து என்ன செய்யப் போகிறேன் அக்கா?" என்று கேட்டாள் ராஜேசுவரி. தன்னை அழைத்துப் போக உறவினர் வந்துள்ள செய்தியின் மகிழ்ச்சியை முந்தி கொண்டது கவலை!

"உன் பிறந்தகத்துக்காரர்கள் கூப்பிடுகிறார்கள் என்றதும் மாறிவிட்டாய் பார்த்தாயா? இரண்டு நாளைக்கு முந்திதானே சொல்லிக் கொண்டிருந்தேன்! மறந்துவிட்டாயே! என்ன சொன்னேன், எதற்கு நீ 'ஆகட்டும்' என்று தலையாட்டினாய் சொல்லு!"

ராஜேசுவரி கண் கலங்கவில்லை. "பழனிக்குப் போகிறதை சீக்கிரம் முடித்துவிடணும். பழனி வரை போய் மதுரைக்குப் போகாமல் வர முடியாது. என் மாமியார் வீட்டையும் எட்டிப் பார்த்துவிட்டு, சட்டுப்புட்டென்று வந்துவிடணும்; குழந்தை பெரிசாகிவிட்டால், "போதுமே பிறந்தகவாசம், இங்கிருந்தே போகலாம், நாகப்பூருக்கு' என்று மாமியார் மதுரையிலேயே உட்கார்த்திவிடுவார்!" என்றுதான் பவானி சொன்னாள் ராஜேசுவரியிடம். "நீ வருகிறதனால் எனக்கும் அனுகூலம். இரண்டு குழந்தைகளோடு நான் மாமியாரகத்தில் திண்டாட வேண்டாம், பார்!" என்றாள்.

பழனியாண்டியின் புனிதமான மலைக்குப் போகும் ஆர்வமும் இருந்ததால் ராஜேசுவரி சந்தோஷமாக ஆமோதித்தாள்.

ஆனால் இன்று, தாற்காலிக விடுதலை கிடைக்கும் என்ற நிலைமை ஏற்பட்டபோது, ராஜேசுவரிக்கு பழனியாண்டவனின் தரிசனங்கூட வேண்டாம் என்று தோன்றிற்று.

"'நான் 'ஆகட்டும்' என்று ஒப்புக் கொண்டேன் அக்கா. ஆனால் அப்பொழுது, இந்தக் கலியாண சமாசாரம் தெரியாதே!" என்றாள் ராஜேசுவரி.

"பார்த்தாயா, அது தானா உனக்கு முக்கியம்! என் பேச்சு லட்சியமில்லையா? அறையிலிருந்த போது தான் சித்ராவின் பொறுப்பை ஏற்க முடியவில்லை இப்பொழுது என்ன சொல்கிறாய் பார்!"

ராஜேசுவரி யோசித்தாள். தாற்காலிக விடுதலைக்காக, இப்பொழுது பவானியின் பேச்சைத் தட்டிவிட்டுப் போனால்? . . .

"சரி அக்கா, போகவில்லை நான்!"

சாரதாம்பாள், "அப்பா, முடிந்ததா யோசனை!" என்று கூறும் சமயம், துரைசாமி, "தட்டு கொண்டுவாம்மா," என்று சொல்லிக் கொண்டே வந்தார். சம்மந்திக்குச் சொந்தக்காரர் வந்திருப்பதையும், அவர் ராஜேசுவரியை அழைத்துச் செல்ல விரும்புகிறதையும் மனைவியிடம் சொன்னார்.

"தெரிந்தது, . . தட்டு எதற்கு! வெற்றிலை பாக்குப் பழம் கொண்டு வந்திருக்கிறாரா என்ன?"

"ஆமாம், சம்மந்தி மரியாதை!"

"சரி, காப்பி போட்டு அனுப்புகிறேன்."

ராஜேசுவரி தட்டுடன் நின்றாள். வாசலுக்குப் போய்ப் பேசத் தயங்கினாள்.

துரைசாமி, "வாம்மா, பார்க்கட்டும் உன்னை! வந்திருக்கிறாரே அபிமானமுடன்!" என்று அழைத்ததும், தட்டு சகிதம் ஓடினாள் ராஜேசுவரி. சம்பிரதாயமாகப் பேசி, சம்மந்திக்கு மதிப்பு வைத்து ராஜேசுவரிக்கும் கனிவு காட்டினார் வந்த முதியவர்.

"விசாலம் என் கைமேலும் தோள் மேலும் தவழ்ந்து விளையாடி வளர்ந்த பெண்; அவளுக்குப் பதிலாக நீங்கள் இவளை அனுப்ப வேண்டும், மறுக்கக் கூடாது. என் மனைவி கூட சொல்லச் சொல்லி அனுப்பினாள்" என்றார் அவர்.

தாயின் பெயரைக் கேட்டதும் நெஞ்சு விம்மியது ராஜேசுவரிக்கு.

'போய் வருகிறாயாம்மா?" என்று கேட்டார் துரைசாமி.

பேசினால் தொண்டையிலிருந்து குமுறல் எழுமோ, என்று அஞ்சி, தலையை ஆட்டினாள் ராஜேசுவரி.

புரியவில்லை துரைசாமிக்கு. என்ன நினைத்தாரோ, அங்கிருந்து அப்பால் போனார். மனைவியின் அபிப்ராயம் கேட்வோ?

"ஏனம்மா ஏன், நான் யாரோ என்று யோசனையா? பார்த்திருக்கிறாயே என்னை பரிசல் துறையில்?"

"தெரிகிறது, மாமா!"

"மாமனார் அனுப்புகிறேன் என்கிறார், நீ யோசனை செய்வானேன்?"

"அக்கா பழனிக்கு என்னைக் கூட்டிக் கொண்டு போகிறேன் என்கிறார்; நானும் பழனி பார்த்ததில்லை!"

"வந்தப்புறம் போகலாமே!"

"நாளில்லை . . . "

"பழனி எப்போதும் இருக்கும். என் வீட்டில் கலியாணம். வர வேண்டாமா? வந்தாலும் நீ வரும்படியாக ஏற்படணுமே! பழனிக்கு எப்படியும் நீ ஆண்பிள்ளைத் துணையில்லையே! அப்புறம் ஆண்டவனைப் பார்த்தால் போச்சு! தம்பதியாகவே போகலாம் பிற்பாடு!"

"ஆம். ஆனால், அக்காவின் குழந்தைகள் இரண்டு சின்னது; கொஞ்சம் ஒத்தாசையாக இருக்கலாமே என்று பார்க்கிறேன்."

"அக்காவா?"

"அக்கா . . . நாத்தனார்."

"நீ பார்த்துக் கொள்ளாவிட்டால் நடக்காதா என்னம்மா? இஷ்டமில்லையா சொல்லு, நான் வற்புறுத்தமாட்டேன். நடராஜனின் பெண், நீ வேற்று மனுஷி இல்லை என்று ஆசையாய் வந்தேன் . . . "

'கோபுரத்தை பொம்மைதான் தாங்குகிறதா? பெருமையடித்துக் கொள்கிறாயே! நொண்டிச்சாக்குச் சொல்லுகிறாயே, வேற்றுமை பாராட்டுகிறாயே!' என்று அவர் கேட்கிறாரோ, என்று பதறினாள் ராஜம். பதிலளிக்கும் வகை அறியாமல் தத்தளித்தாள்.

"இஷ்டமில்லை போலிருக்கு உனக்கு; கையில் கூட காயமாமே, உனக்கு கைக்கு தடவுகிற மருந்தையும் கையோடு வாங்கிக் கொண்டு அழைத்துப் போவோம்னு நினைச்சேன்...."

துரைசாமி அய்யர் வந்துவிட்டார். பவானி, "மன்னி போகமாட்டேனென்று சொல்லியிருக்கிறாள்!" என்று சொன்னதற்கேற்ப சம்பாஷணை நடப்பதை கவனித்துக் கொண்டு வந்தார்.

"நான் உள்ளே போகட்டுமா மாமா?" என்று சலுகையோடு கேட்டுவிட்டு, வந்துவிட்டாள் ராஜேசுவரி.

பவானிக்காக பெருந்தியாகம் செய்துவிட்டதைப் போன்று பூரிப்பு ஏற்பட்டதனால், கண்

கலங்காமல் மனங்கலங்காமல் விளங்கினாள் ராஜேசுவரி.

ஆனால் பவானி, ஓடுகிறவளை நிறுத்திவிட்டு, கடிக்கத் தொடங்கினாள்!

"மன்னி, குழந்தைக்கு குளிப்பாட்டி எத்தனை நாழியாச்சு! சாம்பிராணி பொடி போட தணல் எடுத்து வர எத்தனை நேரம்! என் குழந்தைக்கு சளி பிடித்துக் கொண்டு ஏதாவது நடந்துவிட்டால் என் வயிறு தானே கொதிக்கும்?" என்று கூப்பாடு போட்டாள் பவானி.

குழந்தைகளைப் பேணுவதிலும், போற்றுவதிலும் ஒரு நாளும் வஞ்சனை நினையாத ராஜேசுவரி, கையில் தணலுடன், நெஞ்சில் நெருப்புடன் சிலை போல் நின்றுவிட்டாள். பொலபொலவென நீர் வழிந்து ஓடியது கன்னங்களின் மீது.

"ஏன் கொண்டாயேன்! நீயும் அழுவாய் என்று தெரியணுமா?"

என்ன அர்த்தத்தில் பவானி பேசினாள் என்பது விளங்காத போதே, ராஜேசுவரியினால் தாளவில்லை.

"ஐயோ அக்கா! சொல்லாதேங்கோளேன்!" என்று விம்மல்களுக்கிடையே கதறிவிட்டு, "அம்மா!" என்று வாய்விட்டு அழுதாள் ராஜேசுவரி.

சாரதாம்பாளுக்குப் பொறுக்கவில்லை. வரம்பு தாண்டிவிட்டது பொறுமை. "பவானி! உனக்கு நன்றாகவே இல்லை இது! யோசித்துப் பேசுகிறாயா? உன் நாத்தனாரிடம் நீ ஒரு சொல் கேட்பாயா இப்படி? ஒரு துரும்பு எடுத்து போட்டாயா? வீணாகச் சொல்லாதே! இந்த மாதிரி ஒரு மதனியைப் படைத்ததற்கு நீ எத்தனையோ புண்ணியம் செய்திருக்கணும்!" எட்டிப் பார்த்து, இப்படிச் சொல்லிவிட்டு, தலையை உள் இழுத்துக் கொண்டு போய்விட்டாள் சாரதாம்பா

'அம்மா, நீங்கள் சொல்கிறீர்களா இப்படி! நான் பாக்கியலட்சுமி!' என்று ஆனந்தத்தினால் திகைத்து நின்றாள் ராஜேசுவரி.

"அம்மா, நீயே என்னைவிட்டுக் கொடுத்துப் பேசிவிடு, நாளைக்கு எனக்கு நல்ல மதிப்பு இருக்கும்!" என்று அழத் தொடங்கிவிட்டாள் பவானி.

"நியாயம் என்று ஒன்று இல்லையா? எத்தனை செய்தும் நீ திருப்திபடவில்லையே என்று அவளுக்குத் துக்கமாயிருக்கு, பாவம் சிறிசுதானே! நீ யோசிக்கவேண்டாமா என்ன?" என்று மீண்டும் எட்டிப் பார்த்துச் சொல்லிவிட்டு ஆமை போல சமையலுள்ளேயே பதுங்கிவிட்டாள் சாரதாம்பாள்.

ராஜேசுவரியின் உள்ளத்தில் ஒரு விசித்திர மாறுதல் ஏற்பட்டது.

'பனைமரத்தில் தேள் கொட்ட தென்னை மரத்தில் நெறி ஏறியது!" என்று ஒரு வசனம் உண்டு. அதுபோல ராஜேசுவரியின் மனதில் ஒரு தொடர் பற்றி வைராக்கியம் ஏற்பட்டது!

"என் கணவரைப் போல நானும் இருக்கவேண்டும். எங்கள் இருவருக்கும் குழந்தை ஆசையே வேண்டாம். வேண்டவே வேண்டாம். பிறருக்குத் துன்பமளிக்கக் கூடிய தாய்மையும், குழந்தைப் பாசமும் வேண்டாம். பெற்றவர்களுக்கு இன்பமளிக்காத குழந்தைகள் வேண்டாம்! எனக்கு கை நேராகட்டும்; குரல் இனிமையும் கைத்திறனும் செறிந்த நாதோபாஸனையும் நாதனின் தொழுகையும் போதும் என் வாழ்விற்கு!" என்று முடிவு கட்டினாள். கைக்கு ஏற்பட்ட ஆபத்தினால், இசையார்வம் கொழுந்துவிட்டு எரிந்தது.

காவின் கீழ் சிதறிவிட்ட நெருப்புத் தணல்களைப் பொறுக்கிச் சட்டுவத்தில் போட்டு, "இந்தாங்கோ அக்கா" என்று கொண்டுபோய் வைத்துவிட்டு முகத்தைக் குளிர்ந்த நீரால் அலம்பிக் கொள்ளச் சென்றாள்.

தாழ்வாரத்தில் சூழ்ந்திருந்த சாம்பிராணிப் புகையைப் போல அமைதி மணங்கமழ்ந்தது அவள் உள்ளத்திலே. பவானி குழந்தையைத் தொட்டிலிட்டுவிட்டு தாயை நாடிப் போனாள்.

"அம்மா, எனக்கு மனசுவிட்டுப் போச்சு. பிறந்தகம் என்கிற பாசமே வரண்டு போச்சு. நீ கூட என்னைவிட்டுக் கொடுத்துவிட்டாய். மன்னி ரொம்ப நல்லவள் தான்; நான் இல்லையென்கிறேனா? ஆனால், பார் அன்றைக்கு வந்தாரே, அவரிடம் என்ன சொன்னாளாம்

தெரியுமா? நாத்தனார் குழந்தைகள் சின்னது, பார்த்துக்கொள்ளணும், வர மாட்டேன் என்றாளாம்; அவர் என்ன நினைப்பார்! இவளிடமே விட்டுவிட்டார்களா குழந்தைகளை, பெற்றுவிட்டு? என்று நினைப்பாரா இல்லையா?'

"அப்படிச் சொல்லியிருக்க மாட்டாள்! பதட்டப்படாமல் பேசேன்!" என்று மாமியார் சொன்னதையும் கேட்டாள் ராஜேசுவரி.

'இது பரஸ்பர நம்பிக்கை. அன்பு, ஒற்றுமை! என் மாமியாருக்குத் தெரியாதா என் மனசு? புறம் கூறிவிட்டேன் என்றால், அதை நானே வந்து சொல்லிக் கொண்டிருப்பேனா அக்காவிடம்! நான் ஒளிக்காமல் சொன்னேன் அவரிடம், சொன்னதை ஒளிக்காமல் அக்காவிடம் சொன்னேன். தப்புப் பேசவில்லை நான் அம்மா உணர்ந்து கொண்டுவிட்டார்!' என்று இறுமாந்தாள் ராஜேசுவரி.

பவானி என்ன சொன்னாள் என்பதைக் கவனிக்கவில்லை. ஏன் கவனிக்க வேண்டும்? வானத்தின் மீது ஜொலிக்கும் விண் மீன்களைப் பாராமல், செம்படவர்கள் குவித்திருக்கும் மீன்களைப் பார்த்துக் கொண்டு என் கடற்கரைக்கு வரவேண்டும்? பரந்து கிடக்கும் கடலைப் பாராமல், ஊன்றியிருக்கும் காலை பறித்திழுப்பது போல பயமுறுத்தும் அலை நிரை ஏன் பார்க்க வேண்டும்? ராஜேசுவரி காடு மலைகளையும், மேடு பள்ளங்களையும் கடந்து மணற்பரப்பிற்கு வந்துவிட்டாள். கடற்கரைக்கு வந்து விட்டாள். "காவிரி போல் விளங்கிவிட்டேன்!" என்று பெருமிதங்கொண்டாள். கடலரசனைப் போய்ச் சேர்ந்து விட்டால் போதும்" என்று நினைத்தாள்.

விதி சிரித்தது. பேதையே! நீ நதியல்ல! பெண்! சம்சாரம் என்னும் சாகரத்தைக் கடக்க வேண்டும். அலைகடலில் இறங்கிவிட்டாய்! ஒரு நீர் துளிதான் நீ சுவைத்திருக்கிறாய்!" என்று எச்சரித்தது.

## 27

நாற்பது நாள் மகவும், இரண்டரை வயதுக் குழந்தையும் ராஜேசுவரியின் பொறுப்பில் இருந்தன. தோளில் ஒரு மகவு, மடியில் ஒரு குழந்தை. கூடத்தின் சுவரோரம் அமர்ந்திருந்த ராஜேசுவரியின் இந்தக் கோலங்கண்டு, ஒரு தினுசாகப் பார்த்துவிட்டு, அவளைக் கடந்து உள்ளே சென்றாள் ஒரு யுவதி. பவுடர் பூச்சும், பெரிய கொண்டையும், நிதானமான நடையும், பெருமிதப் பார்வையும் கொண்ட அவள், "மன்னி எங்கே, வந்திருக்காளாமே!" என்று முழக்கிக் கொண்டே ஊஞ்சற் பலகையில் அமர்ந்து கொண்டாள்.

"ஓ, கௌராவா! வா, வா! அம்மா, கௌரா வந்திருக்கிறாள்! வா" என்று உற்சாகமுடன் சொல்லிக் கொண்டே சரஸ்வதி கௌராவின் வருகைக்கு அஞ்சலி கூறிவிட்டான்.

'மன்னி எங்கே காணோம்!"

"மன்னியா? நேற்று சாயங்காலம் வந்தாள்; இன்று சாயங்காலம் வரைக்கும் இருந்தாளே அது போதாதா? யாரையோ பார்ப்பதற்காக அரைமணி முந்தி தான் போனாள்"

"ஹரே ராமா? அரைமணிதானாச்சா போய்! ஒரு காரியமாய் வந்தேன். உன் மன்னியிடம், என் மன்னிக்காக ஒரு சந்தனப் பேழை கொடுத்தனுப்பணும். சௌகரியப்படுமா என்று கேட்டு, கொடுத்தனுப்பலாம் என்று பார்த்தேன்."

"உன் மன்னி கல்கத்தாவில் இல்லையோ? ஓகோ, நினைவு வந்தது. நாக்பூரிலா இருக்கிறாள் இப்பொழுது?

"ஆமாம்,"

"எப்பொழுது வருவாள்?"

"வருவாள், ஒரு மணி நேரத்திற்குள். கூடத்திற்கு வாயேன் கௌரா, மன்னியின் மன்னியைப் பார்த்துப் பேசக் கூடாதா? வா!"

"யாரு? மன்னியின் மன்னியா? மிஸ்ஸஸ் ரகுபதியா?"

இப்படித்தான் கேட்டுவிட்டு கௌரா வாயைப் பொத்திக் கொண்டு பிரமித்து விழித்தாள் என்பதை ராஜேசுவரி எப்படி அறிவாள்! அவள் தான் நகராமல், நகரமுடியாமல் குழந்தைகளை தூங்கப் பண்ணிக் கொண்டிருந்தாளே!

"ஆமாம் ... ஏன் அப்படி முழிக்கிறாய்? நீ பார்த்த்தில்லையோ ராஜேசுவரியை!"

"கேள்விபட்டிருக்கிறேன்! ரகுபதியையும் பார்த்ததுண்டு! ஆனால், யாரோ என்று நினைத்தேன் ... குழந்தைகள் இரண்டும்!"

"மன்னி குழந்தைகள் தான்."

"நல்ல வேளை. என் குழந்தை ரமாவுக்கு, 'பேபிஸிட்ட'ராக இருக்க முடியுமா என்று நேரடியாகக் கேட்டுவிடாமற் போனேனே!" என்று கௌரா மெதுவாகப் பேசினாலும், அந்தக் குரலில் தயக்கமில்லை. ராஜேசுவரிக்குப் புரியாது என்று எண்ணம் போலும்! ராஜேசுவரி புரிந்துக் கொண்டுவிட்டாள். "கூலிக்குக் குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளுகிறவள்!" என்று அந்த மங்கை தன்னை நினைத்துவிட்டதை உணர்ந்தாள். 'ஆயா' என்று சொல்லும்படி நான் கிழடு தட்டிவிடவில்லையே என்று சந்தோஷப்பட்டாள்!

கௌராவும், சரஸ்வதியும் வரும் அரவங்கேட்டும் தோள் மீது துஞ்சும் குழந்தையை எடுத்துவிடாமல், ஒரு கையினால் சித்ருவை மட்டும் மடியிலிருந்து இறக்க முயன்றாள் ராஜேசுவரி.

"ஐயோ, பாவம்; இரும்மா, நான் வந்துவிட்டேன்!" என்று கூவிக் கொண்டு சரஸ்வதி விரைந்து வந்தாள். உதவி செய்தாள். மகவையும் வாங்கிக் கொண்டு, "ராஜம், வா, உட்காரு" என்று அழைத்து சோபாவில் அமர்த்தினாள். கௌரா ராஜேசுவரியை அடிக்கடி பார்த்துக் கொண்டே சரஸ்வதியுடன் ஏதோ பேசிக் கொண்டிருந்தாள்.

புடவைத் தலைப்பினால் முகத்தைத் துடைத்துக் கொண்டு ஜானம்மாள் வந்து சோபாவில் உட்கார்ந்ததும், ராஜேசுவரி, "மாமி, நான் ஏதாவது போய் கவனிக்கட்டுமா?" என்று கேட்டாள்.

ஜானம்மாள் ராஜேசுவரியைத் திரும்பிப் பார்த்தாள் கனிவுடன். "ஒரு அரைமணி சும்மாயிருக்க முடியாதடி பெண்ணே! என் நாட்டுப் பெண்ணுக்கு நேர் விரோதமாய் இருக்கிறாயே!" என்று செல்லமாகக் கடிந்துவிட்டு, கௌராவிடம் சொல்லிக் கொள்வது போல, தன் ஆத்திரத்தை வெளியிட்டுவிடத் தொடங்கினாள். "பாரம்மா, கௌரா, வந்து இருக்கிறது இரண்டு நாள். சற்று வீட்டில் தங்கி, கலகலன்னு பேசினால் என்ன? மத்தியான்னமெல்லாம், மலையேறி வந்த களைப்பு என்று படுத்துக் கொண்டிருந்தாள். சரி, இருக்கட்டும், சாயங்காலம் சற்று வீட்டிலிருக்கக்கூடாதா? போய்விட்டாள். காலையில் ஸ்னானம் பண்ணிவிட்டு அப்படியே ஈரத்துண்டைத் தரையில் வீசிவிட்டுப் போனாள். மன்னி எடுத்து வைக்கணுமாம், எடுத்து வைத்தாள் இவள். அடுத்தாற்போல் என்னண்டை வந்து, 'அம்மா, கறி நறுக்கின கையோடு எடுத்திருக்கக் கூடாதோ? கத்தரிக்காய்க் காம்பிலிருக்கிற முள் குழந்தை கையில் படத் தெரிந்தது! ஸெப்டிக் ஆகிவிடும். மன்னிக்கு ஆகிவிட்டது பாருங்கள் எத்தனை விபரீதமாய்!" என்று கேட்கிறாள்! மன்னிமேலே கரிசனம் எத்தனை! போதும்! கௌரா நீ என்ன வேணுமானால் நினைத்துக் கொள்! நாங்கள் மாமியாரும் நாத்தனாரும், அவளிடம் கேட்ட பேச்சு, அவள் தன் மன்னியிடம் கேட்டாளோ, தற்கொலை செய்து கொண்டுவிடுவாள். இந்தப் பெண் ராஜம் ஆயிரத்தில் ஒரு பெண். இல்லை, இல்லை..... என் நாட்டுப் பெண் லக்ஷத்தில் ஒரு பெண்! அப்படிப்பட்டவளை நான் கண்டதேயில்லை!"

சரஸ்வதி அடக்கினாள் தாயை. 'அம்மா, சும்மா இரேன்! மன்னி வந்திருக்கிறது இரண்டு நாள் என்று சொல்லிவிட்டு, அந்த இரண்டு நாளில் நாம் தான் எதற்குப் பொறுமையை விடணும்!"

"ஆமாம், மாமி" என்றாள் கௌரா.

இரண்டு நிமிஷங்கள் தான் ஜானம்மாள் ஓய்ந்தாள். "என் பிள்ளையையாவது அவள் மதித்தால் போதுமம்மா; ஆனால் அது கூட இல்லை போலிருக்கே! போனவிசை வந்தபோது, 'அம்மா, தட்டைப் பருப்பு சாம்பார் வை!' என்றாள் சத்யம். "வேண்டாம்மா, மசமசவென்று சாப்பிட்டு உடம்புக்கு வந்தால், என்ன செய்கிறது! ரயிலிலே போயாகணுமே இன்னும்! லீவு இன்னும் தருவானா? என்று கேட்டாள். ஆமாம், நிஜந்தான் அம்மா" என்கிறான் சத்யம். "கொஞ்சமாய்ச் சாப்பிட்டால் போச்சு, வை!" என்று கூடச் சொல்லத் தெரியவில்லையே அவனுக்கு!"

"அம்மா, நமக்குத் தான் மானக்கேடு, சொல்லாதேயேன்!" என்றாள் சரஸ்வதி.

ராஜேசுவரி, கௌரா என்ன சொல்லப் போகிறாள் என்பதை எதிர்பார்த்திருந்தாள். பவானியின் மீது புகார்கள் தொடுக்கும் ஜானம்மாளை நம்புவதா, இரண்டு நாள் வந்து தங்கினவளை தூஷிக்க வேண்டாம் என்று சரஸ்வதி சொன்னதை நம்புவதா? கௌரா கூட, "வேண்டாம் தூஷணை" என்று சரஸ்வதியுடன் ஆமோதித்தாளே!

கௌரா சிறிது நேரம் முறுவலுடன் மூவரையும் பார்த்தாள். பார்த்துவிட்டு, "மாமி, பவானிக்கும் தான் மானக்கேடு! மாமியார், என்று நினைத்து மரியாதை செய்ய வேண்டாம். வயதில் பெரியவர் என்று மரியாதை செய்யக்கூடாதா என்ன? சுதந்திரமாக வேலை செய்கிற பெண், ஆபீஸில் ஆபீஸருக்கு மரியாதை செலுத்துகிறாள். நர்ஸ் டாக்டருக்கு மரியாதை செய்கிறாள். புரொபஸர் அம்மாள், பிரின்ஸ்பாலுக்கு மரியாதை செய்கிறாள்! மரியாதை செய்கிறதனால் இழிவா?" என்று கேட்டுக் கொண்டே இருக்கையில் பவானி வந்து சேர்ந்தாள்.

"ஓ, கௌரா ராஜனா!......" என்று குதூகலமாகக் கேட்டுக் கொண்டே பவானி சோபாவை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தாள்.

ராஜேசுவரி வெறிக்க நோக்கினாள் பவானியை. பதினோரு மாதங்கள் புக்கத்திலிருந்திருக்கிறாள் அவள். ரேடியோவினருகு இருக்கும் நாற்காலியில் ஒரு நாளும் உட்கார்ந்ததில்லை. வானொலியைப் புரட்டும்போது கூட உட்கார்ந்ததில்லை!

"அம்மா, சித்திரா பால் சாப்பிட்டாச்சா? ஜலம் கொஞ்சம் கூடக் கொடுத்தீர்களா? எனக்கு இதெல்லாம் சித்தே பயம், கௌரா. மந்தந்தட்டிக் கொண்டுவிடாதே...... பால் வித்தியாசம் பரவாயில்லையே! ராஜம், சித்தே போய்ப் பார், வாயைத் திறந்துண்டு தூங்குகிறாளோ என்னமோ, கொசு புகுந்து விடப்போகிறது. கொசுவலை எல்லாம் எங்கே கொண்டு வர முடிகிறது நாலு நாளுக்காக! நேற்று பழனியில் ஓட்டலில் எத்தனை கொசு! அப்பப்பா, எங்கப்பா போதும்டாப்பா பழனியாண்டவா என்று பிரலாபிக்கத் தொடங்கிவிட்டார். நானும் கண்ணை மூடவேயில்லை. ஆனால், மன்னி மட்டும் எப்படியோ, தூங்கு தூங்கு என்று தூங்கிவிட்டாளம்மா!.... ராஜம், வருகிறாயே, அப்படியே கொஞ்சம் தீர்த்தமும் கொண்டு வந்து விடு!"

பவானியின் பேச்சிற்கு ஒரு முடிவு வந்தது போல தோன்றியதும், கௌரா, பவானியைப் பார்த்துச் சிரித்து, " நீ பேசியே தொண்டை வரண்டுவிட்டது!" என்றாள்.

"ஆமாம்மா, எனக்குப் பேசிப்பேசியே 'வீக்னஸ்' வந்துவிட்டது! பேசாமல் இருக்கவும் முடியவில்லை என்றால், வெகுளித்தனமாகப் பேசிவிட்டு பேச்சும் வாங்கிக் கொள்ளுவேன்!" என்று பெருமையாகச் சிரித்தாள் பவானி.

வேறு யாருமே சிரிக்கவில்லை. கௌரா எழுந்தாள். "நீ பேசுகிறதைக் கேட்டால் சிரிப்பு வருகிறது, பவானி. போய் வருகிறேன். மாமி, எங்கே சரஸ்வதி, பவானியின் குழந்தைகளையும் மிஸ்ஸஸ் ரகுபதியையும் பார்த்துவிட்டுப் போகிறேன்."

கௌராவிற்கு விடை கொடுக்க ராஜேசுவரியே மெல்ல புன்னகையுடன் வந்துவிட்டாள். எளிய புடவை. எளிய தோற்றம். செழிப்புப் போதாது என்று பறையையும் முகபாவம். கண்களில் மட்டும் ஒளி.

"குழந்தைகளைப் பாருங்கோ! சித்ராவிற்கு முடியிறக்கியிருக்கு . . . நன்றாயிருந்தது சுருட்டை மயிர்."

ராஜேசுவரி சொல்லி முடிப்பதற்குள் பவானி, "முடியிறக்குவதற்கு முந்தி போட்டோ எடுத்தாச்சு. புக்ககத்திற்குக் கொடுக்கணும்னே எடுக்கச் சொன்னேன்," என்றாள் கௌராவிடம்.

ஜானம்மாள், "பெரிய காரியம்" என்று முணுமுணுத்துக் கொண்டே சென்றது ராஜேசுவரியின் செவியில் விழுந்தது. அருகிலிருந்து கொண்டே, 'புக்ககத்திற்கு' என்ற பவானி போட்ட சொல் அழகற்று தொனித்ததை எப்படி ராஜேசுவரி வெறுத்தாளோ, அதே போல ஜானம்மாவின் முணுமுணுப்பையும் வெறுத்தாள்.

அன்றிரவு துயில் கொள்ளப்படுத்த ராஜேசுவரி, முன் தினம், கொசுக்கடி அறியாமல் தான் தூங்கு தூங்கு என்று தூங்கிய தவறுக்கு ஈடு செய்ய விரும்புகிறவள் போல, நெடு நேரம் விழித்திருந்தாள்.

பவானியே சொல்லிவிட்டாளே! "என் படுக்கையை விரித்து வைத்துவிடு மன்னி, வழக்கம் போல! நான் என்ன சொல்லியிருக்கிறேன் தெரியுமா அவரிடம்? போன விசை வந்தபோது, 'எட்டுமணிக்கு வருவான் வேலைக்காரன்' என்று படுக்கையை சுருட்டாமல் வரணுமா என்று கேட்டார்! 'தீராது, யாருமில்லை' என்றால் தான் நாம் செய்து கொள்ள வேண்டியது! என்று சொன்னேன். நீ இன்றைக்குப் போட்டு வைத்துவிடு!" என்று பவானி சிறிதும் தயங்காமல் சொன்னாளே! நாத்தனாராச்சே, என்று பவானி சரஸ்வதியை மதிக்கிறாளா? இல்லையே?

உலக வழக்கம், உலக வழக்கம் என்று நினைத்து, கடமை, கடமை என்று கருதி, பவானிக்காக நடுங்கி ஒடுங்கியதெல்லாம் மடமை என்று துடித்தது, ராஜேசுவரியின் புண்பட்ட நெஞ்சம். "முன் காலத்து அரசர்கள், உலகத்தின் ஒரு சிறு பகுதியை ஆண்டாலும், 'மூவுலகாளும் மன்னர்' என்று தங்களுக்குப் பட்டஞ் சூட்டிக் கொண்டதில்லையா? பூவுலகம் எத்தனை பரந்தது என்பது தெரியாத தோஷம் தான்! நானும் தெரியாத்தனமாக நடந்து கொண்டுவிட்டேன்!" என்று துடித்தாள் வெகுநேரம்.

"உன்னைப் போல ஒரு நாட்டுப் பெண் எனக்குத் கிடைக்க கூடாதா?" என்று ஜானம்மாள் சொன்னாரே?

சத்யமூர்த்தியின் மனைவியாகவா? ஆகியிருந்தால்? பவானியிருக்கும் இந்த நிலைமை தான்! புக்ககத்துப் பற்றுதல் இல்லாமல், 'சீ என்பார் கூட அற்றுப் போயிருக்கலாம்! "உலகத்தில் யாரும் கெட்டவர் அல்லர்; சூழ்நிலை தான் உள்ளங்களை உருவாக்குகிறது. தந்தையின் காந்திபக்தி தான், ராஜேசுவரிக்கு மணவாழ்க்கையை அடிகோலியது. அது மட்டுமா? சிறப்பான மணவாழ்க்கையை உருவாக்கியது. ஒண்ட வந்தவர்களான வெள்ளையர்கள் புகுந்த நாட்டினை ஆண்டது போல நாட்டுப் பெண் புகுந்த வீட்டில் அதிகாரம் செலுத்தலாமா? வெள்ளையரின் கொடுமை போல இதுவும் கொடுமையன்றோ?" என்று கேள்வி பச்சை பசும் இதயத்தில் பதிந்திருந்ததனால், எத்தனை விவேகம், பொறுமை, நன்மை விளைந்தது! பவானி, ஏன் அப்படி நினைக்கவில்லை? நடராஜனுக்கு உள்ள காந்தி பக்தியை விட துரைசாமியின் காந்தி பக்தி ரொம்பக் குறைவுதான்! செயலில் இறங்கிவிட்டவரான துரைசாமி அய்யரின் மனதில் பக்தி பாரம் குறைவு! அதுமட்டுமல்ல! சாரதாம்பாள் ஒரு நாள் கூட மனதார காந்தி பக்தி கொண்டதில்லை. அதனால் வெள்ளையர் விவகாரமும் மற்ற விஷயங்களும் ஒரு பொருட்டே இல்லை.

ராஜேசுவரி இப்படித்தான் மனத்தத்துவ விளக்கம் செய்தாள்.

"நான் என் கணவரின் மதிப்பிற்கும் அன்பிற்கும் உரிய மனைவியாக, அவருடைய பெற்றோரின் ஆசை மருமகளாக நாலு பேர் மெச்சும் ராஜேசுவரியாக இருக்கிறேனே, இந்த பாக்கியம் எல்லோருக்கும் கிட்டுமா? கிட்டாது! ஹே முருகா, உன் சந்நிதி வந்தேன் நேற்று! எனக்கு என்ன அருள் செய்யப் போகிறாயோ நான் அறியேன்! என் மனம் கோழைத்தனம் நீங்கி, பொல்லா எண்ணங்கள் ஒழித்து, நிச்சலமாய் விளங்க அருள் செய்! நேற்று உன் சந்நிதியில், எனக்கு நலம் செய்' என்று வேண்டினேன். எனக்கு செய்யும் நன்மை பிறருக்கும், நன்மை பயக்குமாறு அருள் செய்! எனது இசையார்வமும், இசைத்திறனும் ஓங்கிச் செழிக்குமாறு அருள் செய்!" என்று பக்தியுள்ளத்துடன் அமைதியை நிலை நாட்டிக் கொண்ட பின்புதான் ராஜேசுவரி கண்ணயர்ந்தாள்.

**28**

பவானியுடன் ராஜேசுவரி மதுரையை விட்டுப் புறப்பட்டபோது, துரைசாமி அய்யர், சம்பந்தி அம்மாள் ஜானம்மாளிடம் தமாஷாக, "நீங்கள் ஜானகியம்மாள், லக்ஷ்மி, அதோ சரஸ்வதி; இதோ பவானி, உமா! உங்கள் மூவரின் அம்சமும், ராஜேசுவரியிடம் இருக்க வேண்டுமே! இருக்கிறதா?" என்று கேட்டார்.

"இல்லாமலென்ன? குணத்திலேயும் முகத்திலேயும் லக்ஷ்மி களை! வாக்கிலேயும் சரஸ்வதி, அறிவிலேயும் சரஸ்வதி. அம்பிகை மீனாக்ஷியைப் போல் திவ்வியமான குணம். எங்களுக்குத்தான் எங்கள் பெயர் பொருந்தவில்லையே தவிர, அவளுக்குப் பொருந்தியிருக்கு; ராஜ ராஜேசுவரிதான்" என்று கூறிவிட்டார் ஜானம்மாள்.

ராஜேசுவரி உணர்ச்சிப் பெருக்கு மேலிட்டுப் பேசமாட்டாமல் கண்களிலும் பாவனையினாலும் விடை பெற்றாள்.

"ராஜ ராஜேசுவரி! 'மிஸ்ஸஸ் ரகுபதி!" இரண்டு பெயர்கள் மதுரையில் செவியில் வியந்தனவே! 'ராஜாபாய் சர்வாதிகாரி!' 'ராஜாபாய் அவசரக்காரி!" என்று பட்டங்களை சமயத்திற்கேற்பப் போட்டு தந்தை அழைத்ததுண்டு அவளை. ஒரு நாள் எழ மனமில்லாமல் விழித்துப் படுத்திருந்தவளை, "இன்னுமா, தூக்கம்?" என்று கேளாமல், "ராணிஜி, சோம்பேறி!" என்று கூப்பிட்டார். சிரித்துக் கொண்டே எழுந்துவிட்டாள் ராஜேசுவரி!

இப்பொழுது மதுரையில் அவள் கேட்ட பெயர்கள் ராஜேசுவரியின் கண்களை கலங்க வைத்தன!

"'ஸ்ரீமதி ரகுபதி! ஸ்ரீமான் ராஜேசுவரி!" என்று திரும்பத் திரும்ப அவள் நெஞ்சு எண்ணிச் சுவைத்துப் பார்த்தது.

அதோ ஒரு காட்சி! மோட்டாரின் பின்புறம் இடம் காலி, முன்புறம் தம்பதிகள்! அதோ, பிச்சைக்காரத் தம்பதிகள்; கையில் குவளை, கருத்தில் நிலவு.

"என் வாழ்வில் தாம்பத்திய உறவும் மணவாழ்வின் இன்பமும் உண்டா?" என்று அவள் நெஞ்சு விசும்பியது. வேலையின் தரத்தைப் பற்றியும் அதன் பலாபலன்களையும் ஆராய்ந்தபின் குடித்தனம் வைப்பதைப் பற்றி எழுதுவதாக ரகுபதி எழுதிய கடிதத்திற்குப் பிறகு கடிதமே வரவில்லை. ஏன்?

"யுத்த முனைக்குச் சம்பந்தமில்லை என்றாரே, நிஜந்தானா? கடவுளே, வேலை வேண்டாம், அவர் வந்துவிடட்டும்! இனியும் தனிமை தாங்காது!" என்று அவள் மனங் கசிந்தாள்.

ராஜேசுவரியை தெய்வ மங்கையாகக் கருதி ரகுபதி போற்றினாலும், அவன் தன் பெற்றோரை வணங்கித் துதிக்க மறந்துவிடவில்லை. அவனுடைய இதயக் கோயிலிலே, பெற்றோர் பார்வதி, பரமசிவனைப் போல வீற்றிருந்தனர். மாற்றுத் தலை கொண்ட கணநாதர், பக்தியிலும் அறிவிலும் தம்பி கந்தசுவாமியை மிஞ்சிப் பழத்தைப் பெற்றுக் கொண்டது போல, மாற்றுப் பெண் ராஜேசுவரி, பக்தியிலும் அறிவிலும், பவானியை மிஞ்சிவிட்டாள் என்று விளக்கங் காணாமலேயே ரகுபதி, ராஜேசுவரிக்கு முதல் துதி கொடுக்கத் தயாரானான். சிறு பிள்ளைத்தனமாகக் கோபித்துக் கொண்டு மலை ஏறிவிட்ட முருகனை "பழம் நீ!" என்று பார்வதி தேற்றியதைப் போல, தன் தாயும் தன் தங்கையை உயர்த்தத்தானே வேண்டும்? 'நான் நந்தியாகவோ, நாரதராகவோ இருக்கிறேன்!" என்று ரகுபதி பெருந்தன்மையாகவே இருந்துவிட்டான்.

ராஜேசுவரியை அழைத்து வைத்துக் கொண்டு அவளுடன் தனிக்குடித்தனம் நடத்தி அவளுடைய இளமைக் கனவுகளை நனவாக்கிவிட வேண்டும்; பிறகு பெற்றோரை அழைத்து அருகு வைத்துக் கொண்டு, அமைதியும் ஆனந்தமும் செறிந்த இல்வாழ்க்கை தொடர வேண்டும் என்று அவன் உணர்ந்தான். ராஜேசுவரியின் இளமைக் கனவுகள் அவனுக்கும் இன்பக் கனவுகளல்லவா? 'ஒரு நாள் கூட இள மனைவியுடன் தனியாக சினிமா பார்க்கப் போகவில்லை,' என்ற ஏக்கம் அவனுக்கு மட்டும் இல்லையா?

ராஜேசுவரிக்கு ரகுபதி அழைப்பு அனுப்பிவிட்டான்!

ராஜேசுவரிக்குத் தான் மனசிலிருக்கும் மகிழ்ச்சியை மறைக்கத் தெரியாதே! வருத்தத்தை வருத்தமாகக் கருதாமல் சந்தோஷமாகக் கருதியவள், சந்தோஷத்தை வருத்தமாகக் காட்டிக் கொள்ளவும் கற்றிருக்க வேண்டும். ஆனால் அவள் சந்தோஷத்தை மறைக்கவில்லை.

"உன் பாத்திரம் பண்டங்களைப் பார்த்து வைக்கணும்; அப்பளம் கூட இன்னும் கொஞ்சம் இட்டால் தேவலை," என்று சாரதாம்பாள் சொன்ன பொழுதெல்லாம் ராஜேசுவரி, ஆகட்டும் அம்மா, செய்துவிடலாம்" என்று சொன்னதோடு நில்லாமல், "ஏனம்மா, ஓமப்பொடி முத்துஸாரி எல்லாம் செய்கிறதானால் எந்த மாவு எத்தனை போடணும் என்று குளறுபடியாகிவிடுமோன்னு இருக்கு; கொஞ்சம் குறிச்சு வெச்சுண்டால் தேவலை; சொல்லுங்கோம்மா!" என்று காகிதமும் பென்சிலும் கொண்டு வந்து கேட்டாள். பவானி கூட ஏளனமாக, "சரியாத்தான் இருக்கு. புஸ்தகம் பார்த்து பக்ஷணம் செய்கிறதா என்று வேடிக்கைப் போடுவான் பேப்பரிலே!" என்று சொன்னாள். ராஜேசுவரி சிரித்துக் கொண்டே, "இல்லை அக்கா. மாவுக் கணக்குத் தெரிந்தால் போதும். மறந்து போய்விட்டால் என்ன செய்கிறது?" என்று கேட்டாள்.

"கணக்கு என்று சொல்ல எனக்கும் தெரியாது. கைதிட்டம் கண்திட்டம் தான்," என்றாள்

சாரதாம்பாள்.

"அதைத்தான் எழுதிக் கொள்கிறேனேம்மா? இரண்டு கை அரிசி மாவு, ஒரு கை கடலை மாவு என்றாலும், கணக்குத் தானே!" என்றாள் ராஜேசுவரி.

எத்தனையோ தடவைகள் மாமியார், "நாளைக்குக் குடித்தனம் வைத்தால் தெரிய வேண்டாமா?" என்றும் "அவனுக்கு சற்று ஏறத்தாழச் செய்தால் பிடிக்காது. எது எப்படியிருந்தாலும், நம்மகத்தில் காப்பி, சமையல் சாப்பாடு, அப்பளம், எல்லாம் முதல் தரம் தான்." என்று சொன்னதுண்டு. அதனால் ராஜேசுவரி, தங்குத் தடையில்லாமல் தன் சிரத்தையைக் காட்டினாள். அது தவறு!

தன் கணவனின் பெற்றோர், கணவனிடம் தன்னைச் சேர்ப்பிப்பதைப் பற்றி பேசியதை, ராஜேசுவரி கவனித்தாள். மறைவில் நில்லாமல், சற்று தென்படுகிறாப் போல் நின்று தான் கேட்டாள் சம்பாஷணையை.

"நீங்களே கொண்டு போய்விட்டுவிடுங்கள். பவானிக்கு பச்சை உடம்பு. இரண்டு மாசங்கூட ஆகவில்லை குழந்தைக்கு. நான் இருக்கிறேன் இங்கேயே. பவானியை அடுத்த மாதம் கொண்டு போய்விட்டு, அப்படியே பிள்ளை நாட்டுப் பெண்ணிடமும் கொஞ்ச நாள் இருந்துவிட்டு, வருகிறேன், எனக்கென்ன?" என்று சொன்னாள் சாரதாம்பாள்.

"அம்மா, வாருங்கள், வாருங்கள்! பாருங்கள் வீடு, பாருங்கள் பூச்செடிகள்!" என்று பற்பல கூறி மாமியாரைத் தான் வரவேற்கப் போகும் காட்சியைக் கற்பனை செய்த ராஜேசுவரி, திடுக்கிட்டு கற்பனையை நிறுத்தினாள். மாமனார் சொன்ன பதில் என்னவோ, பிறகு எப்படி பேச்சு வளைந்தது என்று விளங்கவில்லை. ஆனால் . . .

"குழந்தைகளை நான்தான் பார்த்துக்கணும், கலியாணத்துக்கு வரவில்லை என்று சொன்னாளாம். போதாதா?"

"போதாதா என் களங்கமின்மையைக் காட்ட? மாமியாருக்குத் தெரியாதா என்று ராஜேசுவரி நினைத்தாளே . . . அது பொய்த்தது.

"ஐயோ, நம்பிவிட்டாரே அம்மா!" என்று துடித்துப் போனாள். "அம்மா, என் அம்மா! நீயானால் நான் எத்தனை துள்ளினாலும், அன்பு மாறாமல் இருப்பாயே! அப்பா, நீ பொறுப்பாயா? நான் இத்தனை மனத்துன்பம் உடற் கஷ்டமும்பட்டு ஏச்சுக்கு இலக்காகிவிட்டேனே! சுவாமி, பிராணநாதரே, உங்களுக்குத்தான் தாங்குமா?" என்று பிரலாபிக்கக் குரல் எழும்பாமல் முகம் சாம்பிவிட்டது ராஜேசுவரிக்கு.

"நெருப்பணைக்கும் யந்திரத்தைத் தாங்கி, ஙணஙணவென்று மணியடித்து எச்சரிக்கை செய்து கொண்டு விரைந்து செல்லும் வாகனத்தின் கீழ் அகப்பட்டுக் கொண்டால், வாகன ஓட்டிக்குத் தண்டனை கிடையாது!" என்று எப்போதோ ராஜேசுவரி கேள்விப்பட்டிருந்தாள். அதுபோலத்தானோ என்னமோ, ராஜேசுவரி, ஒரு கண நேர துன்பத்திற்குப் பின் வேதனையின் சுவடே இல்லாமல் மலர்ந்து காணப்பட்டாள்! தன் துன்பத்தைப் போக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்து தன்னைக் கணவனிடம் சேர்ப்பிக்கும் மாமியார் அல்லவா என்று ராஜேசுவரி கருதினாள்.

தாமரையின் இயல்பு சூரியனைக் காண மலர்வதும், அவனுடைய பிரிவில் குவிவதும் தான். பகலில் மட்டும் பார்த்தால் அதன் இயல்பு யாருக்குத் தெரியும்/

ராஜேசுவரி இத்தனை நாளும் அடைந்திருந்த அமைதி இன்பக் கலப்பற்ற அமைதி தான். கணவனின் உறவை மீண்டும் சிறப்புடன் பெறும் பேறு அணுகியபோது அவள் அடைந்த ஆறுதல் தான் பேரின்ப அமைதியாயிற்று.

"காவிரி போல விளங்குவாய்!" என்று ஆசி கூறினார் நடராஜன். தந்தையின் ஆசைகளை நிறைவேற்று முன், அவளுடைய ஆசியை நிறைவேற்றி விட்டதாகப் பூரித்துப் போனாள் ராஜேசுவரி.

எழுதினாள் கடிதம். "அம்மா! சிறு நீரோடை போலிருந்தவளைக் காவிரியாக மாற்றினார் அப்பா. தற்பெருமையாச் சொல்லிக் கொள்ளுகிறேனோ என்று கூசியே எழுதுகிறேன். இருகரையும் புரண்டோடும் ஆடிக் காவிரி போல, இரண்டு வீடுகளுக்கும் பெருமை தரும் பெண்ணாக விளங்க

வேண்டும் என்று ஆர்வமுடன், பிடிவாதமுடன் இருந்தேன். என் சங்கற்பம் நிறைவேறிவிட்டது என்றே நான், கர்வப்படுகிறேன். காவிரிக்கு ஆடியில் தானே கொண்டாட்டம் அதிகம்? ஆடிக் காவிரி போல இருந்தால் போதாதா, அப்பாவைக் கேள்! ஆடிக் காவிரியைத் தானே மக்களும் குதூகலமாக வரவேற்கிறார்கள்?" என்று எழுதிக் கேட்டாள் ராஜேசுவரி.

நடராஜன் பார்த்தார் கடிதத்தை. கடிதத்தில் மற்ற பகுதிகளில் ராஜேசுவரி என்ன எழுதியிருந்தாள் என்று ஆராய்ந்தார். மாமியார் கட்டிக் கொடுத்த சாமான்களைப் பற்றிய விவரம்; மாமனார் வாங்கிக் கொடுத்துவிட்டுப் போன பொருள்களின் பட்டியல், இன்னும் பாக்கியிருக்கும் காரியங்கள், ஒண்டுக் குடித்தனம் ஆதலால், வீட்டின் அமைப்பு, சௌகரியம் ஆகியவற்றின் விளக்கம்; இதுதான்.

"இதெல்லாம் எழுத வேண்டியது தான். ஆனால் 'விரல் மீண்டது' என்று சொன்னவள், பிடில் வாசிக்கிறாளா, வலி இல்லையா என்பதை எழுத வேண்டாமா? நான் அனுப்பினேனே, பரக்கப் பரக்கப் புத்தகங்களை? ஏதாவது படித்ததாக ஒரு வார்த்தை உண்டா?" என்று சினந்தார் அவர்!"

"இன்னும் குடித்தனம் ஸ்திமிதப்பட வேண்டாமா? மாமனார் தான் கூடப் போயிருக்கிறார். நானும் போகவில்லை, மாமியாரும் போகவில்லை. கொஞ்சம் நிதானப்பட வேண்டாமா? எழுதுவாள் அடுத்த கடிதத்தில்!" என்றாள் விசாலம்.

நடராஜனுக்கு ராஜேசுவரியின் மனநிலை தெரியாது. "பத்து நாள் போதாதா மூன்று ரூம் வீட்டை நறுவிசு பண்ண? அவளுக்கு மனசெல்லாம் சமையல் அறையிலேயே ஊறிவிட்டது, தெரிகிறது. குழம்பில் நீ கருவடாத்தைப் போட்டு வைப்பாயே, அதுபோல! எழுதிவிடுகிறேன் அவளுக்கு இப்படியே!" என்று கோபமும், தாபமும், சிரிப்பும் தொனிக்கப் பேசியவர், கடிதத்தை மட்டும் வெகு உருக்கமாக எழுதினார்!

"நீ ஆடிக்காவிரி போல விளங்குகிறாயா? சரி, அது என் ஆசியை மெய்யாக்குகிறது. ஆனால் நீ பிறந்தபோதும், வளர்ந்தபோதும், அன்றும் இன்றும் நான் ஆசைப்பட்டது என்ன தெரியுமா? நீ பல்கலைக் கழகமாக இருக்க வேண்டும் என்று தான் என் ஆசை! எங்கே, இனியேனும் நீ ஒழுங்காகப் பாட்டுப்பாடி பிடில் வாசித்துப் புத்தகம் படித்து, பலரோடு பழகி, என் ஆசைகளை நிறைவேற்றுகிறாயா பார்க்கிறேன்! உன் கைவிரலுக்கு வந்திருந்த ஆபத்துக் கேட்டு சர்மாகாரு கண் கலங்கிவிட்டார். உன் விரல் மீண்டது பிடில் வாசிக்கத்தான் என்று நீ மறக்கக்கூடாது" என்று எழுதினார் அவர்.

## 29

ஒட்டுக் குடித்தனம் தான், சின்னஞ்சிறிய சிறு இல்லம் தான். ஆனால் அவளே அதன் தலைவி, அவள் கணவனே அதன் தலைவன். அவளிடமும், ரகுபதியிடமும் அன்புடன் விடை பெற்றுக் கொண்டு துரைசாமி அய்யர் புறப்பட்டுப் போய் ஒரு வாரமாகிவிட்டது. ஆனால் ராஜேசுவரிக்கு நாட்களின் ஓட்டமே தெரியவில்லை. மது உண்டவள் போல மகிழ்ச்சியில் மயங்கிக் கிடந்தாள்.

"எங்கள் வீடு" என்ற நினைப்பிலே, எத்தனையோ ஆனந்தப் பரவசமானாள்.

சிந்தனை தெளிந்திருந்தது. வாக்கு கம்பீரமாகவும், செயலும் சுத்தமாக இருந்தது. எல்லாம் சுதந்திர உணர்ச்சியினால்! பார்வை கலங்காமல், பார்த்தாள். சொல் தயங்காமல் பேசினாள். ஒரு சிறு காரியத்தைக் கூட மிரட்சி செய்து கொண்டிருந்த ராஜேசுவரி, பெரும் பொறுப்புகளை மகிழ்ச்சியுடன் ஏற்று நிறைவேற்றினாள்.

ரகுபதிக்கு இதெல்லாம் கூட அதிக கவனம் இல்லை. ஓரிரண்டு மாதங்கள் ராஜேசுவரிபட்ட தர்மசங்கடக் கஷ்டங்களைப் பார்த்துவிட்டு அவன் வேலை ஏற்கப் புறப்பட்டுவிட்டான். பவானியின் கடுமை குறையக் கூடும், என்று நினைத்திருந்தான் அவன். ஆனால் அவனுடைய கண்காணிப்பு இல்லை என்ற நிலைமையில் தான் ராஜேசுவரியின் கஷ்டங்களும், பவானியின் அட்டகாசங்களும் அதிகமாயிருந்தன என்பதை அவன் எப்படி அறிவான்? கடந்த சில மாதங்களிலே ராஜேசுவரி அனுபவித்த நரக வேதனை அவனுக்குத் தெரியாது! ராஜேசுவரி தான் சொல்லவில்லையே!

ஆனால் ராஜேசுவரியினிடம் வனப்பும் செழிப்பும் உற்சாகமும் வளம் பெற்றுவிட்டதை மட்டும்

அவன் வெகு விரைவிலே உணர்ந்தான்!

நடராஜன், "இனிமேலாவது பாடு, வாசி" என்று புத்திமதிகள் கூறி எழுதிய கடிதங்கண்டு ரகுபதி, "இப்படி எழுதியிருக்கிறாரே, எங்கம்மா பார்த்தால் வருத்தப்படுவாள்" என்றான்.

"நான் 'மேரி' யாக இருக்கணுமாம், 'மார்த்தா'வாக இருக்க வேண்டாமாம், அப்பா சொன்னார் போன விசை நான் போனபோது!" என்று சிரித்தாள் ராஜேசுவரி.

"என்னவோ, சொல்லிவிட்டுப் போகிறார். எழுதணுமா இப்படி?"

"அப்பா தப்பாகச் சொல்லவில்லை. மேரி, மார்த்தா இரண்டு பேருமே கிறிஸ்துவின் பக்தைகளாமே! மேரி, சதா கிறிஸ்துவின் பக்கத்திலேயே இருந்து அவர் சொல்கிறதை எல்லாம் கேட்டுக் கொண்டும், ரசித்துக் கொண்டும் இருப்பாளாம். மார்த்தா, அவர் கிட்டவே வராமல், ஏதேதோ கூட்டங்களும் விருந்துகளும் ஏற்பாடு செய்து, அவரைக் கௌரவித்துப் பக்தி செலுத்துவாளாம்.

மேரியின் பக்தி தான் கிறிஸ்துவின் மனதிற்குகந்ததாம். அதுபோல, காரியக்குறியாகவே இருக்க வேண்டாம். அறிவோடும் பழகணும் என்று அப்பா சொன்னார்"

"கிறிஸ்துவாக இருக்க வேண்டியது யார்? நானா?" ரகுபதி வினவினான்.

ராஜேசுவரி யோசித்தாள்!

கணவர் கிறிஸ்து என்றால், ராஜேசுவரி, கணவனையே வளைய வந்து கொண்டிருந்தால் மேரியாவாள்! அது அழகா? முடியத்தான் முடியுமா? மாமியார் கிறிஸ்துவா? ராஜேசுவரி அப்பொழுது தான் மேரியாகிறாள்! ஆனால் தந்தை சமையலறையையே வளைய வந்ததற்காகத்தானே, மேரி என்றும் மார்த்தா என்றும் பேசினார்! அப்பாவின் உத்தேசப்படி இருக்க முடியுமா? உஹூம்!

கணவனையே ஆதரவாகவும், ஆதாரமாகவும் கொண்டு தான் ஒரு பெண் புக்ககம் போகிறாள். கணவனால் தான் புக்கக உறவு ஏற்படுகிறது. ஆனால் அந்தக் கணவன் ஒருவனையே நம்பி, அவனை ஒருவனையே துணையாகக் கருதி அவனுக்கே பணிவிடைகள் செய்து கொண்டிருந்தால், புக்ககம் புகுந்தவளாலே புரைசல் அல்லவோ கிளம்பும்? அதற்காகத் தானே ராஜேசுவரி, கணவனுக்குச் செய்யாத பணிவிடைகளைப் பிறருக்குச் செய்தாள்! கணவனைச் சார்ந்தவர்களுக்குச் செய்யும் சேவை, கணவனையும் சேரும் என்று கணவனிடமிருந்து ஒதுங்கினாள் சந்தோஷமாக?

பழையன எல்லாம் சிந்தித்ததனால் வேதனை அவள் முகத்தில் படர்ந்தது.

"என்னை சிலுவையில் அறைந்துவிடுவார்கள் என்ற பயமா?' என்று கேட்டான் ரகுபதி முறுவலித்து. கண்ணீர் முத்துக்கள் உதிர ராஜேசுவரி சிரித்தாள்.

"அப்பா ஏன் இப்படி தெரியாமல் ஏதோ எழுதி வைக்கிறார் என்று எனக்கும்தான் தோன்றுகிறது!" என்றாள்.

ரகுபதியின் மனத்தாங்கலும் மறைந்தோடிவிட்டது.

தந்தைக்கு மறுமொழி எழுதியபோது ராஜேசுவரி, "அப்பா, நான் மேரியாக இருந்தேன் கலியாணத்திற்கு முன். காவிரியாக விளங்கினேன், அதற்குப் பின்னர், பல்கலைக்கழகமாக இருக்க முடியுமா என்பது சந்தேகம். ஆனால் நடமாடும் ரேடியோவாக விளங்குவேன் என்று சொல்ல முடியும்!" என்று எழுதினாள்!

"எதை எல்லாம் ஒலி பரப்பப் போகிறாய்?" என்று ரகுபதி கேட்டபோது, உரிமையுடன், "போதுமே!" என்றாள் முதல் தடவையாக!

ரகுபதியின் உரிமை மட்டும் பறி போயிற்றா? அவன் சளைக்கவில்லை. "என்ன, கலியாணத்திற்கு முன் மேரியா? கௌன் போட்டுக்கொண்டாயா? 'பேதிங் சூட்' போட்டாயா?"

"ஐயோ, போதுமே எனக்கு!"

"அப்புறம் என்ன? காவேரி நதியா? திடுதிப்பென்று அழுதுவிடுவாயே.....ஆமாம், ரைட்!"

"போங்கோன்னா, நான் கிழித்துவிடுகிறேன் கடிதத்தை!" என்று பிணங்கினாள்.

இது போன்ற சின்னஞ்சிறு கட்டங்கள் தான் மண வாழ்வின் இன்ப நுகர்ச்சிகள் என்பதை அவர்கள் அனுபவத்தில் உணர்ந்தார்கள்.

அறுவடை முடிந்த வயல் போல விளங்கினாள் ராஜேசுவரி. நெற்குவியல்களைப் போல அவளுடைய அனுபவங்களின் நற்பயன்கள் கூடியிருந்தன. வைக்கோற்போர் போல உணர்ச்சிகள் அடங்கியிருந்தன. புகழுக்குரிய பெண்ணாயிற்றே அவள்? நெற்குவியல்கள் கள்ளச் சந்தையில் ஈடுபடவில்லை.

கணவனை ஆபீசுக்கு அனுப்பிவிட்டு, கதவைத் தாளிட்டுக் கொண்டு அவள் எங்கும் போய்விடமாட்டாள். புத்தகங்களைப் படித்தாள். பிடில் சாதகமும் செய்யத் தொடங்கினாள். இடது கை விரலின் புது வளர்ச்சியினால், பிடில் தந்தியின் மேல் விரல்பட்டாலே வலி சுண்டியிழுத்தது. மற்ற விரல்கள் மூன்றும் இசிக்கும். காயம் பட்டு இரண்டு மாதங்களாகியும் 'குணம்' என்று டாக்டர் சொல்லி ஒரு மாதமாகியும், இன்னும் சுவாதீனமில்லையே என்று எண்ணியபோது கண்ணீர் மல்கியது. ஆள்காட்டி விரலை உபயோகிக்காமல், நிஷ ரிஷபமும், தைவதமும் ஆரோகண, அவரோகணங்களிலே விழாத ராகங்களில் இரண்டு மூன்று கீர்த்தனைகள் தெரியும்; அவற்றையே தினமும் வாசித்தாள். மற்ற குடித்தனக்காரர்கள் தன்னைப் பற்றி என்ன நினைப்பார்களோ என்று அவள் கூசினாள். இரண்டே பாட்டுக்களைத் திருப்பித் திருப்பி வாசிக்கும் துரதிர்ஷ்டம் ஏற்பட்டதற்காக நொந்து வருந்துவாள். மாலையில், கணவன் வந்த பின், உலாவச் செல்லும்போது, கண்ணில் தென்பட்டவர்களை, ஏறிட்டுப் பார்ப்பாள். "எனக்கு வெட்கமாயிருக்கிறது" என்று முறுவலுடன் கணவனுக்குப் பின்னால் மெள்ள நடப்பாள். கூட்டுக் குடித்தனக்காரரின் கூர்ந்த பார்வையில் இந்த இளம் தம்பதிகளின் சிறப்புக்கள் தான் தென்பட்டன. அடக்கமாக புருஷனைப் பின் தொடர்ந்து செல்லும் ராஜேசுவரி தன் நடையுடை பாவனைகளினால் பார்ப்பவர்கள் மனதைக் கவர்ந்துவிட்டாள்.

ஒரு நாள் ஒரு சிறுமி வந்து எட்டிப் பார்த்தாள் ராஜேசுவரியை. "வா, உட்காரு" என்று சிறுமியை வரவேற்று, அன்பு காட்டினாள் ராஜேசுவரி. அந்தச் சிறுமியின் தாய் இதை அறிந்ததும் உச்சி குளிர்ந்தாள். இன்னொரு நாள் ஒரு சிறு குழந்தை, தவழ்ந்து கொண்டே போய் தலையை நிலை வாசற்படியில் முட்டிக் கொண்டதைப் பார்த்து ராஜேசுவரி, "ஐயையோ!" என்று ஓடிப் போய் அதைத் தூக்கி, தம்பி கண்ணன் என்றே அதை நினைத்துக் கொஞ்சி முத்தமிட்டாள். இந்த காட்சியைப் பார்த்துவிட்டு, "அந்தப் பெண்ணுக்குக் குழந்தைகள்னா ஆசைதான் போலிருக்கு!" என்று சொல்லிக் கொண்டே மனைவியைத் தேடிப் போனார், குழந்தையின் தந்தை.

இது போன்ற சில சிறு சம்பவங்களினால் ராஜேசுவரி நண்பர்களைப் பெற்றாள். ரகுபதியின் காரியாலயத்தில் அவனுக்கு ஏற்பட்ட சில நண்பர்களின் குடும்பத்தினர் ராஜேசுவரிக்குப் பரிச்சயமானார்கள்.

அவளுடைய சரளமான சுவாபவம் மெருகிட்டுக் கொண்டுவிட்டது. வீண் கூச்சம் போய் இங்கித இயல்பு மேலோங்கி நின்றது.

ஒரு நாள் கேட்டாள், பக்கத்துப் பகுதியிலிருக்கும் மாமியை. "நான் மத்தியான்னம் பிடில் வாசிக்கிறேனே, மாமி. தலை வேதனையா இருக்கோ என்னமோ உங்களுக்கு!" என்று கேட்டாள்.

"தலைவேதனையாயிருப்பானேன், பேஷாயிருக்கு, பயப்படாமல் வாசி நீ."

"பயப்படாமல் வாசிக்க முடியாது மாமி. பாருங்கள் விரலை."

"என்னடியம்மா இப்படி?"

"காப்பி மெஷினில் கையும் அரை பட்டுவிடுகிறேன் என்றது மாமி!" சோகமுடன் சிரித்தாள் ராஜம். "இரண்டு பாட்டுக்கள் தான், இந்த விரலில்லாமல் வாசிக்க முடியும். மெல்ல மெல்லத்தான், ரிஷபம் பிரயோகமுள்ள பாட்டு, தைவதம் விழுகிற பாட்டு என்று விரலுக்குப் பழக்கமாகணும்;" என்று வேதனையைச் சொல்லிக் கொண்டாள்.

ராஜேசுவரிக்கும், உள்ளக் குமுறல் தணிய வேண்டுமல்லவா? அதனால் அவள் குற்றமற்ற முறையில், மனச்சாட்சிக்கு விரோதம் இல்லாமல், சில சமயம் அனுபவ அறிவை வெளியிடத்தான் வெளியிட்டாள். அவள் புறங்கூறவில்லை. கணவனின் எதிரில் எப்படிப் பேசினாளோ, அப்படியே பேசினாள், மற்றவர்களிடம்.

"எல்லாக் காரியமும் தெரிகிறதே! இது தான் முதல் தனிக் குடித்தனமாம். மாமியார் மாமனாரிடம் இருந்து பழகிய பசங்களுக்கே ஒரு பதவிசும் விவேகமும் இருக்கத்தான் இருக்கிறது!" என்று ஆச்சரியப்பட்டு ஆனந்தங்கொண்டாள் ஒரு அம்மாள். யாரிடமோ, சொல்லிக் கொண்டாள் தன் அபிப்ராயத்தை.

"ஆம், எத்தனையோ பேர், என்னைப்போல!" என்று ராஜேசுவரியும் அத்தகைய புகழுரைகளை, சர்வ சகஜமாக ஏற்றுக்கொண்டு முறுவலிப்பாள்.

ராஜேசுவரியை விட வயதில் சற்று பெரியவளான இளம் பெண் பங்கஜம், இரண்டு குழந்தைகளின் தாயார். அங்கேயே ஒட்டுக் குடி இருந்தாள். "நீ அயலில் வாழ்க்கைப்பட்டும், மாமியாருக்குப் பிரியமான நாட்டுப் பெண்ணாக இருக்கிறாயேம்மா. மாமனார் வந்து பிரியமாக, தேவையானதைப் பார்த்துக் கொடுத்துவிட்டுப் போயிருக்கிறாரே! எனக்குச் சொந்த அத்தைதான் மாமியார்; ஆனால் எங்களுக்குள்ளே . . . " என்று முடிக்காமல் குறைபட்டுக் கொண்டாள்.

யோசிக்கவேயில்லை ராஜேசுவரி. "பயப்படுகிற நாட்டுப் பெண் வேண்டும் என்கிற ஆசையோ என்னமோ! மாமியார் ஸ்தானம் சில பேருக்குப் பிடிக்கும்!" என்று அலக்காகச் சொல்லிவிட்டாள், ராஜேசுவரி.

"இருக்கலாமோ என்னமோ! அத்தை தானே என்று நான் 'கேர் ப்ரீ'யாகத்தான் இருப்பேன். அத்தையாக இருந்தும் பழிக்கிறாளே என்று எனக்கு மனத்தாங்கல் தான். ஆத்துக்காரராச்சே என்று அத்தானுக்குத் தான் பயப்பட வேண்டியிருக்கு; அத்தைக்கும் பயப்படணும் என்றால் முடிகிறதா? எங்கம்மாவிடம் நாத்தனார் அதிகாரம் பண்ணினது போதுமே! என்னிடமும் மாமியார் அதிகாரம் நடக்கணும் என்று அத்தை நினைக்கிறாள் என்றால், நினைத்துக் கொண்டே இருக்க வேண்டியது தான்! நடக்காது!" என்று பங்கஜம் படபடத்துப் பேசியதிலிருந்து, ராஜேசுவரி "நான் சொன்னது சரியான பதில் தான் போலிருக்கே!" என்று ஆச்சரியப்பட்டாள்.

கணவனிடம், இந்த சம்பாஷணையைச் சொல்லிவிட்டு, "மாமியார், மாமியார் தான் என்று நினைத்து, வேற்றுமை காட்டவும் கூடாது. அத்தை தானே மாமியார் என்று அலக்ஷியமாகவும் இருக்கக் கூடாது! கணவனின் அம்மா, என்று மரியாதை கொடுக்க வேண்டும், இல்லை?" என்று கேட்டாள்.

ரகுபதி பலமாக தலையசைத்தான்!

## 30

ரகுபதியும் ராஜேசுவரியும ஒரு நண்பர் வீடு சென்றார்கள். அங்கே ராஜேசுவரி, 'ஒண்டியாகத் திண்டாடும்' மூதாட்டிக்கு அனுசரணையாக சில சிறு உதவிகளைச் செய்தாள். அந்த மூதாட்டியின் மகிழ்ச்சி கரை புரண்டது. "என் நாட்டுப் பெண்ணுக்கு ஒரு காரியமும் பழக்கமேயில்லையடி அம்மா; எனக்கு நாட்டுப் பெண் வந்ததால் பொறுப்பும் வேலையும் அதிகம் தானாச்சு! படுக்கையைக் கூடச் சுருட்டமாட்டாள். பார், பிறந்தகம் போய் நாலு மாசமாச்சு. வர மனசாகவில்லை!" என்று ராஜேசுவரியிடம் சொல்லி வருத்தப்பட்டாள்.

"இப்படியும் நடக்கிறதா உலகில்?" என்று திடுக்கிட்டாள் ராஜேசுவரி. "என்னைப்போல் கோழை யாருமில்லையோ?" என்று துடித்தது புதுமனம்.

அந்த மூதாட்டி, ரகுபதியைப் பார்த்து, "பிறந்தகத்திலே நல்ல 'ட்ரெயினிங்' கொடுத்திருக்கிறாள் தாயார்!" என்று ராஜேசுவரிக்குப் பாராட்டுக் கூறியபோது, உணர்ச்சி மீறியவளாய், ராஜேசுவரி, "மாமியார் கொடுத்த டிரெயினிங் தான்! தாயார் கொடுக்கவில்லை!" என்று பதிலளித்துவிட்டு, கணவனைப் பார்த்து சிரிக்க முயன்றாள்!

"அம்மா, அம்மா என்று சொல்கிறாளே, பெற்றவளாக்கும்னு எண்ணிண்டேன்; இவளானா

மாமியாரைச் சொல்கிறாள்! ஏண்டியம்மா, எங்களுக்கு தெரியவேண்டாமோ நீ பேசுகிறது! மாமியார்னு சொல்லேன், தப்பா?" என்று கேட்டாள் ஒரு மாமி.

"மாமியாரைச் சொல்லுகிற 'அம்மா' வானால், 'சொன்னார்; 'செய்தார்' என்று பன்மையோடு பேசுவேன் மாமி. எங்கம்மாவைச் சொல்லுகிறதானால் 'வந்தாள்' 'போனாள்' என்று ' ள் ' தான்! புக்ககத்தில் இருக்கும்போது நான் 'எங்கம்மா' 'எங்கப்பா' என்று கூட பேசமாட்டேனே மாமி!" என்று சிரித்துக் கொண்டு மனம் விட்டுப் பேசும்படி மெள்ள மெள்ள சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன, நாட்களின் போக்கிலே.

"தேவலையே, உன் மாமியார் பார்சலில் அப்பளம் அனுப்பியிருக்கிறாரா? கிழவி சிரத்தையாய்ச் செய்து அனுப்பினாளே," என்று ஒரு மூதாட்டி பாராட்டியபோது, ராஜேசுவரி, 'கிழவி'யாமே', என்று ரோசமுடன், "மாமி, நீங்கள் இதற்கே ஆச்சரியப்படுகிறீர்களே! மாமியார் எனக்கு மட்டுமில்லை, அம்மாவிற்குக் கூட எத்தனையோ அப்பளம் கொடுத்திருக்கிறார். காரியப் புலி தான் எங்கள் மாமியார்! அவர் செய்கிறதைப் பார்த்தாலே எந்தக் காரியமும் மனதில் பதிந்துவிடும்! நான் செய்ததெல்லாம் சுற்று வேலைதான்; இத்தனைக்கும் பிறந்தகத்தில் செய்து வழக்கமுமில்லை! ஆனால் பயமில்லாமல், சரியாகச் செய்யவில்லையா?" என்று மாமியாரின் சிறப்பை எடுத்துக் கூறி தனக்கும் சிறப்புப் பெற்றுக் கொண்டாள்.

ராஜேசுவரி புகழுக்குரிய பெண்ணாயிற்றே! கள்ளச் சந்தைக்குப் போகுமா நெற் குவியல்கள்?

ரகுபதி, தன் மனைவியின் வாக்குரிமையை மறுக்கவில்லை. ஏனெனில், அவளும் வரம்பு மீறிப் பேசிவிடவில்லை. எந்தெந்த சமயங்களில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை ராஜேசுவரி என்னமாய் அறிந்தாள் என்று முன்பு அவன் வியந்து கொண்டான்; அதற்கு விளக்கங்கள் இப்பொழுது கிடைத்தன ரகுபதிக்கு!

"நீங்களும், பவானி அக்காவும் தான் எத்தனையோ பதிய வைத்தீர்கள் என் மனசிலே! பசு மரத்தில் ஆணி பதிந்தாற் போல் என்று சொல்வார்களே, அது போல பதிந்துவிட்டது!" என்று ராஜேசுவரி சில சமயம் துன்பக் கலப்பற்ற தொனியில் சொல்லும் பொழுது அவன் பெருமிதமடைந்து முறுவலிப்பான். சில சமயம் இன்பக்கலப்பற்ற தளர் குரலில் ராஜேசுவரி, "நீங்கள் கேட்ட சில கேள்விகளை நான் மறக்க முடியுமா? அக்கா சொன்ன புத்திமதிகளைத்தான் நான் மறக்க முடியுமா? ஒவ்வொன்றும், சுத்தமான வெள்ளைத் துணியில் சாயம் ஏறினாற் போல் ஏறிவிட்டது. என் மனசிலே" என்று சொல்லும் பொழுது, "ஆமாம், உண்மை; மூன்று வருஷத்திற்கு முந்தி ஈளுபூளுவென்று அழுதுவிடும் ராஜேசுவரி பவானியின் சொல்லம்புகளைத் தாங்கிக் கொண்டு மலர்ந்து விளங்கவில்லையா? அதிசய மாறுதல் தான்!" என்று ஆமோதித்து, ரகுபதி ராஜேசுவரியின் இயல்பை மோனமாக மெச்சிக் கொள்வான்.

"பதினைந்து வயதிலேயே கலியாணம் நடந்ததோ, நான் தப்பித்தேனோ! மனவளர்ச்சி முற்றிப் போய்விட்டால், அப்புறம் மற்றவர்களின் அபிப்பிராயங்களோடு ஒத்து போகிறது கஷ்டமாம். இருபது வயதில் கலியாணம் செய்து கொள்கிற பெண்களுக்குக் கணவனோடு கூட ஒத்துப் போக முடியாதாம்! ஒரு பெண் பதினேழு வயதில் எந்த மனநிலையில் இருக்கிறாளோ அதே மனநிலையில் தான் எழுபது வயதில் கூட இருப்பாளாம்! நான் பதினேழு வயசில் எப்படியிருந்தேன், சொல்லுங்கோ எழுதி வைத்துக் கொள்ளுகிறேன்!" என்று ராஜேசுவரி ஒரு நாள் கேட்டதற்கு ரகுபதி, "என்றும் பதினேழாக இருக்க வேண்டாமம்மா, நீ! எனக்கு இப்பொழுதே சொட்டை ஆரம்பிக்கிறது. அப்புறம் நீ இந்த ஆம்படையான் வேண்டாம், என்று சொல்லுவாய்!" என்று சிரித்துக்கொண்டே பதிலளித்தான்.

"பதினேழாம் வயதில் நான் என் புக்கக அனுபவங்களின் சிரமங்களை உணர்ந்தும் சந்தோஷமாய் இருந்தேன். நான் சிரமப்படாமலே சந்தோஷப்படவேண்டும் என்பது தான் என் மணாளரின் விருப்பம்!" என்று உள்ளம் பூரித்து ராஜேசுவரி, "என் நொண்டி விரலைப் பார்த்து நீங்கள் என்னை வேண்டாம் என்று சொல்லாமலிருந்தால் போதா? நிஜமாகத்தான் கேட்கிறேன்; கலியாணத்திற்கு முந்தி விரல் இப்படி விகாரமாகியிருந்தால் என்ன சொல்லியிருப்பீர்கள்!" என்று சந்தோஷமாகப் பேச நினைத்த வாறே, கண் கலங்கிவிட்டாள்.

இப்படித்தான் முரண்பட்ட உணர்ச்சிகள் சில சமயம் உள்ளங்களை ஆட்டுவிக்கும். சந்தோஷமாக

ஆரம்பமான பேச்சு, பிணக்கிலும், மௌனத்திலும் முடியும். மனத்தாங்கலுடன் துவங்கும் சிறு சொல் வளர்ந்து, உள்ளங்களை அலசி விட்டதும், உணச்சிகள் தூய்மை பெற்றுவிடும். பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் நடக்கும் வாதப் போட்டிகளைப் போல சுவையும் பயனும் நிரம்பிவிடும் இந்த உரையாடல்களிலே; நவரச பாவங்களையும் உணர்ந்த உள்ள நிறையும் ஏற்பட்டுவிடும்.

குழந்தையினிடம் காட்டும் அனுதாபம் எத்தகையதோ, அத்தகைய அனுதாபம் ராஜேசுவரிக்குக் கணவனிடம் ஏற்பட்டது. அன்பிலே குறைந்தவரல்ல; அன்பைக் காட்ட சந்தர்ப்பங்கள் இல்லாமையால் அவளும் கலங்கியிருக்கிறார்!" என்று அவள் உணர்ந்து மனம் நெகிழ்ந்து போவாள். பெற்றோர் மனங் கோணாமல் நடந்து கொண்டு தனக்கும் பெருமை கூட்டிய கணவன், இப்பொழுது தன் மனங் கோணக் கூடாது என்று நினைக்கிறார் என்பதை நினைக்கும் பொழுது அவள் வருத்தத்தில் ஆழ்ந்து விடுவதும் உண்டு. குழந்தைகயைக் கடிந்து கொண்டு கழிவிரக்கங் கொண்டுவிடும் தாயைப் போலாகிவிடுவாள். "எனக்கு நாக்கு வளர்ந்துவிட்டதே, பாருங்கோளேன்; அனாவசியப் பேச்சு பேசிவிடுகிறேன். மனதிலிருப்பதற்கும் பேசுகிறதற்கும் சம்பந்தமே இல்லாமல் சில சமயம் எதையாவது பேசிவிடுகிறேன், பயமாயிருக்கு!" என்று சம்பந்தா சம்பந்தமில்லாமல் திடீரென்று சொல்லி வைப்பாள், ரகுபதிக்குத் திகைப்பாக இருக்கும்!

சுதந்திர வாழ்வினால், விடுதலை உணர்ச்சியினால், ராஜேசுவரி நடையுடை பாவனைகளில் போற்றத்தக்க மாறுதலை அடைந்துவிட்டதாகத் தான் ரகுபதி எண்ணினான். ஆனால் ராஜேசுவரியின் உள்ளத்தில் திடீர் திடீர் என்று எழும்பும் உணர்ச்சிப் போரை அவன் அறிந்தவனில்லவே!

இல்லற இன்பத்திற்கு அவசியமான திறனும் சமர்த்தும் ஏற்பட்டது போலவே, வெளியிடப் பழக்கங்களிலும் பல வகை மனிதர்களோடு அனுசரணையாகப் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது.

அவளுடைய குடித்தனப் பாங்கை அறிய முடியாத நிலையிலிருந்தவர்கள், "பாட்டு ஜோராகப் பாடுகிறாள்!" என்று போற்றினார்கள். தன் பாட்டுத்திறமை, அசல் தஞ்சாவூர்த் தமிழர்களுக்குக் கூட உவக்கிறதே என்று ராஜேசுவரி வியக்கும்படியாயிற்று. "வாய்ப்பாட்டு மட்டும் தானாக்கும் என்று நினைத்தேன்; பிடிலும் நன்றாக வாசிக்கிறாளே இவள்!" என்று ராஜேசுவரி என்றைக்குப் புகழுரையைச் செவியுற்றாளோ, அன்றே அவள் தன் கஷ்டங்களின் நற்பயனைப் பெற்றாள். ஊனங் கொண்டுவிட்ட விரலை உருவிப் பதப்படுத்தி, தந்தை காட்டிய ஊக்கத்திற்கு மதிப்பளித்து, தானாகவே செய்து கொண்ட சங்கற்பத்திற்கு உயிரூட்டி, தினமும் பகலில் அவள் செய்து வந்த பிடில் சாதகம் தெய்வக் கனியாகப்பழுத்தது. ஸ்வாமி படத்தின் முன் உட்கார்ந்து, சர்மா வாத்தியாரின் சிக்ஷைத் திறமைக்கு நன்றி கூர்ந்து, சிரத்தையாக பிடில் வாசிப்பதையும் இசை பாடுவதையும் தினசரி வழக்கமாகக் கொண்டுவிட்டாள் ராஜேசுவரி. அதனால் பிடிலில் நாதம் உயர்ந்துவிட்டது; கை லாவகம் வளம் பெற்றது.

"ரேடியோவில் சான்ஸ் தருவார்களே, முயற்சி செய்யக் கூடாதோ?" என்று கேட்கும் அன்பர்களும், நண்பர்களும், "இன்னும் கொஞ்சம், ராகம் ஸ்வரம் சாதகம் செய், போதும், வாய்ப்பாட்டு ஜமாய்த்துவிடுவாய்! ஒரு வாத்தியாரை அமர்த்திக் கற்றுக் கொள்ளேன்!" என்று புத்திமதி சொல்லி இனிமையாகக் கடிந்தவர்களும், ராஜேசுவரியின் வாழ்வில் சூழ்ந்தனர். விரல் ஊனம் வந்திராவிட்டால் பிடில் வாசிக்கும் ஆர்வம் இத்தனை இருந்திருக்குமா? புக்ககத்தில் பல சந்தர்ப்பங்களிலே பலவிதமாக வளைந்து கொடுத்துப் பழகியிராவிட்டால், பெரியவர்களின் இயல்பு, இளையவர்களின் மனப்போக்கும் தெரிந்திருக்குமா? ராஜேசுவரி நன்றியுடன் தன் கடந்த கால அனுபவங்களைப் போற்றத் தொடங்கினாள். கசப்பான நிகழ்ச்சிகளை மறக்க முயன்றாள்.

பெற்றோருக்கு எழுதிய கடிதங்களிலே ராஜேசுவரி தன்னுடைய வெளியிடப் பழக்கங்களைப் பற்றியும் உல்லாச அனுபவங்களைப் பற்றியும் நிறைய எழுதினாள். மாமியாருக்கு எழுதிய கடிதங்களிலே, பண்டிகைத் தினங்களைக் கொண்டாடிய விவரமும், நண்பர்களின் இல்லங்களிலே தன் சமையல் திறமை பற்றி நல்ல அபிப்பிராயங்கள் நிலவுவதையும், குடித்தனம் செய்வதே ஒரு கலை என்பதற்கு விளக்கமும் எழுதினாள். யார் யார் எந்த விஷயத்தில் கவலைப்பட்டார்களோ அவர்களுக்குள்ள கவலையைப் போக்க வேண்டாமா? பத்திரிக்கைக்குகந்த விஷயதானம் வேண்டும். பூட்டுக்குத் தகுந்த சாவி வேண்டும்!

கணவனுக்குப் பெருமிதமும், அவளுக்குப் பெருமையும் ஏற்பட வேண்டுமென்று எத்தனையோ பொறுமையுடன் பொறுத்ததெல்லாம் வீணல்ல என்று ஒரு நல்லெண்ணம் வளர்ந்திருந்த ராஜேசுவரியின் உள்ளத்தில், மாமியார்பால் நன்றியுணர்ச்சி குறைந்ததேயில்லை. கணவனிடம் ஏற்பட்ட உரிமைப் பெருக்கிலே, உணர்ச்சி மீறி, சில சமயம் மனத்தாங்கலுடன் பேசியதெல்லாம், பவானியையோ அல்லது பொதுவானஒரு குற்றச்சாட்டையோ குறிக்கும்படியிருந்தனவேயன்றி, சாரதாம்பாளைக் குறிப்பிடும் பேச்சல்ல. வயதிலும், அனுபவத்திலும், அன்பிலும் சிறந்த மாமியார், மகளை எதிர்த்துத் தன்னைத் தாங்கிப் பேசியபோது ஏற்பட்ட இன்பப் பெருக்கினை ராஜேசுவரி ஒரு நாளும் மறந்தவளல்ல!

"நெருங்கிப் பழகாமலேயே பவானியும், பவானியின் மாமியாரும் மன வேற்றுமையுடன் இருக்கிறார்கள். நெருங்கிப் பழகியும் குற்றங் குறைகளை மறந்து பழகி அன்பு வளர்த்துக் கொண்டோம் நாங்கள்!" என்று ராஜேசுவரி இறுமாந்திருந்தாள்.

## 31

சங்கீதக் கச்சேரியே கேட்டறியாத ராஜேசுவரி, சங்கீக் கச்சேரிகளுக்கும் போனாள். "ஏன்னா, பாடகர் போடுகிற ஸ்வரத்தையே பிடில் வித்வானும் போடுகிறாரே, போடலாமோ? இரண்டு பேரும் நெட்டுரு பண்ணி ஸ்வரம் போடுகிற மாதிரியில்லை?" என்று ராஜேசுவரி ஒரு நாள் சந்தேகம் கேட்டாள். "அப்படித்தானே வாசிக்கணும்!. குரலில் பேசுகிற மாதிரியே, பிடிலில் போடுகிறது தான் தமாஷ்! 'நான் பாடுகிறமாதிரி நீ வாசி பார்க்கலாம்!" என்று சவால் விடுகிற மாதிரி தானே! என்று ரகுபதி விளக்கியபோது, ராஜேசுவரி, "அப்படியா விஷயம்" என்று பிரமித்தாள்.

"தர்மபத்தினி மாதிரி அனுசரணையாக வாசிக்கிறதில் பெருமை என்று சொல்லுவார்களோ இல்லையோ?" என்று மீண்டும் வினவினாள்.

"இரண்டும் தான். உங்கள் சர்மாகாரு, தான் வாசிக்கிற ஸ்வரத்தையே உன்னைப் போடச் சொல்லுவாராக்கும்! உன்னைத் தர்மபத்தினியாக இருக்கச் சொல்லுவாராக்கும்!

ராஜேசுவரிக்கு இந்தக் கேலி ரசிக்கவில்லை. சர்மா வாத்தியார் பெருமை பீற்றிக் கொண்டதில்லை. அவளும் வாத்தியாரைப் பற்றி புகழ்ந்து கொண்டதில்லை. வேறு சிறந்த வாத்தியார் இல்லை என்று சர்மா காருவையே குருவாக மதித்தாள். இப்பொழுது அருகில் பல பேர், பக்காத் தமிழ் வாத்தியார்கள் இருக்கிறார்களே. ஒருவரை அமர்த்தி, "தமிழிசை கற்றுக் கொள்!" என்று சொல்லக் கூடாதா கணவன்? சர்மாகாரு என்ன சொன்னா_? "கலியாணத்திற்கு அப்புறம் பாட்டு வேண்டாம் என்று நீயும் முடிவு செய்துவிட்டாயா" என்றல்லவா கேட்டார்?

ஓய்வு இருக்கிறது; வசதியிருக்கிறது. சில மாதங்களேனும் பாட்டு கற்க வேண்டும் என்று ஒரு தீவிரமான ஆசை கிளம்பியது அவளுக்கு. முன்பிருந்த சங்கோசம் இல்லை. 'மேடை ஏறிப் பாடக்கூட துணிபு உண்டு!' என்று தோன்றிற்று ராஜேசுவரிக்கு. ஆனால் கணவனிடம் சொல்லத்தான் தயங்கினாள். "எத்தனை சலுகைகள்!" என்று நினைத்துவிடலாம் என்று கூசினாள்.

மனைவியின் ஆசையை அறிந்து சங்கீத சிட்சை கொடுக்காவிட்டால் வேண்டாம். அவளுடைய ஒரே ஒரு குருவை ரகுபதி தூற்றுவது அழகல்லவே!

ராஜேசுவரி எப்படி ரகுபதியின் கேலியை ரசிக்க முடியும்? சிறிது நேரம் பேசவே நா எழும்பாமல் தவிப்பாள். கைக்கோற்போர் தீயினின்றும் தப்பிவிடும்!

சில அபிப்பிராயங்களை மாற்றிக் கொண்ட கணவன், சர்மாகாருவைப் பற்றி ஏளனமாகப் பேசுவதை மட்டும் விடவில்லை என்ற முடிவுக்குத்தான் வந்தாள்.

மற்ற அம்சங்களிலும் ராஜேசுவரி மெப்புக்குள்ளானாள் ஆதலால், சங்கீதமே சர்வமும் என்று கருதாமல், இசைப் பயிற்சியை தன் ஆசை அலுவல்களிலே ஒன்றாகக் கொண்டு சந்தோஷமாகவே இருந்தாள் அவள்.

"குழந்தைகள் என்றால் எத்தனை ஆசை இவளுக்கு!" என்றும், "எத்தனை பாங்காய் எடுத்துக் கொள்ளுகிறாள் குழந்தையை!" என்னும் சிறு விஷயங்களுக்காகப் பாராட்டு; பலர் கூடியிருக்கும்

தேநீர் விருந்தின்போதும், குழந்தை விஷயமாகவே மற்றொரு புகழுரை!

"தந்தை தமிழர்; தாயார் குஜராத்தி. தந்தை வழியில் தான் வம்சம் என்று சொல்லுகிறோமே; ஆனால் தாயார் குழந்தைகளைக் குஜராத்திக் குழந்தைகளாகவே வளர்க்கிறாள்; என்ன அநியாயம்! குழந்தைகள் குஜராத்திதான் பேசுகிறதுகள், 'ச்சே' 'ச்சே' என்று!" என ஒரு விருந்தினம் யாரோ காதல் தம்பதிகளைப் பற்றி தாக்கிப் பேசினார்.

முன் பின் பார்த்தறியாத குஜராத்தித் தாயின் சார்பாக ராஜேசுவரி உடனே பதிலளித்தாள்.

"குழந்தையை மடியிலிட்டுக் கொண்டு தாய் எந்த பாஷையில் அதைக் கொஞ்சுகிறாளோ, அந்தப் பாஷைதான் குழந்தையின் ஆரம்ப பாஷையாம்! தாய்மொழி! சாதாரணமாக தூக்கத்திலும், கனவிலும், குழந்தையைக் கொஞ்சுகிற போதும் நாம் நம்ம பாஷையைத்தான் பேசுவோம் இல்லையோ?" என்று ராஜேசுவரி பதிலளித்தாள்.

கொஞ்ச நாட்களுக்கு முன்பு தான், ஒரு மராத்திய நண்பர் வீட்டில் ராஜேசுவரி, ரஞ்சனி என்று சிறு மகவை ஏந்தி, "ரஞ்சு குஞ்சு!" என்றழைத்துக் கொஞ்சினாள்! ரகுபதி கூட, "அவர்கள் பாஷையில் ஏதாவது வசவாக இருந்து வைக்கப் போகிறது!" என்று அப்புறம் எச்சரித்திருந்தான்.

புகழுக்குரியவளாக தன்னைக் கருதினாள் ராஜேசுவரி. அதனால் இகழ்ச்சி ஏற்படும் வகையில் ஒரு செயலும் செய்ய விரும்பவில்லை, செய்யவில்லை.

அது மட்டுமா? அப்பழுக்கற்றவளாக விளங்க வேண்டுமென்று உள்ளத் தூய்மையுடன் நடந்து கொண்டாள். ஆதலால், விடுதலையுணர்ச்சி இல்லாமல் அல்லற்பட்டாள்.

எடுத்த தற்பெயருக்குப் பழுது ஏற்பட்டு விடுமுன் விடுதலை பெற்று விட்டபோது, அவள் அதையே பெரும் பேறாகக் கருதினாள். ஆனால், அவள் எதிர்பாராத வகையில், அந்த விடுதலை, ராஜேசுவரியைப் பார்த்து, "நீ புகழுக்காகவே பிறந்தவள்! உன் சிறப்புக்களை வெளிக் கொணரும் பெரிய சக்தி நான்தான்!" என்று முரசு கொட்டிற்கு.

ராஜேசுவரியைப் பொருத்த வரையில், புகழ் என்பது அவளையறிந்தவர்களிடையே நிலவித் தங்கம் உயர்ந்த அபிப்பிராயங்கள் தான். மேடைப் புகழ் அல்ல, போட்டி வாழ்வு அல்ல.

அவளுடைய இயல்புகளும் முயற்சிகளும் ஒன்றாக இணைந்து கொண்டதனால் ராஜேசுவரி விரும்பிய விதமே புகழுக்குள்ளானாள்; ஒண்டுக் குடித்தனத்தில் இன்ப இல்லறம் ஓங்கியது.

"நீ ஏங்கிய வாழ்வு இதுதான்!" என்று வெற்றி முரசு பறைசாற்றிற்று.

"போதுமா?" என்று விஷமமாகக் கேட்டது விதி!

குடித்தனம் துவங்கியபோது ராஜேசுவரியின் உள்ளம், அறுவடையாகிப் பாலைவனமாகத் தோன்றும் வயல்வெளி போன்று இருந்தது; மெல்ல மெல்ல மண் மணத்தது. நிலம் செழித்தது. பசும் பயிர் சிரித்தது!

சிரித்துக் கொண்டே வரவேற்றாள் கணவனை; நற்செய்தி சொல்லக் காத்திருந்தாள் அவள். வாட்டமுடன் வந்தான் ரகுபதி. ஏனெனில் துன்பச் சேதி கொணர்ந்தான் அவன்.

திருமணமாம் சித்தியின் மகளுக்கு. ராஜேசுவரி, "கட்டாயம் போக வேணும்," என்று சொல்லி, கணவனின் மறுமொழிக்காக ஆசையாகப் பார்த்தாள்.

"போகலாம், அடுத்த வாரம் தானே. பேஷாக போகத்தான் வேணும். உன் அப்பா அம்மா கூட வருவார்களல்லவா? கட்டாயம் போய்த்தானாக வேண்டும்" என்று ரகுபதி அடுக்கினான் மறுமொழி.

"அம்மா அப்பா எல்லாம் எங்கே வரப் போகிறார்கள்? அவர்கள் வராவிட்டால் நாம் போகக் கூடாதா என்ன?"

"அவர்கள் வந்தால், உன்னைக் கூட்டிக் கொண்டு போகச் சொல்லலாம் என்று பார்த்தேன். இன்னும் இரண்டு மாசம் தான் என் வேலை இங்கே!"

"என்ன, என்ன?"

"ஆமாம். அதற்கப்புறம் எங்கேயோ தெரியாது. நீயும் போய் நாளாச்சே, கூட்டி விட்டு விடுவோம் என்று பார்த்தேன்."

"அதற்கென்ன, பேஷாகப் போகிறேன். அப்படியானால் ... சமான்களை எல்லாம் கட்டி வைத்துவிட வேண்டியது தானா?"

"ஆமாம்; கட்டி வைத்துவிட்டுப் போனால், அப்புறம் நானும் இரண்டு மாசங் கழிச்சு எங்கே போகிறேனோ பார்த்து சமான்களை 'டிரான்ஸ்பர்' பண்ணிக் கொள்ளலாம்."

ராஜேசுவரிக்கு, தன்னுடைய சின்னஞ்சிறு குடித்தனம் கலைக்கப்படுகிறதே என்று வருத்தம் பொங்கினாலும், கிடைத்த சந்தர்ப்பத்தை விடாமல், பிறந்தக உறவினர் வீட்டுத் திருமணத்திற்குப் போக வேண்டும் என்ற எண்ணம் வலுப்பட்டது. தன் பெற்றோர் அங்கே வரக்கூடும்; அவர்களோடு பிறந்தகம் போகாவிட்டால், பிறகு எப்போது எங்கே போக வேண்டியிருக்குமோ?

நண்பர்களிடமும், ஆதரவு காட்டிய பெரியவர்களிடமும் பிரியா விடை பெற்றுக் கண் கலங்கினாள் ராஜேசுவரி. "என் முதல் குடித்தனம், மறக்க முடியுமா நான்?" என்று ஏங்கியபடியே கணவனோடு புறப்பட்டாள்.

ரகுபதிக்கு இந்தப் பயணம் ரசிக்கவில்லை என்று ராஜேசுவரிக்குத் தோன்றிற்று விரைவிலேயே.

"முதல் குடித்தனம் என்று சொன்னாயே, எப்படி? மூன்று வருஷமாகத்தான் வாழ்க்கை நடத்துகிறோமே!" என்று ரகுபதி கேட்டான். மணவாழ்க்கை என்னும் பொழுது ஆங்கில வார்த்தைகள் இரண்டு சொன்னான்.

ராஜேசுவரிக்கு, இன்பக் குடித்தனம் கலைந்த வேதனை. "எல்லாம் குடித்தனம் ஆகிவிடுமா? நான் மணவாழ்க்கை வாழ்ந்த லட்சணம் இவருக்குத் தெரியாதா? தெரிந்தே தான் இப்படிப் பேசுகிறார் பார்த்தாயா?" என்று கோபம். 'குடித்தனம் என்றால் குடும்பம் நடத்துகிறது என்று அர்த்தமில்லையோ?" என்று கேட்டுவிட்டாள். கேட்டுவிட்டு, கணவன் என்ன நினைத்துவிடுவானோ என்று பயந்தாள். "வேலைக்காரியிடம் வேலை வாங்கவும், ஏழைக்கு உதவவும், கட்டளைகள் இட்டு அதிகாரம் செய்யவும் ஆசை அதிகமா? ஆசை மனைவியாகவும், இங்கித இல்லாளாகவும் இருக்கும் பேறு கிடைத்தால் போதாது என்று பேராசைப்படுகிறாயா?" என்று கணவன் கேட்க நியாயமுண்டு என்று தோன்றிற்று அவளுக்கு. ஏனென்றால் குடும்பம் நடத்துகிறதற்கு, கண்டிப்பும், கருணையும், அதிகாரமும், ஆணவமும் தேவையாகிறது.

கணவன் கேட்காவிட்டாலும் நினைக்கலாமல்லவா? அதற்காக ராஜேசுவரி, "குடித்தனம் நடத்துகிறதென்றால், வாயும் கையும் பெருகித்தான் போகும் போலிருக்கு!" என்று முத்திரை இட்டாள்! கணவன் முறுவலித்ததைப் பார்த்து அவளும் புன்னகைத்தாள்.

ரகுபதி உற்சாகக் குறைவுடன் தான் இருந்தான். ஏன் என்று விளங்கவில்லை ராஜேசுவரிக்கு. "பிரியப் போகிறோமே என்றா? அப்படியும் இருக்குமா ஒரு புருஷருக்கு?" என்று கனிவுடன் யோசித்தாள். "பிறந்தகத்து உறவினரைப் பார்க்கப் போகிறோம் என்று நான் வேதனை மறந்து சந்தோஷமாயிருக்கிறேனே, அதனால் ரோசப்படுகிறாரோ?" என்று யோசிக்க யோசிக்க, "ஆம், ஆம்" என்று ஆமோதித்தது அந்தரங்கம். ரகுபதியின் பேச்சுக்களில் அந்தத் தொனி இருக்கத்தான் இருந்தது! "நீ உன் அப்பாவையும் அம்மாவையும் பார்க்கப் போகிறதற்காக இத்தனைச் சந்தோஷப்படுகிறாயே! நான் என் அப்பா அம்மாவிடம் போகலாம் என்று சொல்லுகிறேன். உனக்கு இத்தனை சந்தோஷம் இருக்குமா? இருக்காதே!" என்று சொன்னான்.

"அதெப்படி இருக்க முடியும்? நான் அப்பா அம்மாவிடம் போகப் போகிறேன் என்பதற்கே உங்களுக்குச் சந்தோஷமில்லையே!" என்று தயங்காமல் பதிலளித்தாள் ராஜேசுவரி.

"போகிறது, அப்பா, அம்மா சமாசாரம் வேண்டாம். உன் அத்தை பிள்ளை சந்துருவிடம் நான் வைத்திருக்கிற அபிமானம், உனக்கு என் தங்கையிடம் இருக்கிறதா, அதைச் சொல்லு!"

"சரித்தானே! சந்துரு ஒரு ஆறு மாசமாய்ப் பழக்கம். நீங்கள் ஏதோ படே ஆபீஸர் என்று அவன் உங்களுக்கு சலாம் போட்டுக் கொண்டு குழைகிறான். நல்ல பையன், தங்கமான பையன் என்று உச்சி குளிர்ந்துவிட்டீர்கள்; ஆனால் நான் எத்தனை பயந்து பயந்து நடந்து கொண்டாலும் பவானி

பழித்தாளே! எனக்கு எப்படி உங்கள் தங்கையிடம் பிரியம் வந்து குதிக்கும்! கேள்வி கேட்கிறதைப் பொருத்தமாக கேளுங்களேன். அப்பொழுது தான் ஆத்திரமில்லாமல் சாந்தமாக பதில் சொல்லமுடியும். யோசித்தால் உங்களுக்கே தெரியாதா, என்னைக் கேட்கிறீர்களே, வீணாகப் பேச வைக்காதீர்களே!" என்று ராஜேசுவரி, தொண்டையைடைக்கப் பேசினாள். மன்னிப்பு ஏற்கத் தயாராய்ப் பேசினாள்.

ரகுபதி கேள்விகளைத் தொடரவில்லை. ஆனால் பயணத்தின் இறுதியில் அதே ரீதியில் ஒரு சந்தேகம் கேட்டான்!

"ஸ்டேஷனுக்குச் சிற்றப்பா வந்திருப்பார்!" என்று ராஜேசுவரி குதூகலித்தபோது, ரகுபதி, "சிற்றப்பா சிற்றப்பா என்கிறாய்! நான் பார்த்ததே இல்லை அவரை! இன்னும் மூன்று நாள் பொழுது போகணும்! கிராமத்து மனுஷர்களோடு பழக்கமே இல்லை எனக்கு!" என்று சந்தேகமும் மலைப்பும் புலப்படுத்திக் கேட்டுவிட்டுச் சிரித்தான்.

கூர்ந்து பார்த்த ராஜேசுவரி, கணவன் சங்கடப்படுவதை நன்றாக உணர்ந்து கொண்டுவிட்டாள்! சஞ்சலப்படும் கணவனை மேலும் நோக வைப்பது அழகல்ல என்பதை நன்றாக உணர்ந்தவள் தான் ராஜேசுவரி. ஆனால் கிடைத்த அயனான சந்தர்ப்பத்தை நழுவ விட இஷ்டமில்லை அவளுக்கு. உறைக்க உறைக்கச் சொல்லி ஒரு தரம் உள்ளத்தில் பதிய வைத்துவிட்டால் போதும், அடிக்கடிச் சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம்!

"என்ன சொன்னீர்கள்? மூன்று நாள் பொழுது போகணுமா? அடேயப்பா? என்ன கஷ்டம், என்ன கஷ்டம்! எங்கே யோசித்துப் பாருங்கள். நீங்கள் மாப்பிள்ளை. சிற்றப்பா கைக்கடுதாசி, பத்திரிகை அழைப்பு எல்லாம் அனுப்பி, உங்களுக்கு மரியாதைகள் கொள்ளை செய்து கூப்பிட்டிருக்கிறார்; நீங்கள் வருகிறீர்கள். மாப்பிள்ளை என்று அங்கேயும் எல்லோரும் மரியாதையாக பயந்து பயந்து நடத்துவார்கள். நானும் வந்து வந்து எது வேணும் என்ன வேணும் என்று அடிக்கடி கவனித்துக் கொள்ளப்போகிறேன். நீங்கள் மூன்று நாள் ராஜாபோல் இருந்து விட்டுப் போகப் போகிறீர்கள்; இதற்கு இப்படிச் சொன்னால் அப்புறம் நாங்கள்ளாம் எங்கே போய் முறையிடுகிறது? நாட்டுப் பெண், நாட்டுப் பெண் என்று எல்லாரும் நோட்டம் பார்க்கிறவர்கள்; ஜாக்கிரதையாகப் பேசுகிறாளா, நிதானமாக நடக்கிறாளா, நன்றாகக் காரியம் செய்கிறாளா, அடக்கமாக இருக்கிறாளா, கொஞ்சமாக சிரிக்கிறாளா, பிறந்தகத்தைப் பற்றி பெருமை பேசாமல் புக்ககத்திற்கு மதிப்பு வைக்கிறாளா? என்று ஆறு மாதம், ஒரு வருஷம் வரைக்கு துளை துளை என்று துளைக்கிறாப்போல் பார்க்கிறவர்களுக்கு நடுவில், ஒரு பதினைந்து வயசுப் பெண் என்ன பாடுபடுவாள் என்று யோசித்துப் பாருங்கள்! இத்தனைக்கும் புருஷனை "என்ன?" என்று ஒரு கேள்வி கேட்கக் கூடாது! கேட்டால் புயல் தான்!" என்று ஒரு புயற் குரலில், குமுறலை எல்லாம் வீசி வெளியிட்டுவிட்டாள் ராஜேசுவரி!

ரகுபதி அவளைப் பார்த்த பார்வையில் எத்தனை கனிவு!

'போதும் என் மனச் சாந்திக்கு இது போதும்! மறக்கமாட்டார். நான் அடிக்கடி மனத்தாங்கல் கொண்டதற்கு அடிப்படைக் காரணம் உணர்ந்து கொண்டுவிட்டால்!' என்று ஒரு அலாதி திருப்தி ஏற்பட்டுவிட்டது ராஜேசுவரிக்கு.

திருமண இல்லத்தில் ராஜேசுவரி சொன்னது போலத்தான் ராஜமரியாதை நடந்தது அவள் கணவனுக்கு. ராஜேசுவரியும் தன் கடமை மறக்கவில்லை. ரகுபதி கூட, "உனக்கு இது ஒரு தொல்லை என்னால்!" என்று சொன்னான் ஒரு தடவை. ராஜேசுவரிக்கு கண்ணீர் சுரந்தது. "இதுதான் எனக்குத் தொல்லையாம், கண்டுவிட்டார்! நீர் இறைத்து வைத்து, சோப்புப் பெட்டி எடுத்துக் கொடுக்கிறேன்! இதுதான் பிரமாதமாம் எனக்கு!" என்று அவளுக்கு வருத்தம் ஏற்படாதா பின்னே! யானையுடனே போரிட்டு வெற்றி பெற்ற சிங்கம், கொசுவைப் பிடித்துவிட்டதற்காகப் பாராட்டுப் பெறுகிறதே!

மணவீட்டில் ஒரு சுவையான அனுபவம் ஏற்பட்டது ராஜேசுவரிக்கு. அதைக் கணவனிடம் சாவகாசமாகச் சொல்ல வேண்டும் என்று ஆசை அவளுக்கு. ரயில் பயணத்தில் கணவனிடம் வெளியிட்ட அபிப்பிராயங்களுக்கு மாற்று மருந்து போல அமையுமே என்று கூட அவளுக்கு தோன்றியது.

ராஜேசுவரியின் கவனத்திற்கு இலக்கான ஒரு பெண் மணவீட்டில் இருந்தாள். மணமகளுக்கு மதனி, அந்தப் பெண். அந்தக் குடும்பத்தின் நாட்டுப் பெண். திருமண ஏற்பாடுகளின்போது அந்த நாட்டுப் பெண்ணைப் பல குரல்கள் அழைத்தன. ஆனால் அவள், திருமணத்திற்கு வந்திருந்த தன் பிறந்தக வீட்டாரையே வளைய வந்தாள். ஒரு சிறு உதவி செய்துவிட்டு உடனே வந்து அலுத்துப் பேசினாள். கோள் சொன்னாள். 'நான் தான் வரணுமாமே!' 'நான் தான் செய்யணுமாமே!" என்று உடனுக்குடனே ஆத்திரப்பட்டாள். இப்படி அரைகுறைக்காரியங்களை அறை குறை மனசுடன் செய்த அந்தப் பெண்ணை ராஜேசுவரி கவனித்து வந்தாள். ஒரு பெண்ணுக்கு தினசரி வேலைகளை இதைவிட அதிகம் இருக்குமே என்று ஆச்சரியப்பட்டாள்.

மணமகளை கிருகப்பிரவேசத்திற்கு அழைத்துச் செல்லும் சமயத்தில் அந்தப் பெண் தன் நாத்தியின் நீர் நிரம்பிய கண்களைப் புடவைத் தலைப்பினால் துடைத்ததை பார்த்த போது மட்டும் ராஜேசுவரி "நல்ல மனசு!" என்று முடிவு கட்டினாள். "ஓரே ஒரு குறை; அதைப் போக்குகிறேன்!" என்று தீர்மானித்தாள். மணமகளின் அருகு சென்றாள். "கேளம்மா, என் புத்திக் கெட்டியபடி சிறு புத்திமதி சொல்கிறேன். கணவனின் பெற்றோர் என்று நீ உன் மாமியார் மாமனாரை மதிக்க வேண்டும். நீ உன் மனவேற்றுமையை முதலில் ஒழித்துவிட்டால், அவர்கள் மனவேற்றுமை கொண்டிருப்பதாக ஒரு நாளும் தோன்றாது. கொடுமை செய்வார்கள் என்று யாரையும் நினைக்காதே, அன்பு கிட்டும். கடவுள் கூட இப்படித்தான். நம்பினவர்க்கு நாராயணன், நம்பாதவர்க்கு பாறங்கல்! தெரியுதா?" என்று மணமகளுக்கும், மணமகளின் மதனிக்கும் ஒருங்கே புத்தி புகட்டினாள் ராஜேசுவரி.

ஆனால் மணமகளின் மதனிக்கு அது உறைக்கவில்லை போலும். கிருகப்பிரவேசத்திற்காக மணமகள் புறப்பட்டுச் சென்ற பின், அந்த ஆத்திரக்காரப் பெண், தன் பிறந்தகத்தாரிடம் வந்து, "அப்பா, ஒழிந்தாள் ஒரு வழியாய்! அழுகையைப் பார்! இவர்களுடைய அருமையைப் பார்!" என்றாள்.

'உன் மாய்மாலத்தை விடவா? புடவைத் தலைப்பால் நாத்தியின் கண்ணீரைத் துடைத்துக் கண்களில் நீரைச் சுழற்றினாயே!' என்று உண்மையுள்ளம் படைத்த ராஜேசுவரி அந்தப் பெண்ணை அருவருப்போடுப் பார்த்தாள்!

விசாலம் வந்திருந்தாள், அந்த வைபவத்திற்கு. ரகுபதியின் ஏற்பாட்டின்படியே நடந்தது எல்லாம். ரகுபதி, திருமண வைபவம் முடிந்த பிறகு விடை பெற்றுக் கொண்டுவிட்டான். மோனமாக விடை பெற்றனர் தம்பதிகள். ரகுபதியிடம் புலனான நெகிழ்ச்சி ராஜேசுவரிக்கு வியப்பளித்தது; "நான் கூட கலங்கவில்லையே இத்தனை!" என்று குழம்பினாள் அவள்!

ரகுபதி மனைவியைப் பிரிந்து செல்லும்போது கலங்கினாள் என்றால் அதற்கு காரணம் இருக்கத்தான் இருந்தது.

கானகம் பார்த்துக் களிக்க விரும்பிய சீதா பிராட்டியை அங்கேயே விட்டுவிட்டுத் திரும்ப வேண்டிய துரதிர்ஷ்ட்டம், மைத்துனன் லக்ஷ்மணனுக்கு ஏற்பட்டது போல ராஜேசுவரியைப் பெற்றோரிடம் விட்டுவிட்டுத் திரும்பும் துன்பம் அவள் கணவனுக்கு ஏற்பட்டுவிட்டது.

இரண்டொரு மாதங்களிலே 'வேலை இல்லை' என்னும் நிலைமைக்கு மீண்டும் போகவேண்டும் என்று ரகுபதிக்கு அறிக்கை வந்திருந்தது!

இந்தச் செய்தியைக் கூற முன்பாக ராஜேசுவரி உறவினர் வீட்டுத் திருமணம் பற்றிச் சொல்லிவிட்டாள்! உறவினரகத்து வைபவத்தின் போது ராஜேசுவரி உற்சாகம் குன்றாமல் விளங்க வேண்டும் என்று அவன் விஷயத்தை வெளியிடாமல் கஷ்டப்பட்டான். ரயிலில் பயணம் செய்த நேரமெல்லாம் உற்சாகங் குன்றியவனாய்ப் பேசி வந்தான். ராஜேசுவரியின் மனநிலையை ஆராய்ந்து வந்தான். அதனால் அமைதி இழந்திருந்தான்.

ரகுபதிக்கும் வாழ்க்கையில் சில லக்ஷியங்கள் உண்டு. பெற்றோரின் விருப்பத்திற்கிணங்கிய புதல்வனாய் விளங்கினான், ராஜேசுவரியை மணந்தான். கொண்ட மனைவியைக் காதலியாகவும் கண்டான். அவள் சந்தோஷமாக இருக்க வேண்டுமென்பது தான் அவனுடைய ஆசை.

ராஜேசுவரி எந்த சூழ்நிலையில் உவகையே உருவெடுத்தவளாக விளங்கினாள்? அந்த சூழ்நிலை தான் ரகுபதியின் உன்னத நிலை! மனைவியின் உயர்வுகளை சிறப்பிக்கும் உயர் நிலை தனக்கு ஏற்பட்டிருந்ததனால் அளவிலாப் பெருமை கொண்டான்.

அந்தப் பெருமைக்கு ஊறு ஏற்படுகிறது! ராஜேசுவரிக்கு செழிப்பளித்த நிலையை அவளுக்கு அளிக்க முடியாத நிலையை ரகுபதி எப்படி விரும்புவான்?

கசப்பான உண்மையை ராஜேசுவரிக்கு வெளியிட்டுக் கடிதம் எழுதித் தெரிவித்தபோது, கசப்பிற்கு ஒரு மாற்றும் கொடுத்தான். காதல் மொழிகளுக்கும் அசட்டுத்தனத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு என்று ருசுப்படுத்திவிட்டான்!

"ராஜம், யுத்தகால இறுதியில் வேலையில் அமர்ந்தவன் அல்லவா நான்? அதனால் போர் முடிந்ததும் முதல் முதலாக வெளியேற்றப்படுபவர்களின் பந்தியில் நானும் ஒருவன். மனுக்கள் போட்டு உத்தியோக வேட்டையில் இறங்கப் போகிறேன். ஆதலால் தேவை விளம்பரங்களைக் கவனமாகப் படிக்கிறேன். உனக்கும் ஒரு மனுப் போட அனுமதியளிக்கிறேன். விளம்பரம் இதோ! 'உத்தியோகத்தை இழக்கப் போகும் ஒரு பட்டதாரியை மணக்க, அழகும் அறிவும், உயர்க்குணமும், பெரும் போக்கும் குடும்ப நிர்வாகத்திறமையும் குடித்தனப் பாங்கும் சிறப்பாக அமைந்த ஒரு இருபது வயது மங்கை தேவை. "ராஜம், நீயும் மனுப்போடு," என்று ரகுபதி கடிதம் எழுதியதைக் கண்டு ராஜேசுவரி கவலைப்படவில்லை.

"போனா_ல் போகட்டும் இந்த வேலை. காலை எழுந்ததும், ஓட வேண்டும், மாலை விழுந்ததும் திரும்ப வேண்டும் என்று வாழ்நாள் முழுதும் கஷ்டப்பட முடியுமா?" என்றாள் தந்தையிடம்.

"ஆமாம், பேசாமல் புரொபஸராகட்டும் என்னைப் போல!" என்று ஆமோதித்தார் நடராஜன். அவருக்குத் தான் மகளிடம் தென்பட்ட அனுபவ அறிவும், எழிலின் வளர்ச்சியும், மனமலர்ச்சியும் மனம் நிறைந்தாயிற்றே!

ஆனால் விசாலம் மட்டும், "பேசாமல் புரொபஸர் வேலை பார்த்து விட முடியுமா என்ன? மணிக்கணக்கில் பேசினால்தான் ஆகும்! உம், கிடைக்க வேண்டாமா சரியான வேலை? நம்ம மாப்பிள்ளைப் போல் எத்தனை பேர் உத்தியோக வேட்டையில் இறங்க வேணுமோ? போட்டி பலமாயிருக்காதா?" என்று கவலைப்பட்டாள்.

"முதல் பந்தி என்று சந்தோஷப்படு" என்று நடராஜன் வழக்கம் போல் பேசினார்!

ராஜேசுவரிக்கு தென்பு குறையவில்லை. இல்லற இன்பம் மனம் நிறையப் பருகியிருந்தாள் அவள். இன்னொரு வேலை கிடைக்கும் வரை, அது எத்தனைத் தாமதமாகக் கிடைத்தாலும், மனசு இன்பங் குன்றாது என்று தோன்றியது.

உறவினரகத்தில் திருமணங் கழிந்த பின் விடை பெற்றுச் சென்ற ரகுபதியின் சோர்ந்த முகம் நினைவில் தோன்றிற்று. "இதற்கா சோர்வு?" என்று நினைத்து சிரித்துக் கொண்டாள் நமட்டு சிரிப்பு. குடித்தனச் சாமான்கள் விஷயத்திலே 'மாற்றல்' என்ற சொற்பிரயோகம் செய்து ரகுபதி சமத்காரமாகப் பேசியதை நினைத்தபோது சந்தோஷப்பட்டாள். கணவனின் குன்றாத அன்பையும் வளரும் அக்கரையையும் காட்டுகின்றனவே அவை?

ராஜேசுவரி, வருத்தத்தின் சாயையே இல்லாத மறுமொழிக் கடிதம் எழுதிப் போட்டுவிட்டாள்.

அதற்கு ரகுபதி குறை கூறினான்!

"ஆம், நீ சந்தோஷமாகத்தான் இருந்தாய், பார்த்தேன்! பிறந்தகத்தைச் சார்ந்த உறவினர்களின் நடுவே இருக்கும்பொழுதே நீ சந்தோஷமாய் எனக்கு விடை கொடுத்துவிட்டாய். இப்பொழுது பெற்றோரின் அரவணைப்பில் இருக்கும்பொழுது உனக்கு என் உத்தியோக விஷயம் கவலையளிக்கும் என்று நான் எதிர்பார்ப்பு அசட்டுத்தனம் தான். நல்ல வேளை, உன் கடிதங்கண்ட பின்னே கவலை நீங்கிற்று! என்று ரகுபதி அவளைக் கிள்ளிவிட்டுத் தட்டிக் கொடுத்தான்!

கவலையுடன் ராஜேசுவரி யோசித்தாள்.

இன்று கடிதத்திலே, 'பெற்றோரின் அரவணைப்பு' 'பிறந்தகத்து உறவினர்' என்னும்

சொற்றொடர்கள். அன்று ரயில் பயணத்திலே . . . அடுத்தடுத்து சில விந்தை வினாக்கள்! "நான் என் அப்பா அம்மாவிடம் போகிறேன் என்று சொல்கிறேன் உனக்கு இத்தனைச் சந்தோஷமிருக்குமா?" என்று ஒரு கேள்வி!

"அடப்பாவமே!" என்று அசந்து போனாள் அவள்!

வேலையில்லையென்றால் . . . ?

முன்போல புக்கக வாழ்வு ஏற்கத் தனக்கு இஷ்டமிராது என்பது கணவனின் வருத்தமோ?

உள்ள நிறைவிலே கள்ளமில்லாதவளாகப் பழகும் பேறு தனக்கு ஏற்படப் போகிறது என்று தான் ராஜேசுவரி கருதினாளேயன்றி மீண்டும் புக்ககம் போக வேண்டுமே என்று கவலைப்படவில்லை. அப்படியே கணவனுக்கு தெரிவித்துவிட்டாள்.

## 32

உத்தியோகப் பொறுப்பைக் கொடுத்துவிட்டு, ரகுபதி, ஆவலுடன் காத்திருந்த வேட்டகத்திற்கு வந்தான். பொழுதும் பொருத்தமும் பார்த்துப் பாடப்பட்ட இசை போல அவனுடைய வருகை இன்பமளித்தது அனைவருக்கும். பிறகு மனைவியுடன் உற்சாகமாகப் புறப்பட்டான், தன் பெற்றோரின் நிழலை நாடி.

ஆடிக்காவிரி போல விளங்கிய ராஜேசுவரி, மாறினாள் ஐப்பசிக் காவிரி போல. தெளிந்த மனதினளாய், கம்பீரமான மனப்போக்குடையவளாய் புக்ககம் வந்தாள்.

பங்குனி மாதம் ராமநவமியில் பாட்டுப் பாடவேண்டுமென்று வாத்தியார் சொன்னார். அவளுக்கும் விருப்பமாகத்தான் இருந்தது. முன்னெல்லாம் சர்மாகாருவின் பக்கபலத்தை நம்பிக் கொண்டு பாடிக் கொண்டிருந்தாள். இப்போது, தன்னம்பிக்கையோடு சுதந்திரமாகப் பாடும் வழக்கம் வந்திருந்தது அவளுக்கு. அவள் பாடிய சில சில புதுப்பாட்டுக்களை சர்மாகாருவும் பாராட்டினார். அவர் இரண்டு மாதங்களுக்கு முன்பு தான் சென்னைக்குப் போய் இசை விழாவைக் கண்டு பிரமித்துப் போய் வந்திருந்தார். அன்ன ஆகாரம் மறந்து நாள் முழுதும் பாட்டுக் கச்சேரி கேட்கும் ரசிகர்களைப் பார்த்திருந்தார். சாப்பாட்டு அடுக்குடன் மோட்டார்களில் வந்து, வீட்டுக்குத் திரும்பிப் போகாமல் சபாக்களிலேயே பழியாகக் கிடந்து பாட்டுக் கேட்ட ரசிகக் கூட்டத்தைப் பற்றி வருணித்தார். அவர் புகழ்ந்த புகழ்ச்சி எல்லாம் ராஜேசுவரியை பிரமிக்க வைத்தன.

"சென்னை போகப் போகிறாயாமே நீ, அங்கே கற்று பாட்டுப் பயிற்சி செய் அம்மா! ஆறு மாதம் பயிற்சி பெற்றால், அமோகமான மெருகு ஏற்பட்டுவிடும் உனக்கு!" என்று சொன்னார் அவர்.

ராஜேசுவரிக்கும், கேட்கக் கேட்க, யோசிக்க, யோசிக்க, இசையைப் பற்றிய துடிப்பு ஏற்பட்டது. "நான் இப்போ பாடவில்லை சார், பட்டணத்திற்குப் போய் ஆறுமாதம் இருந்துவிட்டு நவராத்திரிக்கு வந்து பாடிவிடுகிறேன். எல்லோரும் மெச்சி ஆச்சரியப்படும்படியான விதத்தில் பாடினால் பாடவேண்டும். நான் இன்னும் சின்னப் பெண்ணா, ஏதோ பங்கரையில்லாமல் பாடினால் போதும் என்று திருப்திப்பட்டால் போதுமா?" என்று கேட்டாள் ராஜம்.

"பேஷ், அப்படியே செய்!" என்று சொல்லிவிட்டார் சர்மா.

கம்பளி போர்த்தி உடலுடைய செம்மறியாடு கம்பளியை மானிடருக்கு வழங்கி விட்டு அழகற்று, அலங்காரமற்று நிற்கவேண்டியதாகிறது. ரகுபதியும் தன்னுடைய ஆண்மைக்கு அழகளித்த உத்தியோகப் பொறுப்பைக் கழற்றிவிட்டு, மேஷ மாதமாகிய சித்திரை மாதத்தில் வேட்டகம் வந்து சேர்ந்தான்.

பொழுதும் பொருத்தமும் பார்த்துப் பாடப்பட்ட இன்னிசை போல அவனுடைய வருகை இன்பமளித்தது அனைவருக்கும்.

ஆடிக்காவிரி போல விளங்கிய ராஜேசுவரி, ஐப்பசிக் காவிரியாக மாறினாள். தெளிந்த மனதினளாய், கம்பீரமான மனப்போக்குடையவளாய், கணவனைப் பின் தொடர்ந்தாள், நிழலை

நாடி. ரகுபதி, பெற்றோரின் புகலை நாடிக் கிளம்பினான். சென்னையின் நிழலை நாடி புறப்பட்டாள் ராஜேசுவரி.

மனைவியின் மன நிலையைப் பற்றி ரகுபதிக்கு இருந்த அச்சம் சுவடில்லாமல் மறைந்து போயிற்று. பொலிவு குலவும் முகமும், பெருமிதங்கொழிக்கும் நடையும், ராஜேசுவரியிடம் மாறவே இல்லை என்று கண்களாரக் கண்ட பிறகு, அவனுக்குத் தன் நிலையைப் பற்றிய நினைவே இல்லை. சொல்லிலோ ராஜேசுவரி குழந்தையாகவே இருந்தாள்.

"ஆகா, சென்ட்ரல் ஸ்டேஷனில் இறங்கும் ஜோருக்காகவே எனக்கு மதராஸ் போக மாட்டோமா என்று இருக்குமே. இப்பொழுது சென்னையிலேயே வாசம்" என்று அவள் குதூகலித்தபோது ரகுபதி குறுநகை புரிந்தான்.

"உங்களுக்கும் மதராஸ் ரொம்பப் பிடிக்கும் இல்லையா? பீ.ஏ படித்த நாட்களில் ஒரு பாட்டுக் கச்சேரி விடாமல் கேட்பீர்களாமே" என்று கேட்டுவிட்டு சற்று நேரம் யோசனையில் ஆழ்ந்தாள் அவள்.

"மதராஸில் இருந்திருக்கட்டும்; எப்படித்தான் சோபித்திருப்பாள் இசையில்," என்று தன்னைப் பற்றி சிலர் கூறியதை நினைத்துக் கொண்டாள் ராஜேசுவரி. அவள் பிறந்து வளர்ந்த ஊரில் கேள்வி ஞானம் ஏற்படவே வழி இருந்ததில்லை, என்ற வருத்தமும், ஆந்திரர்களின் இசையார்வம் குறைவுதான் என்ற எண்ணமும் அவளை மோனமாக்கிவிட்டன. ரகுபதியும் பேச்சுத் தொடராமலிருந்தான். அப்போது அந்த மோனம் பொருத்தமற்றதாக ராஜேசுவரிக்குத் தோன்றிற்று. சுமூகம் இல்லாத பேச்சுப் பேசியதாகவோ அல்லது அத்தகையப் பேச்சிற்கு அடிகோலியதாகவோ ஓர் அச்சம் உண்டாயிற்று. விளக்கமான காரணம் சொல்ல முடியாது அதற்கு. பாட்டு, இசை, சங்கீதம், இந்த மூன்று சொற்களுக்கும் எத்தகைய நெருங்கிய தொடர்பு உண்டோ, அத்தகைய நெருக்கம், இசை, ஆந்திரர், கணவன் என்ற மூன்று சொற்களிடையே ராஜேசுவரி காண்பது வழக்கமாகிவிட்டது. அவளையும் மீறித்தான் ஒரு சக்தி இயங்கியது அது போன்ற வேளையில். சிறு வயது முதற்கொண்டு, அவள் பருகி வளர்ந்த ஆந்திர நிலத்தின் காற்றும் நீரும் அதற்குக் காரணம் ஆகும். பிறவியிலேயே தோன்றி இரத்தத்தோடு ஊறிப்போன இசை இன்பமும் ஒரு தூண்டுகோல் ஆகும்.

மோனம் பிடிக்காமல் தளர்ந்த குரலில் பேசத் துவங்கினாள் ராஜம். "பவானி அக்கா கல்கத்தாவில் கொள்ளையாய்ப் பாட்டுக் கச்சேரி கேட்டாளாம். நாக்பூரில் எப்படியோ? நான் பாட்டு விஷயமாக ஒன்றும் எழுதுகிறதில்லை. ஏதோ, குடும்ப விஷயத்தோடு சரி, நாக்பூரிலும் கச்சேரிகள் நடக்கும். தமிழர்களுக்குத் தான் எங்கே போனாலும் பாட்டுப் பித்தாயிற்றே. வடக்கே, மேற்கே, கிழக்கே எங்கே போனாலும், வித்வான்களை வரவழைத்துவிடுவார்கள்!" என்று அபிப்பிராயங்களைக் கொடுத்துப் பேசியபோது ரகுபதி குரல் ஓங்க, "ஏன் கடல் கடந்து போனவர்கள் கூடத்தா'ன்" என்று சொல்லிப் பெருமைப்பட்டான். ஆந்திரர் தமிழர் ஒற்றுமை வேற்றுமைகளைப் பற்றி பேச்சு வளராமல் தடுக்க ராஜேசுவரி கவலைப்பட்டாள்; மனதில் என்னமோ கனத்தது. கண்கள் அயர்ந்தன. ஓடும் ரயிலின் அசைவினால் உடலும் மயங்கியது.

"நான் கொஞ்சம் படுத்துக்கொள்ளட்டுமா?" என்று கேட்டாள். சிரிப்பு வந்தது. ரயில் பயணம் என்ற சலுகையை நாடுகிறாள் அல்லவா?

புருவங்களில் அசைப்புடன் சம்மதம் தெரிவித்தபடியே ரகுபதி நிலாக் கீற்றுப் போல இளநகை செய்து கால்களை மடக்கிக் கொண்டான். ராஜேசுவரி படுத்தாள். ஆனால் உடல் சற்று கூசத்தான் கூசிற்று. 'பட்டப்பகலில் தூக்கம் வராது போலிருக்கு' என்று சொல்லி எழுந்து உட்கார்ந்தாள். தனக்கு உள்ள கூச்சமே கூச வைக்கும் போலிருந்தது உடனே. "தூங்கத்தான் போகிறேன். கண்ணைச் சுழற்றுகிறது" என்று சொல்லிவிட்டு மீண்டும் படுத்தாள்.

"அப்பா, தொட்டிலாடுகிற மாதிரின்னா இருக்கு. எங்கே ஒரு கதையும் சொல்லிவிடுங்கள், தூங்கிவிடுகிறேன்." என்று சிரித்தாள்.

"இந்தா" என்று சொல்லி, ஒளிச் சிரிப்புடன் ஒரு புத்தகத்தை உருவி எடுத்துக் கொடுத்தான் ரகுபதி. அது ஒரு சிறு கதைத் தொகுதி! சிரித்தாள் ராஜேசுவரி. "ஏது" என்று கேட்டாள். "வேலையை விட்டு

வரும்போது ஒரு நண்பர் அளித்த பரிசு, அவர் ஒரு புத்தகப் பித்தர்!" என்று கூறி ரகுபதியும் சிரித்தான்.

"அப்பாடா, ஒரு நாலு வார்த்தை சேர்ந்தாற் போல் பேசினீர்களே! இத்தனை நேரம் நானே லவ லவ வென்று பேசிக் கொண்டு வந்தேன். இனிமேல் நான் பேசமாட்டேன்" என்று சொல்லிவிட்டுக் கைப்பிடித்திருந்த புத்தகத்தைப் பிரித்தாள். திடீரென தலை நிமிர்ந்தாள். "பார்த்தீர்களா வேடிக்கை? ரகசியம் பேசுகிறதற்கு கிசுகிசுவென பேசுகிறது என்று சொல்லுவோமே! தெலுங்கிலே, 'குசகுசலாடடமு' என்று சொல்லுவா_ர்கள். லவ லவன்னு பலக்கப் பேசுகிறது, குசகுசன்னு மெல்லப் பேசுகிறது. லவ, குச! ராமருடைய இரட்டைப் பிள்ளைகள்! சில இரட்டைக் குழந்தைகள் எதிரிடைச் சுபாவமாக இருக்குமாமே, தெரியுமோ?"

கணவனின் முகத்திலே குறும்பு குமிழி இடுவதைக் கண்டு ராஜேசுவரி புரிந்து கொண்டாள். முன் நெற்றியில் விரல்களால் தட்டிக் கொண்டு புருவம் நெறித்து, "ஐயோ, ராமா, பேசுகிறேனே இன்னும் . . . இனிமேல் மாட்டேன்" என்று புத்தகத்தை முகத்திற்கு நேரே பிரித்துக் கொண்டாள்.

மணமான புதுமையிலே கணவன் ஓயாமல் பேசுவான், மனைவி அதை செவியுற்றவாறுயிருப்பாள். அதற்குப் பரிகாரமாகத்தான் பிறகு மணவாழ்வு முழுதும் கணவன், மனைவியின் ஓயாப் பேச்சிற்கு செவி கொடுக்க நேருகிறது! இப்படி ஒரு விளக்கம் எதிலோ ராஜேசுவரி படித்திருந்தாள். அதைச் சொல்லிவிட வேண்டும் என்று ஆசை குறுகுறுத்தது. வெகு கஷ்டப்பட்டு மனதை அடக்கிக் கொண்டாள். புத்தகம் படிக்கத் துவங்கிய பின் குறுகுறுப்பு அடங்கியது. பிறகு கண்ணயர்ந்துவிட்டாள்.

அவளுடைய குவிந்த கண்களையும் மலர்ந்த வதனத்தையும் பார்த்து ரகுபதி பூரித்தான். உஷக் காலத்திலே குளத்திலே குமுதம் குவிந்திருப்பதையும் தாமரை மலர்ந்திருப்பதையும் பார்க்குந்தோறும், 'என்னே இயற்கையின் விந்தை! காளிதாசனும், அவனுக்கும் முற்பட்ட ஏனைய கவிகளும் இந்த குமுதம், தாமரை இரண்டையும் எப்படி வருணித்தார்களோ, அதே போல நாமும் இப்போது காண்கிறோம். அனாதி காலந்தொட்டு இவற்றின் இயல்பு ஒன்றே தான்!" என்று தோன்றும் அன்றோ? இப்போது ரகுபதியும் அவ்வாறே நினைத்தான். "விந்தைப் பெண் இவள்! அன்று போலவே இன்னும் இன்றும் இருக்கிறாள்!" என்று வியந்தான்.

ராஜேசுவரியிடம் மாறுதலே இல்லை, அவள் மனம் குன்றிவிடவில்லை என்று ரகுபதி ஊகம் செய்தது மட்டும் சரிதான். ஆனால் அவன் உணராத ஒரு அம்சம் தான் ராஜேசுவரியை அந்தத் தென்புடன் வைத்திருந்தது. கணவனின் உத்தியோகமின்மையை அவள் ஒரு பொருட்டாக பாராட்டாததற்கு ஒரு காரணம் இருந்தது. இசைக் கடலாம் சென்னைக்குப் போகும் பேறு கிடைத்துவிட்டது என்று தான் ராஜேசுவரிக்கு அத்தகைய உற்சாகம் இருந்தது. கணவனுடன் கூசிப் பழகிய நாட்கள் போய்விட்டன, புக்ககம் என்ற நினைப்பு ஒழிந்து 'நம்மகம்' என்ற நினைப்பு மேலோங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைக்கப் போகிறது. சென்னையின் இசை முழக்கத்தில் ஈடுபட உதவும் சூழ்நிலையும் இருக்கும். மாமனார் சிறப்புடன் பதவி வகிக்கிறார் சென்னையிலே. இது தான் ராஜேசுவரியின் இனிய நினைப்பாக இருந்தது. வெளியிடாமல் அதை உள்ளத்திலே தேக்கிக் கொண்டிருந்தாள். அதனால் முகத்திலே மகிழ்ச்சியும் தேங்கியிருந்தது. ரகுபதி ராஜேசுவரியின் கற்பனைகளையோ ஆசைகளையோ அறியவில்லை. "அவள் ரொம்ப சந்தோஷமாக இருக்கிறாள்" இதுதான் அவள் கண்டறிந்தான். அவ்வளவு தான் அவன் விரும்பினான்.

"உன் வேலையைப் பறித்த கடவுள் எனக்குப் பதவி உயர்வு கொடுத்திருக்கிறாரே இதை நான் கொஞ்சங்கூட எதிர்பார்க்கவில்லை, ரகுபதி! ஜாதகப்படி உனக்குப் போதாத காலம் என்று தெரியும், ஆனால் இந்தக் கிழவனுக்கு இந்தச் சிறப்பு ஏன் என்று யோசிக்குங்கால், அவனுடைய லீலை என்ற விடை தான் கிடைக்கிறது," என்று தந்தை துரைசாமி எழுதிய கடிதத்தை, ரகுபதி ராஜேசுவரியிடம் வேட்டகித்தேலே காட்டினான். அப்போது ராஜேசுவரி 'பலே ஜோர் பலே ஜோர் பட்டண வாசம்' என்று பாடக் கூசி வசனமாக இழுத்ததை அவன் பார்த்தான். ஆனால் அந்த ஒரு வாக்கியத்தில் புதைந்திருந்த அவளுடைய 'பேராசை'யை அவன் உணரவில்லை. அதைப்பற்றி அவன் நினைக்கவே இல்லை.

சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு சேவகனை அனுப்பியிருந்தார் துரைசாமி. வாடகை மோட்டாரில்

ஏறியமர்ந்ததும் ராஜேசுவரி, 'நம்மகத்திற்குப் போகிறோம்' என்று சொல்லிச் சிரித்தாள். "இன்னும் கொஞ்சம் தூரம் தான்" என்று சேவகன் தெரிவிக்கும் கட்டம் வந்தபோது, இருமருங்கும் தென்பட்ட அழகிய பங்களா வீடுகளைப் பார்த்து ஆவலே உருவானாள், ராஜேசுவரி. ஒரு பெரிய பங்களாவின் வாசலில் நின்றது மோட்டார்.

"ஏன், உள்ளே போகட்டுமே டாக்ஸி" என்று மிடுக்குடன் ரகுபதி சொன்னான்.

சேவகன், 'இங்கே தான் நிற்கணும்" என்று சொன்னான்.

"இறங்க வேண்டியது தானே," என்று ராஜேசுவரி கேட்கும்போதே, "ஏன் இன்னும் இறங்கவில்லை?" என வினவியவாறு துரைசாமி காட்சியளித்தார்.

"எந்தப் பக்கத்திலிருந்து வந்தார்?" என அதிசயித்தவாறு ராஜேசுவரி இறங்கினாள். கண்ணோட்டம் போட்டாள். மாமனார் நின்ற இடத்திற்குப் பக்கத்தில் ஒரு சிறு பாதை. பங்களாவிற்குள் சென்ற அந்தப் பாதை ஓரிடத்திலே ஒடிந்து திரும்பி . . . எங்கே முடிகிறது? அங்கே நிற்பது யார்?

"அம்மா ஏன் அவுட் ஹவுஸில் இருக்கிறார்?" என்று வினா அவள் நாவிலிருந்து நழுவியது. பார்வை பங்களாவின் முன்புறம் 'போர்ட்டிகோ' வில் நின்ற மோட்டாரின் மேல் சென்றது.

"அது தான் நம்மகம். பங்களா மெயின் போர்ஷனில் ராமசேஷன் இருக்கிறார். நல்ல மனுஷர். தனக்கு ஆபீஸாக இருந்த இடத்தை நமக்குக் கொடுத்துவிட்டார். பாவம். கிழவனுக்கும், கிழவிக்கும் போதா?" என்று சிரித்தார் துரைசாமி. அடக்கமாகச் சிரித்துவிட்டு ராஜேசுவரி கையில் தூக்குக் கூடையுடன் விரைந்தாள். அப்போது பங்களா வாசலில் ஒரு மங்கை மின்னலாக வந்து காரில் ஏறியதையும், கார் சடுதியில் பங்களாவின் மற்றொரு வாசல் வழியே வெளியேறியதையும் பார்த்துக் கொண்டே நடந்தாள்.

"வா" என்று வரவேற்றார் சாரதாம்பாள். மாமியாரை அணுகியதும் ராஜேசுவரி வாசற்படிகளைத் தாண்டிப் பாய்ந்து திண்ணை மீதேறி, மாமியாரை அடி வணங்கி எழுந்தாள். "நீங்கள் அந்தப் பங்களாவில் இருப்பீர்கள் என்று நினைத்தேன் அம்மா," என்று சொல்லி முறுவலித்துவிட்டு, படியேறி வரும் கணவனைப் பார்த்து "நீங்களும் தானே நினைத்தீர்கள்?" என்று கேட்டாள்.

ரகுபதி சிரிப்புக் காட்டி ஆமோதித்தபோது சாரதாம்பாளும் சிரித்தார். "பிள்ளை வந்துவிட்டான், அப்பாவுக்குத் தகுந்த இடமாகப் பார்த்துக் கொடுக்கட்டுமே, கசக்குமா?" என்று சொல்லவே, ராஜேசுவரி 'ஆமாம், நிஜந்தான்' என்று சந்தோஷமாகச் சிரித்தாள்.

பதவி உயர்வு ஏற்பட்டதனால் மாமனாரின் எளிமையார்வம் குன்றிவிடவில்லை என்று அந்தச் சிறு வீடு உணர்த்தவே, ராஜேசுவரிக்கு மாமனார் மீது பக்தி அதிகரித்தது. மாமியார் அப்பள ஆர்வமும் ஊக்கமும் உழைப்பும் குறையவில்லை என்றும் கண்டாள். மாமியாரை யாரோ 'கிழவி' என்று சொன்னபோது தனக்குண்டான ரோசம் நியாயமானதுதான் என்று தெரிந்தது. "இத்தகைய சுறுசுறுப்பான மாமியாரின் மெப்புக்குள்ளான நாட்டுப்பெண் நான்! என்னை ஒரு நாட்டுப் பெண்ணாக என் நண்பர்கள் பார்க்கவில்லையே!" என்று தோன்றிற்று அவளுக்கு. பணிவும் அடக்கமும் தோற்றுவிக்கும் மாமியாரின் சந்நிதியிலே தன்னுடைய பெண்மை அம்சங்கள், மெருகிட்டுக் கொண்டிருப்பதாக ஒரு உணர்வு உண்டாயிற்று. கோபதாபமும் அலுப்பு சலிப்பும் சில சமயம் வெளியிட நேர்ந்தது, தனிக் குடித்தனத்திலே. அவற்றை ஒழித்து மன அடக்கமும் மென் சொல்லும் நிறைந்த பெண்ணாக தன்னை உயர்வுபடுத்தும் அம்சம், மாமியாரின் உறவு. இது தான் ஒரு பெண்ணுக்கு உயர்வு. அன்பான கணவனும், அன்பில் சிறந்த மாமியாரும் தான் ஒரு பெண்ணுக்குத் தேவை. முன்பு நாட்டுப் பெண் என்ற ஸ்தானத்தில் இருந்தபோது தோன்றாத உரிமையும் சகஜபாவமும் இப்பொழுது ராஜேசுவரிக்குத் தோன்றின. அதனால் அவள் முன்பு உணராத, எப்போதும் உணராத, மன அமைதியை இப்போது பெற்றாள்.

அவளுடைய தனிக்குடித்தனம் நடந்த இடத்தில் நண்பர்கள் எல்லோரும் அவளை மெச்சி, அவளுடைய பல திறமைகளைப் புகழ்ந்தார்கள். "அவர்கள் எல்லோரும் எங்கள் மாமி மருமகள் அன்பு கண்டு எப்படித்தான் பிரமிப்பார்கள்!" என்று அடிக்கடி யோசித்தாள். அதன் பயனாக ஒரு நாள் வாய்விட்டுச் சொல்லிவிட்டாள்.

"திடு திப்பென்று குடித்தனம் கலைக்கும்படி ஆகிவிட்டது அம்மா. எட்டு மாசம் எப்படித்தான் ஓடி

விட்டது. இப்படியாகுமென்று தெரிந்திருந்தால் உங்களை முன்னாடியே வற்புறுத்திக் கூப்பிட்டுக் கொண்டு வந்திருக்கலாம்!" என்று சொன்னாள் ராஜேசுவரி, சொல்லும்போது தடுமாற்றம் இல்லை. தயக்கம் இல்லை. ஆனால் அவளுடைய ஆசை வார்த்தைகளுக்கு எதிரொலி எழவில்லை. சாரதாம்பாள் பதிலளிக்கவில்லை. ஏந்திரக் கல்லின் பிடியைத் தளர்த்தாமல் சுற்றிக் கொண்டே இருந்தார்கள் இருவரும். மேற்கல் சுழன்று கொண்டிருந்தது. அடிக்கல் அசையவில்லை.

மோனம் உறுத்திற்கு ராஜேசுவரியை.

"அப்பாவாவது, குடித்தனம் ஆரம்பித்து வைக்க வந்தபோது வீட்டையும் ஊரையும் பார்த்தார், நீங்கள் தான் பார்க்கவேயில்லை!" என்று சொன்னாள் ராஜேசுவரி ஏனோ இப்போது சற்று தடுமாறினாள்.

சாரதாம்பாள் கை ஓய்ந்தாள். ஆனால் பேசினாள். "அவனுக்கு அந்த வேலை நிலையில்லை என்று எங்களுக்குத் தெரியாதா என்ன? குடித்தனம் போட என்ன அவசரம் என்று தான் என் எண்ணம். என்னமோ, உங்களுக்குள் நிச்சயம் பண்ணிக்கொண்டு அவசரப்பட்டீர்கள். நமக்கென்ன என்று நான் வாயை மூடிக்கொண்டிருந்தேன். அப்பா பாடு, பிள்ளை பாடு மாமனார் பாடு, மாற்றுப்பொண் பாடு என்று தான் இருந்தேன்," என்று சாரதாம்பாள் சொன்னாள்.

உறுதியான மாடிப்படிகளின் மீது ஏறுவதாக நம்பியிருந்த ராஜேசுவரி, நூலேணியில் நின்று தடுமாறுவது போல உணர்ந்தாள். வாய் அடைத்துப் போயிற்று. நா வறண்டது. கண்கள் இருண்டன. கை மட்டும் எந்திரப் பிடியை விடாமல் சுற்றிற்று. ஊதுவத்தியின் நுனியில் சின்னஞ்சிறு தீப்பொறிதான் இருக்க வேண்டும். அப்போது தான் மணங்கமழும் புகை எழும். அதன் பெருமை பரவும். தீ நிறைய மூட்டிவிட்டால், ஊதுவத்தி எரிந்து நெருப்பாக உதிரும், துளி பலன் இல்லை. சாரதாம்பாளின் மறுமொழியில் அளவுக்கு மீறிய தீ இருந்தது. அன்பு மணம் கமழவில்லை. ராஜேசுவரியின் நெஞ்சில் இன்பமுடன் பரவிக் கமழ வேண்டிய அன்பு மணம், எழவேயில்லை. நெருப்புத் துண்டு தான் அந்த நெஞ்சில் விழுந்துச் சுட்டது.

"எங்களுக்குள் என்ன பேசிக் கொண்டோம்? அந்தோ, கடிதங்கள் எழுதிக் கொண்டது கூட சொற்பம்," என்று நினைவு கூர்ந்து சிந்தித்தாள். ஏங்கிக் கிடந்து பிரிவினால் துன்புற்ற உள்ளங்கள் அல்லவா, மானசீகமாக இணைந்து அவர்களைச் சேர்ந்தன? அந்தப் பிணைப்புக்கு முன்பு எத்தகைய உடற் துன்பமும் மனத் துன்பமும் பொறுத்தாள் அவள்? மாமியார் மறந்தாரோ?

வாய் திறந்து கேட்க மாட்டாமல் ராஜேசுவரி உள்ளத்துடன் உசாவினாள். 'ஹோ'வெனக் கதற வேண்டும் போல் துடிப்பு ஒன்று ஏற்பட்டது. திடீரென்று திக்குத் திசை தெரியாமல் திண்டாடுவது போல மிரண்டாள். உலுப்பிக் கொண்டாள் மனசை. ஆனால் இருளில் அரண்டது போல அவள் மனம் நோய் கொண்டது. அவள் நினைப்பு வீண் பிரமையல்ல என்பதை உறுதிப்படுத்துவது போல சூழ்நிலையும் இருந்தது. சுழலும் ஏந்திரக் கல்லின் சந்நிதியில் வெளியான சாரதாம்பாளின் மனப்போக்குத் தான், ராஜேசுவரியின் ஆராய்ச்சிக்கு மூலக் கருவி ஆகிவிட்டது. ஆதி நாள் உறவில் இருந்ததைவிட இப்போது அதிக அச்ச மூட்டுவதாய் மாறியிருக்கிறது. மாமியாரின் மனப்போக்கு என்று ராஜேசுவரி நினைது கலகும்படியாயிற்று.

அவளுடைய குடித்தனத்தைப் பற்றி அக்கரையும் கவனமும் புலப்படுத்தி விசாரித்துக் கடிதங்கள் எழுதிய மாமியார் தான் இப்படி பேசினாரா, என்று முதலில் பிரமித்தாள். 'நமக்கென்ன?' என்று வேற்றுமை தோன்றின பிறகும், எப்படி அத்தனை அன்பு சொட்டக் கடிதம் எழுதினாள்? இப்பொழுதும் மாமியார் காட்டும் இன்முகம், அன்பு மனத்தின் பிரதிபலிப்பு அல்லவோ?

இந்த வெருட்சியும் மருட்சியும் கல்விக் கொண்டன அவளை.

பாசமும் நேசமும் வெற்றி கொண்டு மேலோங்கிவிட்டன என்று விடை ஒன்று கண்டுபிடித்தாள்.

ஆனால், அவளுடைய தூய்மையான மனம், "சிறு வருத்தம் கூட உண்டாகும்படி அப்படி என்ன நடந்தது? ஒரு பிழையும் செய்யவில்லையே" என்று மருகியது.

தனித்துக் குடித்தனம் வைத்து வாழ்ந்து, கலப்பற்ற இல்லற இன்பம் சுவைத்தது தான் குற்றமோ?

அப்படித் தோன்றுமா அன்பிற் சிறந்தவர்க்கு?

யோசித்தாள்; மனச்சாட்சிக்கு வஞ்சனை செய்யாமல் யோசித்தாள். உள்ளத்திலே மாசுபடிய இடமளிக்காமல் யோசித்தாள். அவளுடைய நல்லுணர்ச்சிகள் அனைத்துமே அணி வகுத்துத் திரளாக ஈடுபட்டன. அவள் முடிவு செய்தது என்ன?

"மனமே, எச்சரிக்கை! மரியாதை போதும், பீதி வேண்டாம் என்று பெருமைப்படாதே! உள்ளன்பு உண்டு, வேற்றுமைகள் கிடையாது என்று பீற்றிக் கொள்ளாதே தொட்டால் இதழ் உதிரும் பட்டு ரோஜாதான் மாமி-மருமகள் உறவு". என்று புதுக் குரல் அந்தரங்கத்தில் ஒலித்தது.

அழகும் ஆடம்பரமும் விரும்பி, பட்டு ரோஜா, காகிதப் பூவாக இருந்து கூந்தலை அழகுபடுத்துவதை ராஜேசுவரி ஆதரிக்கவில்லை. கூந்தலுக்குள்ளே மறைந்து ஒளிந்திருப்பினும், பட்டு ரோஜாவின் மணமே போதும், அதன் பெருமையே போதும் என்று இதழ்களைக் காத்துக் கொண்டாள் அவள்.

ஆம், பூவின் இதழ்களைக் காத்துக் கொண்டாள். மலர்ந்திருந்த ஆசைகளின் இதழ்களைக் காத்துக் கொண்டாள். பேசும் கண்ணிதழ்களைக் காத்துக் கொண்டாள். உள்ளத்தைத் திறந்து காட்டிப் பேசப் பழகிய கொவ்வை இதழ்களையும் நன்கு காத்துக் கொண்டாள்.

## 33

சென்னை வந்து வாரங்கள் இரண்டு கடத்திவிட்டாள் ராஜம். ஆனால் பங்களாவின் தலை வாசலைத் தாண்டிப் போக நேரவில்லை. பங்களா கட்டித்திலே வசிக்கும் ராமசேஷன் வீட்டிற்குத்தான் மாமியாரோடு போய் வந்தாள். அதற்குப் பிறகு வீட்டு வாசற்படியே இறங்கவில்லை. கணவன் தினமும் மாலையில் தனியே உலாவச் செல்வதை சற்று ஏக்கமுடன் பார்த்தாள். தனி வாழ்வு வாழ்ந்தபோது இருவருமாகவே உலாவப் போய் வழக்கமாகியிருந்ததனால், இப்பொழுதும் கணவனோடு உலாவப் போக சலுகை இருப்பதாக ஒரு நைப்பாசை இருந்தது. ஆனால் அவளை ஆசை தான் உந்தியது. அன்புக் கட்டளைகள் உந்தவில்லை. எட்டு மாதம் வாழ்ந்த புது வாழ்வு தனது மன அடக்கத்தை பாதித்துவிட்டது என்று அறிந்து, அந்த சபலத்தை ஒடுக்கினாள் ராஜேசுவரி. ஒரு நோக்கமுமில்லாமல் எந்த அவசியமுமில்லாமல் புருஷனோடு 'பேடா' கிளம்புவது அழகற்ற செயல்தான் என்று அவள் இந்தச் சூழ்நிலையில் உணர்ந்தான்.

ரகுபதியும் அப்படித்தான் நினைத்தான். ராஜேசுவரி இசையரங்குகள் கேட்பதில் ஆர்வங்காட்டினாள். ஆதலால், அந்த ஆசையை மட்டும் நிறைவேற்றலாம், என்று ஓரிரண்டு தடவைகள் முற்பட்டான்.

ஒரு நாள், "சபாவில், அங்கத்தினர் ஆவோம்," என்றான் அன்னையிடம்.

"எதற்கு? வேண்டாம், அப்பாவுக்குப் பிடிக்காது அந்த சமாச்சாரமெல்லாம்!" என்றாள் சாரதாம்பாள்.

அதற்குப் பின்னர் ஒரு நாள், ஏதோ ஒரு பாட்டு கச்சேரியைப் பற்றி பிரஸ்தாபித்தான்.

"ரூபாயைக் கொட்டிக் கொடுப்பதில் என்ன ஆசையோப்பா! அந்தப் பணத்தில், நான் ஆயிரம் அப்பளம் இடுவேன். என்ன பாட்டு, பிரமாதம்! என் அப்பளம் மாதிரி, ஆயிரம் ரூபாய் கொடுத்தாலும் யாரால் இட முடியும்? என்று சிரித்தார் சாரதாம்பாள்.

அந்தச் சிரிப்பில் கலந்து கொண்டு, கச்சேரி நினைப்பை உதறிவிட்டான் ரகுபதி.

கொஞ்ச நாட்களுக்குப் பிறகு, 'கேட்கத் தவறக் கூடாத முதல் தரக் கச்சேரி' என்ற நினைப்புடன், சற்றும் தயக்கமின்றி, ரகுபதி, கையில் பத்திரிக்கையோடு சமையலறைக்கு வந்தான்.

"யாருடைய கச்சேரி தெரியுமா?" என்று அவன் கேட்டுப் பத்திரிகையைக் காட்டியபோது, ராஜேசுவரியும் இடம், நிலை, மறந்து போனாள். "ஓகோ," என்று துள்ளிக் குதித்து மாமியாரை உற்சாகமுடன் நோக்கி, 'டிக்கட்டுக் கிடைப்பது கூட சந்தேகம், அம்மா. இவர் இப்படி குதூகலப்படுகிறாரே!" என்றாள்.

ரகுபதி ரோசமுடன், "இப்போதே, வாங்கிவிட்டால் போச்சு. அம்மா, வாங்கிவிடட்டுமா நாலு

டிக்கட்?" என்று கேட்டான்.

மைந்தன் மீதுள்ள அன்பிற்காக மருமகள் விஷயத்திலே சலுகை வழங்க சாரதாம்பாள் தயாராயில்லை. "சரி தான், எதற்கு நாலும் ஐந்தும்? நீ வேணுமானால் போய்க் கொள், அவளோடு." என்று பதிலளித்தார் சாரதாம்பாள்.

"அவளோடு' என்ற சொல் சேர்க்காவிட்டால் நன்றாயிராது என்று தான் சாரதாம்பாள் கடைசியில் சேர்த்தார். மனைவிக்காகவும் அவளுடன் போகலாம், என்ற நினைப்பினாலும் தான் ரகுபதி உற்சாகமாகக் கேட்டான் என்று பெற்ற தாயாருக்குத் தெரியாமற் போகுமா?

அன்னைக்கு இஷ்டமில்லை, பெற்றோருடன் இருக்கும்போது மனைவியை மட்டும் அழைத்துப் போய் வழக்கமே கிடையாது. இந்தக் கூச்சமும் அச்சமும் ரகுபதியை செயலற்றவனாக்கிவிட்டன.

ஒரு வார்த்தை சொன்னது தான் சாக்கு என்று புருஷனும் பெண்டாட்டியுமாகக் கிளம்பிப் போகிறதானால் போகட்டும் என்ற தாராளமும், வற்புறுத்தலும் தூண்டுதலும் கொடுக்கக்கூடாது என்ற பிகுவும் சாரதாம்பாளிடம் இருந்தன. அன்று மட்டுமல்ல, அதற்குப் பிறகும் கூட.

ஆனால் அந்தச் சிறு சம்பவத்திற்குப் பிறகு ரகுபதியும் ராஜேசுவரியும் ஒதுங்கிக் கொண்டனர். தங்கக் கம்பி போல வளைந்து கொடுக்கும் மனைவி என்ற தென்பு ரகுபதிக்கு; அன்னைக்கு உவக்காத காரியம் செய்யத் துணிந்து தன்னை அழைத்துப் போகக் கணவன் துணிந்தாலும், மாமியாரின் விருப்பம் மீறிப் போகத் தனக்குத் துணிவு இல்லை, ஆசையில்லை என்று ராஜேசுவரிக்குத் தெரியும். அவளுடைய அடக்கம் அறிந்து தான் ரகுபதியும் துணியவில்லை என்று அப்புறம் மற்றொரு சமாதானம் செய்து கொண்டாள் அவள்.

பவானியின் அடக்குமுறை இல்லை; மாமியார் ஒருவரின் மனங்குளிர்ந்தால் போதுமே! அதுவே தேவை; அது தான் அழகு. வெளியிடப் பழக்கங்களை நாடுவதை தவிர்த்துக் குடும்பத்தின் இன்பச் சூழ்நிலையிலேயே மன நிறைவு பெறலாம்! 'புக்ககத்திலே' அதற்குமேல் கிடைக்கக் கூடிய பேறு என்ன?

ராஜேசுவரியின் லட்சியம் இப்படித்தான் உருவெடுத்தது. 'நம்மகம்' என்ற உணர்விற்கு இடமேற்படவில்லை.

அது ஆங்கில வருடம் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்து ஏழாம் வருடம். பாரதநாடு அடிமை விலங்கு களைந்து சுதந்திரம் பெற்ற புனித ஆண்டு அது. எங்கும் சுதந்தரம் என்பதே பேச்சு! இந்திய நாடு சுதந்திரக் கொடியை செங்கோட்டையில் ஏற்றப் போகிறது. இன்னும் சில வாரங்களே பாக்கி. அந்தப் புனித திருநாளில் வருகையை மக்கள் கோலாஹலமாக எதிர்பார்த்திருந்தனர்.

சுதந்திரம் என்ற வார்த்தையின் இனிமை எல்லாம் திரண்டு பொங்கிக் கொண்டிருந்தது. அதன் அருமை பெருமை எல்லாம் இன்ப ஒலியாக மாறிவிட்டது. 'சுதந்தரம் இல்லையே' என்ற ஏக்கம் மறைந்து, 'வந்துவிட்டது சுதந்தரம்' என்று வெற்றி முரசு முழங்கிற்று எங்கும்.

ராஜேசுவரியின் நாவிலும், நினைப்பிலும் அந்தரங்கத்திலும் கூட 'சுதந்தரம்' என்று அடிக்கடி ஒரு குரல் முழங்கிற்று.

ஆனால் அவள் தன் உணர்ச்சிகளை சுதந்திர ஆர்வமாகக் கருதவில்லை. குடும்ப உறவில் இன்பம் இல்லை என்ற நினைப்பு இரு தரப்பினருக்கும் சிறுமை தரும் என்று அவளுடைய இயல்பு அறிவுறுத்தியது. புக்கக சூழ்நிலையை, 'சுதந்தரம்' என்று சொல் அவமதிக்கும் என்று அவளுடைய பக்தி போதித்தது. தன் உணர்ச்சிகளில் குமுறல் எல்லாம் வெளிப்படாத தன் இசையின் மாற்று உரு என்று கருதுவதில் சிறுமை இல்லை என்று அவளுடைய கலையுள்ளம் யோசனை சொல்லிற்று. கலையுள்ளத்தோடும், பக்தியோடும் வந்தவள் ராஜேசுவரி. அதனால் அவள் நினைத்ததும் நியாயம் தானே?

குடும்பத்தில் அமைதியான இன்பச் சூழ்நிலையில், தன்னுடைய இசையார்வம் வளர மட்டும் இடம் உண்டு என எண்ணி, பாட்டுப்பாடவேண்டும், பிடிலை வாசிக்க வேண்டும், என்று

சந்தர்ப்பங்களுக்காகக் காத்திருந்தாள்; ஆனால் ராஜேசுவரிக்கு அந்த வாய்ப்பும் இல்லை. "விரல் சரியாயிருக்கிறதா? வாசிக்கிறாயா?" என்று மாமியார் மாமனார் இருவருமே கேட்கவில்லை. தானாகவே வலுவில் சொன்னாள் ஒரு நாள். "அம்மா, இந்த நொண்டி விரலால் கூட பிடில் வாசிக்கப் பழகிவிட்டேன்," என்று சிரித்தபடியே சொன்னாள். சாரதாம்பாள் அந்தச் சிரிப்பை விரட்டிவிட்டார்!

விரலைப் பார்த்தார் அலக்காக. "நீயே பண்ணிக் கொண்டதுதான், சொல்லாமல் வைத்திருந்தாய். செலவுக்குச் செலவு; கஷ்டத்துக்குக் கஷ்டம்." என்று மாமியார் சொன்னபோது ராஜேசுவரி மழுப்பிச் சிரித்தாள். வலி வந்ததுமே சொல்லும்படியான நிலையிலே அவள் இருக்கவில்லை அன்று. பொறுத்துப் பொறுத்துக் கடைசியில் தாள முடியாத துன்பமானபோது தான் சொல்லும்படி அவள் நிலை இருந்தது. இதை மறந்தாரோ பெரியவர்?

ஆனால் பெரியவர்கள் முகஸ்துதியாகப் பேசுவதும், நன்றி தெரிவிப்பது போல பேசுவதும் கூடாது என்று ஒரு சமாதானம் செய்து கொண்டு, ராஜேசுவரி கலக்கத்திலே உழலாமலிருக்க முயன்றாள்.

"எங்கே வாசி, பிடிலை, கேட்போம்!" என்று சாரதாம்பாள் சொல்லாததனால் சற்று தயக்கம் உண்டாயிற்று. "எனக்குப் பீதியும் தயக்கமும் இல்லை, இசை ஆசை மேலிட்டிருக்கிறது," என்று அவர்களுக்குத் தெரிந்தால் தானே!" என்று எண்ணி இரண்டு நாள் பொறுத்து பிடிலை எடுத்தாள். இரண்டே கீர்த்தனம் வாசித்து எழுந்தாள். மறுநாளும் பிடிலை வாசிக்க முற்பட்டாள். துரைசாமி உள்ளே நுழைந்ததைக் கண்டு, எழுந்துவிட யோசித்து, பிடிலை பெட்டியில் வைப்பதா வேண்டாமா என தடுமாறினாள் 'வாசியேன்' என்று கூறும் முன் பாவமோ, தூசனையோ இல்லை என்று கண்டு, மனமே இன்றி எழுந்துவிட்டாள். இருப்பது ஒரே கூடம். சமையலறையைத் தவிர்த்து அது தான் முக்கியமான இடம். மாமனார் இளைப்பாறுவதோ, சாப்பிடுவதோ, எல்லாம் அங்குதான். மூன்றாம் இடம் வாசற் திண்ணை தான். இடமும் பொழுதும் சரியாகப் பொருந்துவது அந்த வீட்டில் சுலபமாக இல்லை. கூடத்திலிருக்கும் ரேடியோவின் அருகு விற்றபடி கணவன் வானொலி நிகழ்ச்சிகளை கேட்கும்பொழுது, "நான் வாசிப்பதையும் பாடுவதையும் கேளுங்கள்" என்று கூறும் ரீதியில் எப்படி ராஜேசுவரி நடந்து கொள்ள முடியும்? கூடத்திற்கு அடுத்த சமையலறையிலிருந்தபடி பயிற்சி செய்தாலும், அடுத்த அறைக்குள் பாயுமே!

சின்னஞ்சிறு விஷயங்களில் எத்தனையோ அக்கரை காட்டலாம்; ஆனால் அந்தச் சின்னஞ்சிறு விஷயங்கள், முக்கியமான அம்சங்களாக மாறி, சங்கிலியாகப் பிணைத்துக் கட்டுப்படுத்துகின்றன.

கிடைத்திருக்கும் வீடு அது தான்; அவளுக்குக் கிடைத்திருக்கும் சூழ்நிலை அது தான். மாமனார் வந்ததும் எழும்படி அடக்கம் தூண்டுகிறது. மாமியார் முகத்தில் சுணக்கம் கூடாது என்று பணிவு போதிக்கிறது. பிறரை நோவதில் அழகும் பயனும் இல்லை. அதனால் ராஜேசுவரி, 'பேராசைப்படக்கூடாது' என்று ஆறுதலடைந்தாள். மாமியாரின் நிழல் போல இருந்து இதமாக அன்பு ஏற்க முடிந்தால் போலும் என்று கருதுமளவிற்கு அவளுடைய மனநிலை மாறிவிட்டது.

ஆனால் அதுவும் எட்டாக்கனியாகக் காட்சி அளித்தது! சாரதாம்பாளின் இன்சொல்லிலே இன்பம் இல்லை. அதரங்கள் பூத்த புன்னகையிலே அன்பு தெரியவில்லை. ஆதரவு குவிந்திருந்தது. ஆதரவு காட்டத் தெரியாதா சாரதாம்பாளுக்கு, தெரியும். ஆனால் அது அனாவசியம் என்று விட்டேற்றியாக இருந்தார் நாட்டுப் பெண்ணிடம்.

குறிப்பறிந்து சூஷ்ம புத்தியுடன் சின்னஞ்சிறு விஷயத்தையும் உணர்ந்து, புத்தக அறிவை அனுபவ அறிவாக மாற்றிக் கொண்டு பதினைந்து வயதில், புக்ககத்தில் மெப்புக்கும் பாராட்டுக்கும் உரியவளானவள் ராஜேசுவரி. இப்போது அதே சிந்தனைத் திறன், சாரதாம்பாளின் மனப்போக்கு எப்படித் திருப்பம் கண்டிருக்கிறது என்பதைத் தெளியவைத்தது.

பாலும் நீருமாகக் கலந்து அன்னப் பறவையிடம் வைத்தால், அந்த ஹம்ஸம் பாலை மட்டும் பிரித்து அருந்துமாம். ராஜேசுவரி இத்தனை நாளும் அன்னம் போல இருந்தாள். நன்மையையே ஏற்பது அவள் வழக்கமாயிருந்தது. ஆனால் இப்போது நன்மையையும் தீமையையும் பிரிக்கும் இயல்பும் சிறப்பும் குன்றிவிட்டன. அவளே அதை உணர்ந்தாள்.

பவானியைப் பற்றிய பேச்சு வந்த சமயங்களிலே சாரதாம்பாள் தொனி மாறிவிடும் விந்தையை அவள் நாளடைவில் நன்றாக அறிந்து அதிசயித்தாள். "உனக்கு தெரிந்தளவு பவானிக்குத் தெரிகிறதில்லை, மாமியார் மாமனாரிடம் இருந்து பழகினாலே நாலு தினுசும் தெரியத்தான் தெரிகிறது." என்று சாரதாம்பாள் சொன்னபோது ராஜேசுவரி இறும்பூது எய்தினாள். மறு வினாடி?

"பவானிக்கு வெகுளித்தனம். அவளுக்கு மாமியாரும் அம்மாவும் சமம்; நாத்தனாரும் மதனியும் சமம்; ஒரு இழவும் தெரியவில்லை. அவள் புருஷனுக்கு வேலையில்லை என்று தெரிந்தால் ஏற்பட்டால் கூட சமர்த்து வராது அவளுக்கு. ஏதுடா, சற்று இச்சகமாய்ப் போகணுமே என்று தெரியாது,' என்று சாரதாம்பாள் சொல்லி முடித்த போது தான், மாமியாரின் பேச்சுத் தனக்குப் பாராட்டு அல்ல என்று ராஜம் அறிந்தாள்.

"புருஷனுக்கு வேலை இல்லை என்பதனால் நான் தாழ்ந்து குழைந்து பழகுகிறேனா? இது தான் என் சமர்த்து போலிருக்கு," என்று யோசித்தாள்.

பவானியிடமிருந்து கடிதம் ஒன்று வந்தது. துரைசாமி அய்யர் அந்தக் கடிதத்திலிருந்து சில சொற்களைக் குறிப்பிட்டு, "ஆணித்தரம்," என்று சிரித்தார். அப்போது சாரதாம்பாள் சற்று ரோசமாகவே, "ஆமாம் ஒளிவு மறைவு கிடையாது, பளிச்சென்று சொல்கிறாள். மெழுகிப் பூச மாட்டாள்." என்றார்.

மற்றொரு சமயம், "பவானிக்கு மனதில் எதுவும் தாங்குகிறதில்லை. வாயால் கொட்டிவிடுவாள். அது கூடாது. ஒருவரைப் பற்றி நமக்கு 'இப்படியா' என்று தெரிந்துவிட்டால், அதற்கப்புறம் ஜாக்கிரதையாய்ப் பழகணுமே தவிர, படபடவென்று பேசி, சண்டை போட்டுவிட்டு அப்புறம் பொல்லாதவள் என்று பெயரெடுக்கக்கூடாது," என்று சாரதாம்பாள் கூறினா_ள்.

அப்போது ராஜேசுவரிக்கு ஒரு ஐயம் உண்டாயிற்று. 'மாமியார் பொல்லாதவள் என்று பெயர் எடுக்கக்கூடாது என்பதற்காகத்தான் அம்மா இன்முகமாய் இள்ருக்கிறாரோ?" என்று எண்ணினாள். மாமியார் முன்பு காட்டிய அன்பு மாறுபட்டு இருந்ததை அவள் உணர்ந்தாள். இப்பொழுது பவானி விஷயத்திலே பாசமும் அஞ்ஞானமும் பெருகியிருக்கிறது என்பதையும் அறிந்தாள். அதை இயற்கையாகத்தான் கருதினாள். ஆனால் ஒரே ஒரு சம்சயம் போகவில்லை.

"மாமியும் தாயும் சமம் என்று பவானி நினைப்பதற்கும் நான் நினைப்பதற்கும் எத்தகைய வேறுபாடு? சமம்தான், ஆனால் பவானி சமமாக அன்பு செய்தாளா? அது கூட சிறப்பாகுமா?" என்ற வியப்பும், 'என் அன்புப் போலிக் குழைவா?" என்ற வேதனையும், அவளைத் தழுவின. அன்னியர் ஸ்பரிசம் போல உறுத்தின. "எனக்கும் என் கணவருக்கும் உள்ள காதல் உறவுக்கும், பவானிக்கும் அவள் கணவருக்கும் உள்ள காதல் உறவுக்கும் ஏது வேறுபாடு? நான் என் கணவருடன் தனி வாழ்வு வாழ்ந்து வந்தது குற்றமா?" இந்தக் கேள்வியை யாரிடம் ராஜேசுவரி கேட்பாள்? உள்ளத்துடன் உரையாடினாள். அந்தரங்கத்திடம் அரற்றினாள். மனச்சாட்சியிடம் மன்றாடிக் கேட்டாள் கிடைத்த விடையோ சோர்வளித்தது.

## 34

வேதனை பற்று வைத்துவிட்டது. அழிக்க முயன்றாள்; அது செழித்தது. குற்றம் புரிந்து வந்த கள்ளக் காதலர்களைப் போல தானும் கணவனும் திரும்பி வந்திருப்பதாக பிரமை ஏற்பட்டது. தனிக்குடித்தன இன்பம் சுவைத்ததும் நாலு பேர் மெச்சிய நங்கையாகத் திகழ்ந்ததும் ஒரு இன்பக் கனவு தானோ என்று பிரமித்தாள். மாமியாரின் அதிருப்தியைப் பெற்றுவிட்டதாக அச்சமும், தன் நல்லறிவும் நல்லதனமும் போதாவோ என்ற சஞ்சலமும் சூழ்ந்தன. கனவாகப் போன அனுபவங்களையும், கற்பனைகளையும் நினைந்து கண் கலங்கினாள். கண் கலக்கத்தைத் தொடர்ந்து எப்படியெல்லாமோ யோசித்துப் பார்த்துவிட்டு, "சே, எனக்கு என்ன குறை? என் மாமனார், மாமியார் போல உத்தமர் யார்?" என்று அவர்களால் விளைந்த நன்மைகளை நினைவு கூர்வதும் ஆராய்வதுமாக மனந்தெளிந்தாள். மீண்டும் கலகலப்புடன் பழகும்தென்பு வந்துவிடும். இந்தக் கண் கலக்கமும் கலகலப்பும் அந்தச் சிறுவீட்டில் சொற்ப இடத்தில் தானே? அதனால் சாரதாம்பாள் கவனிக்கத் தவறவே இல்லை.

"கெட்டிக்காரி, புருஷனுக்கு வேலை இல்லை என்றதும் தழைந்து குழையத்தான் வேணும் என்று நன்றாகத் தெரிகிறதே! ஒரு நிமிஷத்தில் சமாளித்துக் கொண்டு நடிக்கிறாளே!" என்ற

அபிப்பிராயம் சாரதாம்பாளுக்கு வலுப்பட்டது. அந்த முடிவையே மனதில் ஏற்றுக் கொண்டுவிட்டார். உணர்ச்சிப் போருக்கு அந்த முதிய மனம் தயாராயில்லை. ஏற்பட்ட அபிப்பிராயத்தைத் தவிர்த்து விலக்கும் வலிமை இல்லை. விருப்பமும் இல்லை.

ஆம் விருப்பமுமில்லை சாரதாம்பாளுக்கு. எந்த மனநிலை அவசியம் என்று சாரதாம்பாள் எண்ணினாரோ, அந்த மனநிலையில் தான் தம்மை நிலை நிறுத்தியிருந்தார். சாரதாம்பாளின் பெற்ற பாசம் புதல்வி பவானி விஷயத்திலே புது ஊற்றாகப் பெருகியிருந்தது. அந்த ஊற்று நீர் பெருகி ஓடிய வழியையே சாரதாம்பாள் பின்பற்றினார். "நாளைக்கு நல்ல மதிப்பு இருக்குமே அம்மா எனக்கு!" என்று அன்றொரு நாள் பவானி அழுது கொண்டே கேட்டாள் அல்லவா? அதை மறக்க ஏனோ சாரதாம்பாளுக்கு இயலவேயில்லை.

பவானி கேட்ட அந்தக் கேள்வி சாரதாம்பாளை மாற்றியிருந்தது. ஒரே மகள், செல்வ மகள், அவளிடம் எத்தனை குறை குற்றங்கள் இருக்கட்டுமே, அவள் அருமைப் புதல்வி. பெண்; பொன். தாய் தூற்றினால் ஊரும் உலகமும் தூற்றும். அது மட்டுமல்ல. அவளைத் தூற்றும்படியாக அவள் செய்த குற்றம் தான் என்ன? பிறந்தகம் என்ற சலுகையை வலியப் பெற்றுக் கொள்கிறாள். அவ்வளவு தானே? தாயிருக்கும் போதே பிறந்தகச் சலுகைகளை இழப்பானேன்?

ஆம், நாளைக்கு, அதாவது பெற்றவள் கண்ணை மூடிவிட்டால், ராஜேசுவரியும் ரகுபதியும் பவானிக்குப் பிறந்தகச் சலுகைகளைக் குறைவு இன்றி வழங்க வேண்டாமா?

இதுதான் சாரதாம்பாளின் புது மனமாக இருந்தது.

ரகுபதியும் ராஜேசுவரியும் வந்த பின்பு சாரதாம்பாளின் புது மனப்போக்கு தீவிரமாயிற்று. ஒரு நாள் ராஜேசுவரி, "உங்களைப் பார்க்கணும் என்று ஆவலாயிருந்தேன், அம்மா," என்று உண்மையைச் சொன்னாள். "உங்களையும் அக்காவையும்" என்று அவள் சொல்லவில்லை. பவானியிடம் தோன்றாத அன்பை அவள் பேச்சிலோ நடிப்பிலோ காட்டவில்லை. ராஜேசுவரிக்கு பவானியிடம் மதிப்புக் குறைவு ஏற்படக் கூடாது; பவானிக்கு இல்லாத முக்கியத்துவம் ராஜேசுவரிக்கு 'இந்த வீட்டில்' கிடையாது. நாட்டுப் பெண்ணை வைக்க வேண்டிய இடத்தில் தான் வைக்க வேண்டும்; இது தான் சாரதாம்பாளின் உள்ளத்திலே ஏறியிருந்த சாயம். அதற்கேற்றாப்போல நாவும் வர்ணங்காட்டியது. பவானியைத் தாங்கிப் பேசிப் புகழ்வதும், ராஜேசுவரி பவானியை விட சிறப்புக் குறைந்தவள் தான் என்று பொருள்பட பேசுவதும் சாரதாம்பாளின் வழக்கம் ஆகிவிட்டது. சதா பேசவில்லை. ஆனால் பேசிய சொற்ப சமயங்களிலே கருத்து மட்டும் அதாகவே இருந்தது.

நைச்சியமாகப் பழக முற்பட்டிருந்தால் ராஜேசுவரி மாமியாரோடு ஒத்துப் பேசிக் கொண்டு பவானியின் புகழ் பாடியிருப்பாள். ஆனால் உள்ளொன்று புறமொன்றாகப் பேச அவள் முயற்சிக்கவில்லை. பவானியைப் பற்றி நினைத்தபோது அவள் செய்த அதிகார அட்டகாசமும், பாய்ச்சிய சொல்லம்புகளும் தான் நினைவில் எழுந்தன. அதனால் அவள் மனத்தூய்மைக்கு முரண்படும் வகையில் பேசவில்லை. மாமியார் பவானியைப் புகழ்ந்தால் அது தாயுள்ளத்தில் இயல்பு என்ற மரியாதை கொடுத்து ஏற்றாள். அவ்வளவு தான்.

ராஜேசுவரியின் இந்த அமைதியும் நிதானமும் தான் சாரதாம்பாளுக்கு கசந்தன.

"நான் போன பிறகு என் பெண்ணுக்குப் பிறந்தக உறவு எப்படியிருக்கும்?" என்ற கற்பனை மகிழ்ச்சி அளிக்க மறுத்தது. "இப்போதே இந்தப் பெண்ணுக்கு பவானியிடம் மனத்தாங்கல்தான்!" என்று நினைத்தபோது, 'இந்தப் பெண்', தொலைவில் துரத்தப்பட்டாள். அந்த வருங்கால ராஜேசுவரி கற்பனை ராஜேசுவரி, அச்சுறுத்தினாள்!

பெற்ற பாசம் பொங்கியது. கொண்ட பாசம் அதிலே முழுகிப்போயிற்று. அன்பு வளர கனிவு தான் பாய்ச்ச வேண்டும். செடிக்கு நீர் தேவை. ஆனால் அந்த நீர் வெந்நீர் என்று மாறினால்? செடியின் கதி என்ன?

கணவனின் உள்ளன்பு கிடைத்தது ராஜேசுவரிக்கு. மாமியாரின் வெளியன்பு கிடைத்தது. இரண்டுமே துன்பு செய்தன அவளை. சிந்தனைகள் பலவாறு எழும்பி அலை புரண்டன. தெய்வீகமான பாற்கடல் போன்று விளங்கிய உள்ளம் கொந்தளித்தது. நல்ல நினைப்புகளும்

பொல்லா நினைப்புகளும் இயங்கின. அவளைப் பொறுத்தமட்டில் பொல்லா நினைப்புகள் எவை? மாமியார் மனதிலே அன்பு குறைவு தானோ என்ற சம்சயமும், புக்ககம் என்றாலே இப்படித்தானோ என்ற சஞ்சலமும் தான். அரவம் போல வேதனை சீறிற்று. மாறாத அன்பும் தேயாத பாசமும் வேண்டும் என்ற ஆவலுடன், அமுதம் போன்ற உறுதியை நாடி அவள் மனம் சிந்தனைக் கடல் ஆயிற்று. ஆனால் அமுதம் கிடைக்கும் முன் நஞ்சு பிறந்தது!

அதை நெஞ்சிலே தாங்கிக் கொள்ள ஈசுவரன் வர வேண்டுமே!

நஞ்சு பரவக்கூடாது. தன்னுடைய சூழ்நிலையிலே கொந்தளிப்பும், மற்றவர்களோடு மனவேற்றுமையும் கூடாது; இவ்வாறு விரும்பினாள் ராஜேசுவரி. இறைவனை வேண்டினாள்.

இறைவன் அருள் செய்தார்!

"அம்மா, நான் போகட்டுமா அம்மாவின் உதவிக்கு? பாட்டிக்கும் உடம்பு தள்ளாது. எனக்கும், தம்பியா, தங்கையா, எப்படியிருக்கிறது என்று மனசு குறுகுறுத்துக் கொண்டே இருக்கும்! அதனால் நானே போய் உதவி செய்கிறேனே!" என்ற ராஜேசுவரி, நம்பிக்கை, ஆசை, ஆவல், எல்லாம் வெளியிட்டுக் கேட்டாள்.

ரகுபதியும் ஆமோதித்தான். "அப்புறம் போய்ப் பார்க்க ஆசைப்படுவாள். முன்னதாகப் போனால் உதவியாகவாவது இருப்பாள்" என்று சொன்னான்.

"பாட்டியில்லாமல் உன் அம்மா தைரியமாக இருக்கணுமே, இருந்து பழக்கமா?" என்று கேட்டார் சாரதாம்பாள்.

அங்கிருந்து விலகிப் போய் இருக்கும் விருப்பம் ராஜேசுவரிக்கு இருக்கிறது என்பதை, பவானியின் அன்னையான சாரதாம்பாள் ஊகிக்க முடியாதா? ஊகித்தார்.

"பாட்டி வந்தாலும் தான் என்ன அம்மா? வயசாச்சு, நான் போனால் கொள்ளையாய் ஒத்தாசை செய்வேன். கண்ணன் பிறந்தபோது பாட்டி வந்தாரே, நான் ஒரு உதவி கூட செய்யவில்லை. சாப்பிட்ட இலை கூட எடுத்து எறியவில்லை. நினைத்தால் வெட்கமாயிருக்கு. அதற்கெல்லாம் ஈடு செய்துவிடுகிறேன். பாட்டி மனசும் குளிரும்!" என்று சொன்னாள் ராஜேசுவரி, உற்சாகமாக.

"பவானியை எனக்கு ஈடாக்க வேண்டாம், நான் பிறந்தகத்தில் போய் அதிகாரம் செய்து கொட்டமடிக்கமாட்டேன்," என்று பெருமிதம் அவளுக்கு உள்ளூர இருந்தது, அப்படிப் பேசினாள்.

"பல சலுகைகளோடு உதவிகளும் காரியங்களும் செய்து ராணி போல வீட்டை வளைய வரப் பிறந்தகம் போகிறோம்!" என்ற மலர்ச்சியே ராஜேசுவரியிடம் குடி கொண்டது. அவளுடைய பிறந்தக ஆர்வம் ரகுபதியை சற்று உறுத்திற்று! விடை கொடுத்து அனுப்பும்போது அவன் முகம் பொலிவிழந்து போயிற்று! "இந்தப் பெண் குலத்திற்கே பிறந்தகம் தான் பெரும் பேறு! ராஜேசுவரிக்கும் கூடத்தான்!" என்ற சிந்தனையோடு வீடு மீண்டான்.

அன்னையின் மகப்பேறு சமயம் உதவி செய்ய ராஜேசுவரி பிறந்தகம் வந்திருக்கிறாள் என்று அறிந்த அண்டை அயல் நண்பர்கள், ஆவலுடன் ஓடோடி வந்து பேசிப் பாராட்டினார்கள். 'உனக்கு உன் அம்மா மகப்பேறு செய்விக்கட்டும், அடுத்த ஆண்டு," என்று சிலர் வாழ்த்தியபோது ராஜேசுவரி புன்னகையே வடிவாயிருந்தாள். கொஞ்ச காலமாக மனதை வாட்டிய துன்பமெல்லாம் அந்த சூழ்நிலையில் மறைந்து போயின. சந்தோஷம் நிறைந்திருந்தது. பொல்லாங்கு பெறாமல், பொல்லா நினைப்புகளால் துன்புறாமல் அமைதியுடன் இருக்க பிறந்தகம் வாய்த்திருப்பதை எண்ணி மகிழ்ந்தாள். விசாலத்தின் மகிழ்ச்சியும் அதற்கு மேல் இருந்தது. தன்னைப் பெற்ற தாய் செய்ய வேண்டிய பணியை தான் பெற்ற மகளே செய்யட்டும் என்று முடிவு செய்திருந்தபோது, சற்று தயக்கம் இருந்தது. ஆனால் ராஜேசுவரி மனமுவந்து ஆவலாக வந்துவிட்டதும், கலப்பற்ற பெருமிதமே உண்டாகியது.

"உன்னை அனுப்புகிறதற்கு எல்லோருக்கும் சந்தோஷம் தானே!" என்ற கேட்டாள் மகளை.

"பெருமையாகக் கூட இருக்கும்," என்றார் நடராஜன். அண்டை அயலாரின் பாராட்டுக்களை அவர் அறிந்திருந்தாரே! "அனுப்புகிறவர்களுக்கு எப்படியோ? எனக்கு மட்டும் அந்த இடத்திலிருந்து கிளம்பினோமே என்று சந்தோஷம் தான். ஆனால் பெருமையாக இல்லை. சிறுமையாகத்தான்

தோன்றுகிறது!" என்று சொல்லிவிட்டாள் ராஜேசுவரி. உடனே நாக்கைக் கடித்துக் கொண்டாள். பிறந்தகம் சீராட வர முடியாததைச் சிறுமையாக நினைப்பதாக பெற்றோர் நினைத்துவிடக்கூடுமோ? அவள் மனம் சிறுமைப்பட்டுத் துன்புற்றதைத் தான் அவள் குறிப்பிடுகிறாள். வார்த்தை விழுந்த விதம் தான் வேறு!

பெற்றோர் திகைப்பதைப் பார்த்தாள். "பட்டணத்தில் தினமும் ஒரு விசேஷம் நடக்கும். எத்தனைப் பாட்டுக் கச்சேரிகள், வாரந்தோறும். ஒரு கச்சேரி கூட கேட்கவில்லை, மூன்று மாதம் இருந்துங்கூட." என்றாள் தொண்டையடைக்க.

"எங்களுக்கு மூன்று கார்டு போட்டாய், மூன்று மாதத்தில்," என்று சிரித்தார் தந்தை.

"என்ன எழுதுவது? அது தான் கார்டு போதும் என்று இருந்தேன். வீட்டில் இத்தனை அப்பளம் இட்டோம்; இந்த இடத்தில் லக்ஷத்தி நாலு தடவை சுற்றி சுற்றி வந்தேன் என்று புள்ளிக் கணக்கு எழுதுகிறதா?" என்று கேட்ட ராஜேசுவரியின் குரல் கம்மிற்று.

"பிடிலை வாசித்தாயோல்லியோ?"..... இந்தக் கேள்வி ராஜேசுவரியை துடிக்கச் செய்தது.

"பிடில் தான், பிடில்! வீடு ஒரு குடில்! உட்கார்ந்து வாசிக்க, இடமா நேரமா?"

"ஏன், மூன்று பேர் தானே உன்னைத் தவிர?"

'மூன்_று பேர் தான், ஆனால் மூன்று பேரில் ஒருவராவது என் பிடிலைப் பற்றியோ விரலைப் பற்றியோ அக்கரை காறுட்டியதுண்டா?' என்ற எண்ணம் தோன்றவே, பொல பொலவெனக் விழிகளிலிருந்து கண்ணீர் உதிர்ந்தது,

"ஏன்? அழுகிறாயா என்ன?"

பதில் பேசாமல் கண்களைத் துடைத்துக் கொண்டு, விரலை ஏக்கமுடன் பார்த்தாள் ராஜேசுவரி. விசாலம் பேசவே தோன்றாமல் மௌனமானாள்.

நடராஜன், "நீ ஆசையாய்ப் பாடுகிறாய், பிடில் வாசிக்கிறாய் என்று அவர்கள் அறியும்படி காட்டிக் கொள்ளணும். நீ இங்கே தான் பாட்டு விஷயமாய் கவனம் செலுத்துகிறாய், இல்லையா?" என்று கேட்டார்.

ராஜேசுவரி மறுமொழி கொடுக்கவில்லை.

சிஷ்யையைப் பார்க்க சர்மா வாத்தியார் வந்தபோதும், ராஜேசுவரி கண்ணீர் மல்க நின்றாள். காயம்பட்ட குழந்தைக்கு தாயைக் கண்டதும் அழுகை வருமே, அது போல நெகிழ்ந்து போனாள் ராஜேசுவரி.

"ஏன் அதென்ன அப்படிக் கண்ணீர்?" என்று அவர் திடுக்குற்றார்.

"அதென்னமோ தெரியவில்லை." என்று விசாலம் துவங்கியபோது ராஜேசுவரி குறுக்கிட்டு, "மனசுதான் நொண்டியாகிவிட்டதே!" என்று படபடப்புடன் மொழிந்துவிட்டு கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

சர்மாவின் முகம் மாறிவிட்டது. விசாலத்தின் நோக்கு மாறுபட்டது. ராஜேசுவரியும் மறு கணம் மாறிவிட்டாள். புக்ககத்தைப் பற்றி குறை கூறுகிற பெண்ணாக தான் அங்கு நிற்பதாக ஒரு கணம் பீதி அவளைக் கவ்வியது. அதற்குப் பரிகாரம் செய்யத் தோன்றிற்று.

"யாராவது தடுத்தால் கூட வேதனை. அதுவும் இல்லை. எப்படியோ அங்கே பாட்டுக்கும் பிடிலுக்கும் குந்தகம் வந்துவிடுகிறது." என்று குரல் தெளிவுடன் பகர்ந்தாள்.

சிஷ்யைகள் பலபேரைப் பார்த்திருந்த அனுபவ அறிவு தான் போலும், சர்மாவை சிறு நகை பூக்க வைத்தது. "கிடக்கட்டும் போ, அங்கே வாசிக்காததை, இங்கே வாசித்து ஈடு செய். கொஞ்சம் ராகம், ஸ்வரம் பாடிப் பழகு; நானும் அடிக்கடி வந்து சொல்லித் தருகிறேன். தசராவில் 'ஆந்திர பாஷாவர்த்தனி சமாஜ'த்தில் உனக்கு ஒரு நாள் பாட சந்தர்ப்பம் வருகிறது," என்று சர்மா அவளுக்கு ஊக்கம் அளித்தார்.

இழந்திருந்த தென்பெல்லாம் திரண்டு வந்துவிட்டதாக ராஜேசுவரி உணர்ந்தாள்.

நான்காண்டுகளுக்குப் பிறகு தன்னுடைய வாழ்க்கையில் பழைய அனுபவம் மீண்டும் ஏற்படப் போவதை அவள் கும்மாளமாக வரவேற்றாள். மேடை ஏறிப் பாடி இருக்கிறாள் முன்பு. ஆனால் இடைக்காலத்தில், வீட்டு கூடத்தில் பாடக் கூட பயப்படும் படி கேவலமாகிவிட்டாள். இப்போதும் இன்னும் தன்னிடம் இசையார்வம் குமிழியிடுவதை மாமியார் உணர வேண்டும். உணர்ந்து அந்த ஆசையை ஊக்கி வளர்க்க வேண்டும். இப்படியெல்லாம் ஆசை பொங்க, பாட்டுப் பயிற்சியில் இறங்கினாள். பவானி பிறந்தகத்தில் பாட்டுக் கற்றாள். ராஜேசுவரியோ, பிறந்தகத்தில் பாட்டுப் பயிற்சிப் பெருக்கி, ஊரார் கேட்டு மகிழும்படி தேவி சந்நிதியில் பாடப் போகிறாள். சாரதாம்பாள் பிரமிக்க மாட்டாரா?

பாட்டுப் பயிற்சியில் முனைந்தாலும், ராஜேசுவரி தான் பணியாற்ற வந்த கடமையை மறக்கவில்லை. தாய்க்கு உதவி செய்வதிலே பெருமிதம் உண்டாயிற்று. தன்னிடமுள்ள கலையார்வத்தையும், செயல் திறனையும் சிறப்பியல்புகளையும் எத்தனை வெளிப்படுத்த முடியுமோ, அத்தனையையும் வெளிப்படுத்தி, புகழுரையில் நீந்திக் களிக்க விரும்பி வெற்றியும் கண்டாள் அவள். சிறப்புக் குன்றிவிட்டதாக ஐயம் கொண்டு கலங்கியிருந்தாள் அல்லவா? அதற்குப் பரிகாரமாக புகழில் உறுதியும் அந்தரங்கத்தில் அமைதியும் பெற விழைந்தாள். புக்ககத்தில் உணர்ச்சிகளை கட்டுப்படுத்தி ஆற்றல்களை ஒடுக்கியதற்கு ஈடு இப்போது செய்தாள்.

"தாயின் மகப்பேறுக்குப் பாடுபட வந்தவள், பாட்டுப் பாடவுங்கூட இத்தனை ஊக்கமாயிருக்கிறாளே! சகலகலாவல்லி தான், ராஜம், சுறுசுறுப்பின் நிலைக் களன்!" என்று அடுத்தகத்து சீதம்மா பாராட்டு முழக்கிப் பறை சாற்றினாள்.

"இந்த வயதிலேயே சுறுசுறுப்பு வேண்டாமா?" என்று சிரித்த ராஜேசுவரியின் மன நிறைவு அலாதியாய் இருந்தது. அந்த மன நிறைவிலே அவள், " என் மாமியாரின் சுறுசுறுப்பைப் பார்த்தால் என்ன சொல்லுவீர்களோ?" என்றும் சொன்னாள்; அதனால் அவளுடைய மனநிறைவின் தரம் மேலும் உயர்ந்தது.

ராஜேசுவரியின் அந்தரங்கம் தான் என்ன? அவளுடைய அபிலாஷைதான் எது? அவளுக்கு என்ன வருத்தம் உள்ளூர? அன்பு சூழ்ந்த புக்ககம் என்று கருதி ஏமாற்றம் அடைந்த அதிர்ச்சி தான் தாளவில்லை அவளுக்கு என்றால், இப்போது இசைக்கு ஊறு என்று அவள் அழுவானேன்? இதென்ன முரணான மனப்போக்கு?

ஆமாம், முரண் செய்து குறும்பு செய்வது எப்போதும் மனம் தான். அது ஜகத் பிரசித்தமாயிற்றே! நல்லுணர்ச்சிகளும், புரைசல்களும் இணைந்த வேலை செய்யும்போது எந்த மனமும் புதிர் தான்! "அன்பு செறிந்த புக்ககம்" என்று பெருமை பேசிப் பெருமை அடைந்திருந்தவள் ராஜேசுவரி. தான் நினைத்ததெல்லாம் பிரமை தானோ என்ற பிரமை பிடித்திருந்தது அவளை. அப்படி நினைக்கவும் பிடிக்கவில்லை. நம்பவும் முடியவில்லை. "பொல்லாத நாட்டுப் பெண் ஆகிவிடுகிறேனே கடவுளே" என்று பீதி கவ்வியது. அதற்காக வேண்டி அவள் தன்னையே நொந்தாள். "பாழும் மனசு, என் மனசுதான். இசையாவத்தினால் கட்டுப்பாடு வெறுக்கிறது. பாட்டுப் பாட நேரமும் இடமும் ஒப்பவில்லையே என்று ஏங்கிப் போய் தவறு செய்கிறது! நானோ இந்த ஆர்வமும் அறிவும் இல்லாமல் ஜடமாய் இருந்தால், மாமியாரின் அப்பளத்துடன் ஒட்டிக் கொண்டு விடமாட்டேனா?" என்று தன்னையே நொந்து கொண்டாள். அதனால் தான், விடுதலை வேட்கையை, இசையார்வமாக மாற்றிக் கொண்டு வெற்றியும் அடைந்தாள். நிகழ்ச்சிகளிலே ராஜேசுவரியின் குரலிசை சேர்க்கப்பட்டது. கணவனுக்குத் தெரிவித்துவிட்டாள். அவள் 'சந்தோஷம்' என்று தெரிவித்தாள். வியப்போ பெருமையோ புலப்படுத்தவில்லை.

ராஜேசுவரியின் இசை அரங்கு வெற்றிகரமாக நடந்தேறியது.

"உம், மெட்ராஸிலிருந்து வந்திருக்கிறாள். புதுப் புதுப் பாட்டுக்களை பாடுகிறாள். சர்மாகாருவின் சிஷ்யைகள் பாடும் 'டிரேட் மார்க்' பாட்டுக்களைக் கேட்டு அலுத்த நமக்கு, இது பேஷான ஒரு மாறுதல். சர்மாகாருவே கூட வாசிக்கத் தடுமாறினாரே!" என்று விமரிசனம் செய்தனர் சிலர்.

"ஐந்து வருஷங் கழித்து நமது ராஜம் பாடுவதைக் கேட்டோம்! அவள் பாட்டு தரம் உயர்ந்து இருப்பதையும் அறிந்தோம், விவாகம் வித்யா நாசம் செய்யவில்லை!" என்று ஆறுதலடைந்து

மெச்சினர் சிலர்.

"மாமனாருக்கும் புருஷனுக்கும் சங்கீதம் என்றால் ப்ரீதியாம். இவள் பாட்டும் சோபிக்கிறது!" என்று யாரோ சொன்னபோது, இன்னொருவர், "இந்த ஊர் என்று நினைத்தீர்களா மெட்ராஸை? இல்லை, நம்ம மாதிரி சங்கீதத்தில் நிரக்ஷரகுக்ஷிகளா தமிழர்கள்? அந்தப் பக்கம் பாட்டுத் தெரியாத பேர் யார்? பாட்டு என்றால் தண்டனிட்டு ஆதரிக்காதவர் தான் உண்டா?" என்று சண்டைக்குப் போனா பல சமயங்களில் பல பேர் இவ்வாறு பேசியதைக் கேட்டு ராஜேசுவரி அடக்கமான புன்னகைகள் பூத்தாள்.

"எத்தனை காலமாச்சு? நானும் எனக்கு இசையில் திறமை இருக்கிறது, அது வளம் பெறும் சக்தி இருக்கிறது என்று பிறருக்குக் காட்டி நானே உறுதி பெறவும் முடிந்ததே," என்று ஆறுதல் அவளுக்கு. பவானி கற்றபோது கேட்டுப் பாடமான கீர்த்தனைகளைத் தான் 'புதுப்பாட்டுக்கள்' என மெச்சினார்கள் நண்பர்கள். குரு முகமாகக் கற்று பயிற்சியும் ஒழுங்காய்ச் செய்தால் யாரைத்தான் மிஞ்ச முடியாது இசையில்?

இதை தந்தையிடம் சொன்னாள். அதற்கு அவர் என்ன சொன்னார்? "இந்த ஆர்வம் தான் அதிகம் சக்தி படைத்ததாக்கும்! முன்பு, நீ கற்றபோது எத்தனை சிரத்தைக் குறைவு? அம்மா சொல்லுவாளே, ஒரு பாட்டு இரண்டு மாதம் இழுபடுகிறதே என்று" சிரித்தபடியே சொன்னார் அவர்.

ராஜேசுவரி ஆமோதித்தாள். "என்னுடைய சிரத்தைக் குறைவு ஆர்வமாக மாறிச் செழிக்க புக்ககட் சூழ்நிலை உதவியது! அதற்கு வந்தனம், வந்தனம்!" என்று ஒரு நன்றி பிறந்தது.

எந்த சூழ்நிலை இசையார்வம் கிண்டிவிட்டதோ, அதே சூழ்நிலை வஞ்சிக்கிறது, ஆசை காட்டி ஏமாற்றித் துன்புறுத்துகிறது, என்று வருத்தமாகத்தான் இருந்தது.

சாம்பசிவம் வந்தார். "லயசுத்தம் போதாது. ராக ஞானமும் ஸ்வர ஞானமும் கூட, லயத்துக்கு அப்புறம்தான் தெரியுமோன்னோ?" என்று அவர் கேட்டார்.

இது உறைத்தது அவளுக்கு. பாராட்டுக்களை அடக்கமாகவும் சகஜமாகவும் ஏற்றவள், இந்த விமரிசனத்தைக் கேட்டுக் கலங்கினாள்.

லயமும் சுருதியும் இசையின் மாதா பிதா என்று தெரியும் அவளுக்கு. அவளிடம் லய சுத்தம் போதாது என்று சர்மாகாருவும் இந்த நாளில் சொல்லிக் கொண்டுதான் இருக்கிறார். முன்பெல்லாம் லயம் தவறாதவள் தான். பயிற்சிக் குறைவினால் சண்டி மாடு போல மிருதங்ககாரருக்கு தொந்தரவு கொடுக்கும்படியாகிவிட்டது. ஆனால் அவள் பாடிய புதுப்பாட்டுக்கள் கூட தாளம் தவறவில்லை. ஏதோ ஸ்வரம் போடும் போது இழுத்துக் கொண்டு போயிற்று சொற்ப இடங்களில், அது தப்பு தான். ஆனால், ஆனால்..... எத்தனைப் பயிற்சி குறைவு இருந்திருக்கிறது, கடந்த சில ஆண்டுகளில். அந்த நிலையிலிருந்தவள் எத்தனை துரிதமாக சக்தியை மீட்டாளே, அதுவே பெருமையாயிற்றே அதை சாம்பசிவம் மறந்தார் என்றோ, அவர் அப்படிச் சொல்லவில்லை என்றோ ராஜேசுவரி வருந்தவில்லை. லயஞானக் குறையைச் சொன்னவர், 'ஆனால், ராகமாலிகை பேஷ்," என்று சொல்லியிருக்கலாம் என்று வருத்தப்பட்டாள். ஆம், ஜம்மென்று சுருதியோடு ஆதி முதலே ஐக்கியமாகி அவள் இசைத்த கீர்த்தனைகளை மறந்தார். இரண்டே நாளில் கற்று, அதை நேர்த்தியின் சிகரமாகப் பண்ணிசைத்து, கேட்டவர் மனதில் ஒலித்துக் கொண்டே இருக்கும்படி செய்தாளே, அந்த ராகமாலிகை விருத்தத்தை அவர் குறிப்பிடவில்லை.

"இங்கே தான் பாடுகிறேன். பாட்டு பாட்டு என்று முழக்கி முழங்குகிறேன். அங்கே எப்படி இருக்கிறேன்? அதை இந்த மாமா அறிவாரா?" என்று அவள் எண்ணியபோது, 'அங்கே' என்னும் சொல், மனத்தாழத்திலே இன்பமற்றுத் தான் ஒலித்தது. இத்தனைக்கும் ரகுபதியும் 'அங்கே' தான் இருந்தான்! அந்த நினைவையும் மீறித்தான் பிறந்தது வருத்தம். ஒரு புறம் தோன்றிய நன்றியையும் குப்புறத் தள்ளிவிட்டுத்தான் பொங்கியது வருத்தம்.

மனது குரங்குதான். அது பூனைகள் போல் கள்ளத்தனம் படைத்த ஆசை, உணர்ச்சி இரண்டுக்கும் நியாயம் வழங்க முற்படுகிறது. ஆசைக்கும், உணர்ச்சிக்கும் ஏறத்தாழவே பங்கு காட்டுகிறது

மனது! (கடைசியில் குரங்கு வழங்கும் நியாயம், அநியாயத்தில் சிகரமாக விளங்குகிறது!) ராஜேசுவரி விஷயத்தில், ராஜேசுவரியின் ஆசையோ இசை; உணர்ச்சியோ சுதந்தரம். இரண்டுக்கும் மனது சமாதானம் அளிக்க வேண்டியிருந்தது. நியாயம் என்ற பிடிவாதத்தின் பலனாக ராஜேசுவரி பொறுமையாகத்தான் காத்திருந்தாள், ஆசையும் உணர்ச்சியும் நிறைந்தவளாய்.

ராஜேசுவரிக்கு, தன் இசைத் திறமை 'இனிமேல் வளரும் என்ற நம்பிக்கை இருந்தது. இனிமேல் எங்கு போனாலும், புக்ககமாக விளங்கும் சென்னைப்பட்டணம் போனாலும், கணவனுக்கு வேலை கிடைத்து எங்கேயோ போய்விட்டாலும், தன்னிடம் பூத்து மலர்ந்திருக்கும் இசைக் கலையை வாட விடக்கூடாது, என்ற அவள் உறுதி பூண்டாள். முன்பு அந்த கீர்த்தனை அழகு, இந்தப்பாட்டு என்ன நேர்த்தி!" என்று உருப்படிகளைப் பற்றித்தான் நினைப்பாள். இராகங்களின் சுவையும் இன்பமும் அழகும் தெரியாது. இப்போது கொஞ்சகாலமாகத்தான் அவள் இசையிலே தெவிட்டாத இன்பம் கண்டாள். கீர்த்தனைகளைப் பற்றிய அக்கரையை விட, ராகம் பாடுவதிலும், நிரவல் செய்வதிலும், ஸ்வரம் போடுவதிலுமுள்ள கற்பனை அம்சத்தில் அக்கரை விழுந்தது. யாரோ பெரிய வித்வான் பல மணி நேரங்கள் ஒரு ராகத்தைப் பாடினார் என்று சர்மா சொன்னபோது அவள் மெய்சிலிர்த்தது. அந்தக் கலைஞருக்கு மானசீகமாக அஞ்சலி செய்ய கண்கள் குவிந்தன. அந்தக் கணம் நெஞ்சிலே ஒரு அபூர்வமான ஆசை பிறந்தது. அடுத்த ஜன்மத்திலாவது இசைக் களஞ்சியமாக ஒரு உயர் பிறவி எடுக்க வேண்டும் என்ற அந்த ஆத்மா நினைத்தது. கண்களைத் திறந்தபிறகு வேறு விதமாக எண்ணம் உதித்தது. "ஏன், இந்தப் பிறவியிலேயே முடியாதா? இருபது வயது கூட முடியவில்லையே இன்னும்? ஐந்து வாரப் பயிற்சியில் அவள் கண்ட பலனும், செய்த சாதனையும் கொஞ்சமாகவா இருந்தது? சிறு வயதில் செய்த பயிற்சியோ, பலமான அஸ்திவாரம். இனிமேல் செய்யும் பயிற்சி மாட மாளிகையாகக் கூடாது? ஐந்து வருடம் இடையறாப் பயிற்சி செய்தால் யாரைத்தான் மிஞ்ச முடியாது? முடியும். சற்று ஆதரவான சூழ்நிலை கிடைத்தால் போதும். கணவனுக்கு உத்தியோகமாகி எங்கேயோ போய்விட்டாலும், இனி அந்த எட்டு மாதங்களைப் போல, எல்லாம் சோபிக்கணும் என்றா நினைப்பவளாய், இராமல், பாட்டு சோபிக்கணும் என்ற கருத்துடன் இருந்து வெற்றி பெற வேண்டும். அது சிரமம் இல்லை என்று நன்றாக நம்பிகையும் தெளிவும் ஏற்படவே, ராஜேசுவரி அமைதி பெற்றாள். ஆம், இப்பொழுது மனது வழங்கிய நியாயத்திலே ஆசையின் பங்கு உணர்ச்சியின் பங்கை மிஞ்சியிருந்தது!

**********